# திருக்கோயில்


"என் கடன் பணி செய்து கிடப்பதே"



OFFICE OF THE STATE EDITOR
6 AUG 1978
MADRAS

தமிழ் நாடு அரசின் அறநிலைய
ஆட்சித்துறை வெளியீடு.

மாலை 15] பிரமாதீச - ஆடி, ஆவணி - சூலை 1978 [மணி 10



சென்னை யானை கவுனி வைகுண்டப் பெருமாள் கோயில்-குடநீராட்டு விழாவில் கலந்து கொண்ட பெருமக்கள்.

## பொருளடக்கம்


1. திருவாசகத்தில் அறிவியல்
2. கோயில்கள் இலக்கணம்
3. அம்பிகையின் அழகு வெள்ளம்
4. அருளிச் செயல் ஓதும் முறைகள்
5. பேதமை செய்த பெருங்கண்கள்
6. சிவஞான ஜனநாயகம்
7. விளக்கை விளக்கும் விளக்கு
8. அதிர வீசியாடுவார்
9. அடியவர்களின் செய்கை
10. திருமால் அடியார் இயல்புகள்
11. தஞ்சை மாவட்டக் கோயில்களின் வரலாறு
12. திருக்கழுக்குன்றத் தல புராணம்


### சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூபா பத்து மட்டும்  தனிப்பிரதி விலை ரூபா, ஒன்று மட்டும்.


'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது அவ்வவ்வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

OFFICE OF THE STATE EDITOR
100/Gn/73
6-AUG 1973
GAZETTEER UNIT




மாலை 15] பிரமாதீச - ஆடி, ஆவணி 1973 [மணி 10

# திருவாசகத்தில் அறிவியல்

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.]

முன்னுரை :

இந்தக் காலம் அறிவியற் காலம் (The Age of Science). இந்த இருபதாம் நூற்றாண்டு அறிவியல் நூற்றாண்டு (The Century of Science & Technology) எனப் பெரிதும் போற்றப்படுகின்றது. இந்நாளில் எல்லாத் துறைகளிலும், அறிவியலானது பெரிதும் பரவி ஊடுருவி வருகின்றது. பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் என்னும் பேரறிஞர் கூறுமாறு போல, ''நூற்றைம்பதாண்டுக் காலத்துக்குட்பட்ட அறிவியலானது, தனக்கு முற்பட்ட ஐயாயிரம் ஆண்டுக்காலத்துப் பண்பாட்டைத் தகர்த்தெறிய வல்லதாக இன்று பெரிதும் வளர்ந்து வருகின்றது. (Scientific Outlook, p. 9) மக்கள் எல்லோருமே அறிவியலிற் பெரிதும் ஈடுபாடும் ஆர்வமும் கொண்டு விளங்குகின்றனர். அறிவியல் என்று கூறினால், மக்கள் எதனையும் நம்ப முற்படுகின்றனர். மற்றையன எத்துணை மாட்சிமையுடையனவாயினும், மக்கள் மனத்தினை அவைகள் அவ்வளவாகக் கவருவதில்லை. இன்றுள்ள பொதுவான நிலை இது! இந்நிலையின் விளைவாகவே, ''திருவாசகத்தில் அறிவியல்'' என்ற தலைப்பினை ஒட்டி, நாம் ஒரு சிறிது கருதியுணர்தற்குரிய கடமை ஏற்பட்டுள்ளது.

கடினமும் சிறப்பும் :

திருவாசகத்தினைப் பற்றி ஒருசிறிது நினைக்க நேரும்போதெல்லாம், மாணிக்கவாசகரின் மாட்சி — அவர்தம் பக்தியின் சிறப்பு—சிவபிரான் அவரைத் திருப்பெருந்துறையில் ஆண்டுகொண்டருளிய செய்தி—திருவைந்தெழுத்து உபதேசம் — சிவபெருமான் மாணிக்கவாசகர் பொருட்டுச் செய்தருளிய திருவிளையாடல்கள் முதலியன பற்றியே, அறிஞர்கள் பொதுவாகப் பெரும்பாலும் பேசுவது வழக்கம். இடையிடையே திருவாசகத்தின் உருக்கச் சிறப்பு, அதனிற்

* சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில், திருக்கழுக்குன்றத்தில் ஆனிமகத் திருநாளில் நிகழ்ந்த மணிவாசகர் விழாவில் ஆற்றிய சொற்பொழிவினைத் தழுவியது. — ஆசிரியர்

JL Q2m 211,N59TK 173.15.10
14871

காணப்படும் சொற்பொருட் சுவைநலங்கள், சமய தத்துவ நுண்பொருட் கருத்துக்கள் என்பனபற்றியும், அறிஞர்கள் சிற்சிலபோது பேசி மகிழ்வதுண்டு. ஆனால், ''திருவாசகத்தில் அறிவியல்'' என்பன போன்ற தலைப்புக்களில் அண்மைக்காலம் வரையில் அறிஞர்கள் எவரும் பேசியதாகத் தெரியவில்லை. எனவே, இது மிகவும் கடினமான-ஆனாலும், இன்றியமையாத—ஒரு சிறந்த தலைப்பு ஆகும் என்பதில் ஐயம் இல்லை.

**அறிவியல் வளர்ச்சியின் விரிவு :**

''மனித அறிவானது, சமாளிக்க முடியாத நிலையில் விரிவாகி விட்டது. ஒவ்வோர் அறிவியலும், மேலும் பன்னிரண்டைப் பெருக்கி விட்டிருக்கின்றது. ஒன்று மற்றொன்றைவிட மிகவும் நுண்ணியதாக உள்ளது. தொலைநோக்காடியானது வானத்திலுள்ள விண்மீன்களையும் அவற்றின் இயக்கங்களையும் பற்றி, மனித மூளைக்கு எட்டாத பல செய்திகளை வெளிப்படுத்தியிருக்கின்றது; நிலநூல் இதற்கு முன்பெல்லாம் ஆயிரம் என்ற அளவில் பேசப்பெற்று வந்தனவற்றை, நூறுநூறாயிரம் என்று பேசும்படி செய்து விட்டது; பௌதிக நூல், அணுவில் ஒரு பேருலகையே கண்டுவிட்டிருக்கின்றது; உயிர்நூல், உடலின் ஒரு சிறு நுண்ணறையில் ஒருசிறிய உலகையே காண்கின்றது; உடலியல்நூல், ஒவ்வோர் உறுப்பிலும் எல்லையற்ற மறைபொருள் நுட்பத்தினை ஆராய்ந்திருக்கின்றது; மனநூல் ஒவ்வொரு கனவிலும் விந்தையான நிகழ்ச்சிகளை விவரிக்கின்றது; மனிதநூல், ஐயத்திற்கு இடமின்றி மனிதனின் பழைமையைப் புதிதாக வலியுறுத்துகின்றது; தொல்பொருள்நூல், புதைந்த நகரங்களையும், மறைந்த அரசுகளையும் அகழ்ந்தெடுக்கின்றது; வரலாற்று நூல், எல்லா வரலாறுகளையும் பொய் என்று நிறுவுகின்றது; இறைநூல் சரிகின்றது; அரசியற் கொள்கைகள் சிதைகின்றன; புதிய கண்டுபிடிப்புகள், வாழ்க்கையையும் போரினையும் சிக்கலாக்குகின்றன; பொருளியற் கொள்கைகள், சூழ்நிலைகளை மாற்றி உலகத்தையே நிலைகலங்கச் செய்கின்றன!

முன்பெல்லாம் ஏனைக் கலைகளைத் தனக்குத் துணையாக அழைத்துப் பணிகொண்டு வந்திருந்த தத்துவநூல், அவற்றை இணைத்து வைத்து இயக்கும் துணிவை இழந்து, உண்மை என்னும் போர்முனைகளினின்று தப்பி ஓடுகின்றது புரியாத-குறுகிய சந்துகளிற் புகுந்து நுழைந்துகொண்டு, வாழ்க்கையின் சிக்கல்களுக்கும் பொறுப்புகளுக்கும் அஞ்சி நடுங்கிப் பாதுகாப்பாக இருந்துவர முயல்கின்றது. இங்ஙனம் இன்று மனித அறிவானது, மனித மூளை தாங்க முடியாமல் தடுமாறும் அளவுக்குப் பெருகி வளர்ந்து விட்டது!'' என்று ''தத்துவத்தின் கதை'' என்னும் நூலில், வில் ட்யூரண்ட் (Prof. Will Durant) என்னும் பேராசிரியர் குறிப்பிடுகின்றார்.

**திருவாசகத்தில் அறிவியல் :**

இவ்வாறெல்லாம் மிக விரிந்து வளர்ந்துள்ள அறிவியற் கருத்துக்கள் அத்துணையும், திருவாசகத்தில் அமைந்துள்ளன என்று நாம் கூறத் துணியவில்லை. ஆயினும், அறிவியலையே பெரியதாக மதித்துத் திருவாசகம் போன்ற தெய்வ நூல்களை எளிதாக எண்ணிப் புறக்கணிப்பவர்க்கு, இத்தகைய நூல்களிலும் அறிவியல் உண்டு என்றும், இந்நூல்கள் அறிவியலுக்கு ஒரு சிறிதும் புறம்பானவை அல்ல என்றும், வலியுறுத்தி மொழிதலே, ஈண்டுநம் நோக்கம் ஆகும். ''உலகமானது கி.மு. 4004-ஆம் ஆண்டில், அக்டோபர் 23-ஆம் நாள், காலை 9-மணியளவில் படைக்கப்பட்டது'' *என்று ஒருவர் திட்டவட்டமாக வரையறை செய்து தெரிவித்ததுபோல, இங்கு நாம் ஏதும் கூறுவதற்கு இல்லை.

'பைந்தமிழ் நவின்ற செந்நாப்புலவர்' (குமரகுருபரர்), 'அழுதடியடைந்த அன்பர்' (பரஞ்சோதி முனிவர்), 'திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளை' (பட்டினத்தார்), 'திருவாதவூர்ச் சிவபாத்தியன்' (நம்பியாண்டார்), 'திருவாதவூர் மகிழ் செழுமறை முனிவர்' (பேராசிரியர்). என நம்முன்னைப் பெரியோர்கள் பலரும், பலவகைகளில்

---

* "Dr. John Lightfoot, Vice-Chancellor of the University of Cambirdge and 'one of the most eminent Hebrew scholars of his time', declared 'as the result of his most profound and exhaustive study of the Scriptures that the world and man were created by the Trinity on October 23, four thousand four B. C., at nine O' clock in the morning."

A. D. White.

ஆராய்ந்து போற்றும் அருட்பெருஞ் சான்ரோர் ஆகிய மாணிக்கவாசகரை, நாம் இங்கு ஒருவகையில் ஓர் அறிவியல் அறிஞர் என்னும் நிலையில் நோக்கி மகிழ முயலுவோமாக!

பக்தி வலையிற் படுவோன் :

அறிவியல் அறிஞர்கள் ஆகிய விஞ்ஞானிகள் பலதிறப்படுவர். 'நான் என்னுடைய தொலைநோக்காடி கொண்டு விண்ணகம் முழுவதையும் துருவிப் பார்த்துவிட்டேன். ஆனால் அங்கே கடவுள் காணப்படவில்லை' ("I had swept the whole heavens with my telescope, but I saw no god there"—Laplace) 'கடவுள் என்று ஒரு பொருள் இருந்தால், அவர் என்னுடைய சோதனைக் குழாய்க்குள் வந்து புகுந்து, உலகுக்கு வெளிப்படக் கடவர்' ("If there be any god, let Him come into my test-tube and manifest Himself to the world.") 'நாம் கடவுளை ஆராய்ந்தறிய முற்படுதல், இல்லாத ஒரு கறுப்புப் பூனையை, இருட்டறையிலே, ஒரு குருட்டு மனிதன்தேடி கண்டு பிடிக்க முயலுவதைப் போன்றதே யாகும்'' (A blind man searching for a black cat in a dark room, which is not there.") என்றெல்லாம் கூறும் ஒருசில உலகாயத விஞ்ஞானிகளைப் போன்றவர் அல்லர், நம் மாணிக்கவாசகர்!

கடவுளைத் தொலைநோக்காடியினாலும், சோதனைக் குழாயினாலும் ஆராய்ந்து கண்டறிதல் இயலாது! "பக்தி வலையிற்படுவோன் காண்க!'' என்பது நம் மாணிக்கவாசகர் அறிவுரை. இத்தகைய ஆராய்ச்சிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு அகப்படாது ஒளித்து நிற்கும் கள்வன் - கடவுள் என்பது, நம் மாணிக்கவாசகரின் கண்டு பிடிப்பு!

''மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்,
முறையுளி ஒற்றி முயன்றவர்க் கொளித்தும்,
ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்து
உற்றவர் வருந்த உறைப்பவர்க் கொளித்தும்,
மறைத்திறம் நோக்கி வருந்தினர்க்
கொளித்தும்,
இத்தந் திறத்திற் காண்டும்என் றிருந்தோர்க்கு
அத்தந் திறத்தின் அவ்வயின் ஒளித்தும்.......
பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும்
ஒளிக்கும் சோரனைக் கண்டனம்''

எனத் திருவாசகம், கடவுளின் இயல்பைக் கவினுறப் பாடியிருத்தல் காணலாம்! இறைவனைத் தொலைநோக்கியினாற் காண்டல் இயலாது, அருள் நோக்கினாலேயே அறிய முடியும் என்பது கருத்து.

மூலமுதற் காரணன் :

இந்நாளைய அறிவியலறிஞர்கள் சூரியன் சந்திரன் முதலிய விண்ணகப் பொருள்களையும், நெருப்பு நீர் காற்று முதலிய மண்ணகப் பொருள்களையும், பலவகைகளில் ஆராய்கின்றனர். ஆனால் இவற்றிற்கெல்லாம் மூல காரணமான முதற்பொருளைப் பற்றி, அவர்கள் ஆராய்ந்தறிய முற்படுவதில்லை. மாணிக்கவாசகர் ஆகிய நம் அறிவியலறிஞரோ, இவைகளை ஆராய்வதுடன், இறைவனே இவற்றில் இன்னின்ன இயல்புகளை ஏற்படச் செய்தான் என்றும் இனிதெடுத்து இயம்புகின்றார்.

சூரியனில் ஒளியும், சந்திரனில் குளிர்ச்சியும், நெருப்பில் வெப்பமும், வானில் திண்மையும், காற்றில் எழுச்சியும், நீரில் இன்சுவையும், மண்ணில் திண்மையும் உண்டாகச் செய்த மூலமுதற் காரணன் இறைவனே. ("There is certainly a Divine hand behind the phenomena of the universe.") அவனுக்கு நாம் நன்றியும் வணக்கமும் செலுத்துவோம் என அறிவுறுத்துகின்றார், நம் மாணிக்கவாசகர்!

''அருக்கனிற் சோதி அமைத்தோன்! திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன்! திண்திறல்
தீயின் வெம்மை செய்தோன்! பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன்! மேதகு
காலின் ஊக்கம் கண்டோன்! நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன்; வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன்! என்றென்று
எனைப்பல கோடி எனைப்பல பிறவும்
அனைத்தனைத் தவ்வயின் அடைத்தோன்...''

என்று திருவண்டப் பகுதியிலும்,

''பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி!
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி!
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி!
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி!
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி!''

என்று போற்றித் திருவகவலிலும், மாணிக்கவாசகர் ஆகிய அறிவியலறிஞர் பாடியிருத்தலை, நாம் திருவாசகத்திற் காணலாம்.

அணுவின் நுண்மை :

விஞ்ஞான உலகில், இந்நாளில் 'அணு' பெரிதும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது. இக்காலத்தை 'அணுயுகம்' (The Atomic Age) என்றே மக்கள் பெரிதும் குறிப்பிடுகின்றனர். நுண்ணிய பொருள்களிலெல்லாம் நுண்மை வாய்ந்தது அணு. அணுவின் நுண்மையினை இத்தகையதென வரையறுத்துக் கூறுதல், நம்மால் இயல்வதொன்றன்று. ஒரு குண்டூசியின் முனையில் எத்துணையோ கோடி அணுக்கள் அமைந்து கிடக்கின்றனவாம். ஒரு நொடிக்கு நூறுகோடி விழுக்காடு அகற்றினாலும், ஒரு குண்டூசியின் முனையில் அமைந்து கிடக்கும் பரமாணுக்களை அகற்ற இரண்டரை லட்சம் ஆண்டுகள் செல்லும் என அறிஞர் ஒருவர் கூறுகின்றார் எனின், அணுவின் நுண்ணிய தன்மை எத்தகைய நிலையினதாக இருத்தல் வேண்டும் என நாம் ஓரளவு எண்ணியுணரலாம். (1)

இத்துணை நுண்ணிய பரமாணுவைக் காட்டிலும், மிக மிக நுண்ணிய - அதி சூக்குமப்பொருளாக இறைவன் விளங்குகின்றான் என் மாணிக்கவாசகர் கூறுகின்றார். அணுவிற் காணப்படும் நுட்பத் தன்மையிலும் வியக்கத்தக்க நுட்பமானவன் இறைவன் என்னும் கருத்தினை,

''அணுத்தருந் தன்மையில்
ஐயோன் காண்க !''

எனவரும் திருவாசகத்துத் - திருவண்டப்பகுதியின் அகவல்வரி உணர்த்துதல் காணலாம். இறைவன் வியக்கத்தக்க நுட்பப் பொருளாக இலங்குபவன் என்பதனை,

''சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந்
தொன்றும் திருப்பெருந்துறையுறை சிவனே!
ஒன்றும்நீ அல்லை: அன்றிஒன் றில்லை;
யார்உனை அறியகிற் பாரே?''

எனவரும் சிறந்த திருவாசகப் பாடலில் மாணிக்கவாசகர் அழகுற விளக்கி அருள்கின்றார். இவ்வருமைத் திருப்பாடலின்கண், 'சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றும் திருப்பெருந்துறையுறை சிவன்' என இறைவனின் நுண்மைத் தன்மையினை விளக்கும் பகுதி, இந்நாளைய அணு ஆராய்ச்சிக் கருத்துக்களைத் தழுவி இருத்தல், அறிந்து இன்புறுதற்குரியது.

தாயிற் சிறந்த தயா :

தாயின் சிறப்பைப் போற்றாதவர் தரணியில் இல்லை. ஆத்திகர் நாத்திகர் அனைவருமே தாயின் மாண்பினைத் தகுதியுறப் புகழ்ந்து மகிழ்வர். விஞ்ஞானிகளாயினும், மெய்ஞ்ஞானிகளாயினும், அனைவரும் தாய் வயிற்றிற் பிறந்து, தாயினால் வளர்க்கப் பெற்றவர்களே யாவர். தாயின் தன்னிகர் இல்லாச் சிறப்புக்குக் காரணம், அவள் நமக்குப் பாலூட்டித் தாலாட்டி, நம்மைச் சீராட்டிப் பாராட்டி வளர்க்கின்றாள் என்பதேயாகும். தாயின் அன்பிற்குச் சமமாகக் கூறத்தக்கது, இவ்வுலகிற் பிறிதெதுவும் இல்லை. தாயின் சிறப்பே இங்ஙனம் இணையற்றதெனின், அத்தாய் நமக்குத் தரும் பாலைப் படைத்தளித்து அருளும் பரமனின் பெருமைக்கும் ஓர் எல்லை உண்டோ? தாயின் சிவந்தநிற இரத்தம், வெண்மைநிறம் அமைந்த பாலாக எங்ஙனம் மாற்றம் எய்துகின்றது? 400 அவுன்ஸ் இரத்தம் பரவுதலால் அன்றோ, ஓர் அவுன்ஸ் தாய்ப்பால் சுரக்கப் பெறுகின்றது. தாயின் இரத்தமே பாலாக மாறினாலும், இரத்தத்திலும் தாய்ப்பாலிலும் உள்ள சத்துப் பொருள்களின் தன்மையும் அளவும் ஏன் மாறுபடுகின்றன? எங்ஙனம் மாறுபடுகின்றன? விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு எட்டாத வியத்தகு செய்திகளாக அன்றோ, இவையனைத்தும் அற்புதமாக அமைந்து உள்ளன! (2)

1. ''As regards the size of Atoms, it has been said that, if we were to remove those contained in the head of an ordinary pin at the rate of a thousand million (1000,000,000) per second, we should have to carry on the process for 2,50,000 years. And yet each of these atoms, they tell us, is itself a solar system, with electrons whirling like planets around a central nucleus. The size of these electrons, as compared with the size of the atom, they say, is like a pea in one of the great cathedrals of Europe.

=S. J. Louis Leguen;

2. "The exact means by which the breast produces milk remains one of the mysteries of science. There is but one raw material it could draw on - blood - and the

பாலூட்டும் தாயினும், அப்பாலைப் படைத்து அளித்துதவும் பரமனின் அருட்டிறம் சாலவும் சிறந்ததொன்றன்றோ? இது பற்றியே, மாணிக்கவாசகர் இறைவனின் கருணைத் திறத்தினை வியந்து ஆங்காங்கே பின்வருமாறு புகழ்ந்து பாடியருள்கின்றார்: "தாயிற்சிறந்த தயாவான தத்துவனே" (சிவ பு. 64); "தாயே யாகி வளர்த்தனை போற்றி" (போற்றி. 87); "தாயி லாகிய இன்னருள் புரிந்த தலைவன்" (சதகம். 43); "தாயான தத்துவனை" (அம்மானை 7); "தாயான ஈசன்" (தெள்ளேணம். 12); "பால் நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்து" (பிடித்த. 9); "தாயாய் முலையைத் தருவானே" (ஆனந்த. 5);

**உள்ளது சிறத்தல் :**

"உள்ளது சிறத்தல்" (The theory of Evolution) என்னும் பரிணாமக் கொள்கை, சென்ற நூற்றாண்டில், சார்லஸ் டார்வின், ஆல்ஃபிரெட் ரஸ்ஸல்வாலஸ், தாமஸ் ஹக்ஸ்லி முதலிய விஞ்ஞானப் பேரறிஞர்களால் வேகமாகப் பரவத் தொடங்கியது. இக் கொள்கையைப் பற்றிய விஞ்ஞானக் குறிப்பு, திருவாசகம் சிவ புராணத்தில், காணக் கிடைக்கின்றது.

எல்லா உயிர்ப் பொருள்களும் நிலை இயல் (தாவரம்), இயங்கியல் (சங்கமம்) என இருவகைப்படும். தாவரவகையுள் கல் புல் பூடு மரம் என்னும் நான்கும், சங்கம வகையுள் புழு பாம்பு பறவை மிருகம் மனிதர் அசுரர் முனிவர் பேய் கணங்கள் தேவர் என்னும் பத்தும் அடங்கும்.

---

conversion of blood into milk is a stupendous chemical achievement.

Estimates indicate that 400 ounces of blood must circulate through breasts to make a single ounce of milk. Components of blood are totally unlike those of milk.

The milk that breasts produce is miraculous; chemists have never been able to duplicate it. It is exactly tailored to meet the needs of the infant, whatever the species."

—Family Doctor,

The British Medical Association.

இந்நிலவுலகிற் புற்பூண்டுகள் தோன்றுதற்கு முன்னர் எல்லா உயிர்களும் மலைகளின் அணுக்களிற் புலப்படாது கிடந்தன. பின்னர் உடம்புகள் பெறுதற்கு ஏற்ற தகுதியுற்ற காலத்தே, அவற்றினின்று முதலிற் புற்களும், அதன்பிற் பூண்டுகளும், அதன் பின் மரங்களும் தோன்றுவன வாயின.

இவ்வாறு நிலையியற் பொருள்களாய்ப் பிறந்து, அவற்றின்கண் இருந்து அறிவு சிறிது விளங்கி, அதனினும் மேற்பட்ட அறிவு விளங்குதற்குரிய தகுதிப்பாடு எய்திய நிலையில், உயிர்கள் இயங்கியற் பொருள்களில் ஈரறிவுயிர்களான புழுக்களாகவும், மூவறிவுடைய சிதல் எறும்புகளாகவும், நாலறிவு வாய்ந்த நண்டு தும்பிகளாகவும், ஐயறிவுடைய மிருகங்களாகவும், ஆறறிவு பெற்ற மனிதர் அசுரர்களாகவும், ஆறறிவின் மேம்பட்ட முனிவர் பேய் கணங்கள் தேவர் ஆகவும் பிறவி எடுக்கும். உயிர்களின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்பப் படிப்படியே, அவற்றின் உடம்பின் அமைப்பும் வளர்ச்சியுற்றுச் சிறப்பெய்தும் என்பது இதனால் அறியப்படும்.

இப்பரிணாமக் கொள்கை, மேலை நாட்டு விஞ்ஞானிகளே, புதுவதாகக் கண்டு பிடித்ததன்று. இக்கொள்கை, நம் முன்னோர்களால் நன்கு அறியப்பட்டிருந்த தொன்றேயாகும். "புராணங்களில் பல இடங்களில் திருமாலின் பத்துப் பிறவிகள் (தசாவதாரங்கள்) சொல்லப்படுகின்றன. கூர்தல் அல்லது உள்ளது சிறத்தல் (Evolution) முறைபற்றி, அப்பத்தையும் உற்று நோக்கின், படிப்படியாக உயிர்களின் பிறவி வளர்ச்சி புலனாகும். நம் நாட்டுப் பௌராணிகர்கள் பெரிய ஹெக்கல்கள், டார்வின்கள் போலும்" என்பர், தமிழ்த் தென்றல் திரு.வி. கல்யாண சுந்தரனார்.

இக்கருத்தினையே, தாம் எழுதியுள்ள "சமயமும் பண்பாடும் பற்றிய கூறுகள்" (Phases of Religion and Culture) என்னும் நூலிற் பேரறிஞர் ஒருவர் விவரித்திருத்தல் காணலாம். இந்நாளைய விஞ்ஞானிகள் பலவகை ஆராய்ச்சி நெறி முறைகளால் மிகவும் பாடுபட்டுக் காணும் அறிவியலுண்மைகளை, நம் முன்னோர்கள் தம் உள்ளொளியின் (Intuition) வாயிலாக, மிக

எளிதாகப் பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே அறிந்திருந்தனர். (3).

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்.

எனவரும் சிவபுராணத் திருவாசக வரிகள், ஏறத்தாழ ஆயிரத்து அறுநூறு ஆண்டுகட்கு முன்னரே, இந்நாளைய விஞ்ஞானிகள் கூறும் பரிணமக் கொள்கையைப் பற்றி ஒருவகையிற் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

வானநூல் ஆராய்ச்சி :

மாணிக்கவாசகர் ஆகிய நம் அறிவியல் அறிஞர், வானநூல் ஆராய்ச்சியிலும் தலை சிறந்திருந்தார் என்பது, அவர்தம் திருவாசகத்தாற் புலனாகின்றது. இரவு நேரங்களில் வானத்தில் எண்ணிலாத விண்மீன்கள் ஒளிர்ந்து கொண்டிருத்தலை நாம் காண்கின்றோம். பொதுவாக நம்முடைய வெறுங் கண்ணுக்குத் தெரிவன, ஏறத்தாழ 3000 விண்மீன்களேயாகும். ஒவ்வொரு விண்மீனும் நாம் வாழும் இந்நிலவுலகத்தைவிட, எத்தனையோ ஆயிரம் மடங்கு பெரியதாகும். சூரியன் நம் மண்ணுலகத்தினின்று 93,000, 000 மைல் தொலைவில் இருக்கின்றது. இச்சூரியனைவிட எத்தனையோ மடங்கு தொலைவில், எண்ணில்லாத பல விண்மீன்கள் வானத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. நமக்கு மிக அணித்தாக இருக்கும்விண்மீனின் தொலைவே, 25,500,000 மைல்கள் ஆகும் எனின், மிகமிக நெடுஞ்சேய்மையில் உள்ள விண்மீன்களின் தொலைவு எங்ஙனம் இருக்கும் என்பதனை, நாம் ஓரளவு கருதியுணர்ந்து கொள்ளலாம்.

ஒளியானது ஒருநொடி நேரத்தில், 186,000 மைல் விரைந்து செல்லும் தன்மையுடையது. அத்துணை விரைவு பெற்றிருந்தும், சில விண்மீன்களின் ஒளிக்கதிர்கள் இந்நிலவுலகத்தை அடைய எத்துணையோ பல ஒளியாண்டுகள் (Light Years) ஆகின்றன. இத்தகைய விண்மீன்கள் சுமார் நூறாயிரம் மில்லியன் மில்லியன்கள் (100,000, 000,000,000,000,000) இருப்பதாக அறிஞர்கள் ஆராய்ந்து கூறுகின்றனர். இத்துணை விண்மீன்களும் தம்முள் ஒன்றிற்கொன்று 180,000 ஒளியாண்டுகளின் தொலைவில் உள்ளன. இந்நிலவுலகத்திற்கு 500 மில்லியன் ஒளியாண்டுகளின் தொலைவிலும், பல விண்மீன்கள் இருக்கின்றன. சூரியனைவிட 28 மடங்கு ஒளிமிகுந்தது சிரியஸ்; 50 மடங்கு மிகுந்தது வேகா; 100 மடங்கு மிகுந்தது ஆர்க்டாஸ்; 1000 மடங்கு மிகுந்தது கேனோபஸ்; அதனினும் ஒளி மிகுந்தது ரிகல். (4)

இங்ஙனமெல்லாம் ஆராய்ந்து கூறும் வான நூலறிஞர்களின் கருத்துக்களை, ஓரளவு நம் மாணிக்கவாசகப் பெருமானும் அறிந்திருந்தார் என்பது, பின்வரும் திருவண்டப்பகுதி வரிகளால் தெளியப்படும்.

---

*(3)* "What has been sought to be achieved in the west by deductive work, by dialectics, by experimentation, by logical processes was apprehended and perceived in this country largely by means of intuition centuries, nay, millennia ago."

— Dr. C. P. Ramaswamy Aiyar,

Fundamentals of Hindu Faith and Culture.

4) "To our present knowledge there exist approximately a thousand million separate star-worlds, each comprising something like one hundred thousand million (100,000,000,000) stars, and many more beyond our range of vision.

This means that, within our range of vision, there seem to exist about one hundred thousand million million of stars; that is to say, a number represented by one with twenty Zeros (100,000,000,000,000,000,000); and there may exist many more beyond our range of vision.

Those thousand million star-world are said to be 1,800,000 light years distant from one another, and the most distant is said to be 500 million light years away from us.

And yet their millions of whirling suns are all poised and regulated in their motions through space by fixed law of attraction keeping them in their orbits through space."

— Sir Harold Spencer Jones

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன,
இல்நுழை கதிரின் துன்அணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன்! தெரியின்
வேதியன் தொகையொடு மாலவன் மிகுதியும்
தோற்றமும் சிறப்பும் ஈற்றொடு புணரிய
மாப்பே ரூழியும் நீக்கமும் நிலையும்
சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்து
எறியது வளியிற்
கொட்கப் பெயர்க்கும் குழகன்."

வான வெளியில் உலவிச் சுழலும் விண் மீன்கள் ஆகிய அண்டப் பகுதிகளின் உண்டைப் பிறக்கங்கள், அளப்பருந் தன்மையுடையனவாய், நூற்றொரு கோடியின் மேற்படி விரிந்தன என்றும்; அவற்றைக் கூர்ந்து நோக்கி ஓர்ந்து உணர வல்லவர்களுக்கு அவைகள் வளப்பெருங் காட்சியாகத் திகழ்வன என்றும் பிறவாறும், மாணிக்கவாசகர் இவ்வரிகளிற் குறிப்பிட்டிருத்தல், சர். ஜேம்ஸ் ஜீன்ஸ் தம்முடைய அதிசய உலகம் (The Mysterious Universe) என்னும் நூலில் விவரித்திருக்கும் கருத்துக்களை, நுண்ணிதின் உட்கொண்டிருக்கின்றன எனலாம்.

## கருவளர்ச்சி நூல் ஆராய்ச்சி :

மாணிக்கவாசகர், உயிர்களாகிய நமக்கெல்லாம் இறைவன் செய்து போதரும் பல வகை யுதவிகளையும் நினைப்பித்து, இறைவனின் அருள் நலத்தினை வியந்து போற்றி நன்றி பாராட்டுகின்றார். மனிதராகப் பிறந்துள்ள நாமெல்லாம் யானை முதலாக எறும்பு ஈறாக உள்ள பல்வேறு பிறவிகளை எடுத்து, மிகப்பல இன்னல்களைக் கடந்து,படிப்படியே உயர்ந்து, பின்னரே இம்மனிதப் பிறவியை அடைந்துள்ளோம். மனிதப் பிறப்பிலும் நம்மனோர் எய்தும் இன்னல்களுக்கு எல்லையேயில்லை. தாயின் வயிற்றில் நாம் பத்து மாதங்கள் கருவாகத் தங்கிக் கிடந்து, முறை முறையே உருவாகி வளர்ந்து, குழந்தையாக உலகில் வெளிப்படுவதற்குள், மிகப்பல இடர்ப்பாடுகளினின்று தப்பிப் பிழைக்கவேண்டியிருக்கின்றது. கருச்சிதைதல் (Abortion) என்னும் கேடுற்று நாம் தாயின் வயிற்றிலேயே இறந்து போய்விடாமல், ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகும் இடுக்கண்களை எல்லாம் நீக்கி, இறைவனே நமக்குத் துணையாக இருந்து நம்மைக் கருணையோடு காத்தருள்புரிகின்றான்.

"யானை முதலா எறும்பு ஈறாய
ஊனமில் யோனியின் உள்வினை பிழைத்தும்;
மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து
ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்;
ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்;
இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்;
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்;
ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்;
அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்;
ஆறு திங்களின் ஊறலர் பிழைத்தும்;
ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்;
எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்;
தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்......"

எனவரும் திருவாசகப் போற்றித் திருவகவல் வரிகள், தாயின் வயிற்றிற் பத்து மாதங்கள் தங்கிக் கருவானது வளர்ச்சி எய்தும் முறையினை, எத்துணை நுணுக்கமாக எடுத்துக் காட்டித் திறம்பட உணர்த்துகின்றன. இற்றை ஞான்றை மேற்புல அறிவியல் நூலார் மிகவும் நுணுகி ஆராய்ந்து கண்டுரைக்கும் கருத்தோற்றமும் வளர்ச்சி நிலைகளும் பற்றிய செய்திகளை, எக்ஸ்ரே முதலிய கருவிகள் எதுவும் இல்லாமலே, ஏறத்தாழ 1600 ஆண்டுகளுக்கு முன்பே அறிந்து குறிப்பிட்டிருக்கும் சிறப்பு மிகவும் வியந்து மகிழத் தக்கதன்றோ?

## இருதயமும் இறைவனும் :

இருதயம் (நெஞ்சப்பை) நம்முடைய உடலில் உள்ள ஒரு சிறப்புறுப்பு ஆகும். அஃது இல்லையேல், நமக்கு வாழ்வே இல்லை. அதன் அசைவும் இயக்கமும், நாம் உயிர் வாழ்தற்கு மிகவும் இன்றியமையாதவை. சராசரி மனித உடம்பில், ஏறத்தாழ 5 லிட்டர் முதல் 6 லீட்டர்கள் வரை இரத்தம் இருக்கின்றது. இந்த இரத்தமானது இடைவிடாமற் பயன்படுத்தப்பட்டும், புதுப்பிக்கப்பட்டுக் கொண்டும் வருகின்றது. இருதயமானது இரத்தத்தை ஓய்வு ஒழிவு இன்றி இயங்கிக் கொண்டிருக்கவும், உடம்பு முழுவதும் பரவிச் சுற்றிவரவும் செய்கின்றது. இத்தகைய இருதயம் என்னும் உறுப்பின் அமைப்பானது, மிகவும் வியத்தற்குரிய ஒரு பொறிபோன்றதாகும். இதனைத் தசையினால் இயன்ற ஒரு "வெளியேற்றியக்க நிலையம்" என நாம் குறிப்பிடுதல் பொருந்தும்.

இருதயமானது ஒவ்வொரு நிமிடமும் 12000 மைல் நீளமுடைய நாளங்களின் வழியாக உடலில் இரத்தம் பரவவும், மீண்டும் தன்பால் திரும்பி வந்து சேரவும் ஏற்றபடி அயராமல் இயங்கிக் கொண்டே இருக்கின்றது. ஒவ்வோர் 24 மணி நேரத்திற்கும் 1000 லிட்டர் அளவு இரத்தம் இருதயத்திற்கு வந்து கொண்டும், இருதயத்தினின்று சென்றுகொண்டும் உள்ளது. இத்தொழிலைச் செய்வதன் பொருட்டுச் செலவாகின்ற ஆற்றல், சராசரி அளவுள்ள ஒரு மனிதனை 1259 அடி உயரத்தில் எழும்பச் செய்வதற்குப் போதுமானதாகும்.

இயல்பான ஒரு மனித வாழ்வின் 70 ஆண்டுகளில் நம்முடைய இருதயம், 2,500,000,000 முறை துடிப்புற்று இயங்குகின்றது. அஃது ஒரு சிறிதும் ஓய்வு கொள்வதில்லை. பழுது பார்க்கப்படுவதற்காகச் சற்றேனும் நிற்பதில்லை. இத்தகைய ஓர் அற்புதக் கருவியை, நம்மனோர் எவரேனும் படைத்தல் இயலுமோ?[5]

வியப்பை விளைவிக்கும் இத்தகைய இருதயத்தின் இடைவிடாத் துடிப்பையும் இயக்கத்தையுமே, நம் மாணிக்கவாசகர் போன்ற அருளாளர்கள் ஆகிய சிவஞானச் செல்வர்கள், தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் நிகழும் சிவபிரானின் திருநடனம் என்று கொண்டு, வியந்து புகழ்ந்து போற்றியுள்ளனர் எனத் திண்ணிதிற் கூறலாம்.

மாணிக்கவாசகர் தில்லையிற் பலகாலம் வாழ்ந்தவர். தில்லையில் திருவாசகப் பகுதிகள் பல, அவரால் பாடப்பெற்றன. தில்லை நடராசப் பெருமானை வழிபட்டு மகிழ்ந்து, அவரோடு ஒன்றியவர் மாணிக்கவாசகர். அவரால் திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் சிறந்த நூல், அங்கேயே பாடப் பெற்றது. திருமுறைத் திருப்பதிகங்களை ஓதும்போதெல்லாம், ''திருச்சிற்றம்பலம்'' என்று கூறி, அதன் பின்னரே நாம் பாடத் தொடங்குகின்றோம்.

## திருச்சிற்றம்பலம் :

நம்முடைய இருதயமே, திருச்சிற்றம்பலம்; இருதயத்தின் தாமரை மொட்டுப் போன்ற அமைப்பே, ஓங்காரம்; இருதயத்தில் விளங்கும் மின்னாற்றலே, இறைவன்; அம் மின்னாற்றலின் அசைவே, இறைவனின் திருநடனம்; இருதயத்தில் விளங்கும் மூல முதல் நுண்ணொலியே, இறைவனின் திருவடிச் சிலம்பொலி; இருதயத்தின் சுற்று வடிவே, திருவாசிச் சுடரொளி.

நடராச வடிவின் அமைப்பினை வியந்து, பேரறிஞர் திரு. ஆனந்த குமாரசாமி அவர்கள், 'இது வெறும் கவிதைமட்டு மன்று, உயர்ந்ததோர் அறிவியலுண்மையும் ஆகும்' (It is not only poetry, but also science) எனப் புகழ்ந்திருத்தல், இங்கு நாம் சிந்தித்தற்குரியது.

## தெளிவுக் காட்சியும், கேள்வியும் :

மாணிக்கவாசகர், சிவபிரான் தமக்குச் செய்த அருளின் திறத்தினை வியந்து, "நாட்டார்கள் எல்லோரும் விழித்திருப்ப, நாய் போன்ற எனக்கே தவிசிட்டான்; நாயாகிய எனக்கே காட்டாதன எல்லாம் காட்டினான்; கேளாதன எல்லாம் கேட்பித்தான்; மீட்டும் நான் பிறந்து துன்புறுதபடி என்னைத் தன் அருளாற் காத்து ஆட்கொண்டான். எம் பெருமான் எனக்காகச் செய்தருளிய விந்தைகளை என்னென்பது!'' என மகிழ்ந்து பாடுகின்றார்.

கேட்டாரும் அறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே எல்லாம் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே

---

5. ''There is normally about 5 to 6 quarts (or litres) of blood in average human body. This blood, constantly being used up and renewed, is kept in constant movement and circulation by heart. The heart is itself a wonder.

It may be called a muscular pumping station. And it keeps on pumping the blood down into its 12,000 miles of pipeline and back to itself about once every minute. This means that every 24 hours it receives and pumps out about 10,000 litres of blood; and the energy it spends in doing this is enough to raise a normal sized man 1259 feet up in the air. This means that in a normal life of 70 years, our heart beats some 2,500,000,000 times; and that without rest and without any stop for repair! Do you think you or your father, could moke a pump like that ?''

—Louis Leguen, S. J.

**காட்டாதன எல்லாம் காட்டிப் பின்னும்**
**கேளாதன எல்லாம் கேட்பித் தென்னை**
**மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான்**
**எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே**
—திருச்சதகம், 28.

இப்பாடலின்கண், நம் மாணிக்கவாசகர் தமக்கு இறைவன் காட்டாதன எல்லாம் காட்டினுன் என்றது, இந்நாளைய அறிவிய லறிஞர்கள் பலர் ஆராய்ந்து வரும் தெளி வுக் காட்சி என்பதனையும்; கேளாதன எல் லாம் கேட்பித்தான் என்றது, இந்நாளைய அறிவியலறிஞர்கள் பலர் ஆராய்ந்து வரும் தெளிவுக் கேள்வி என்பதனையும் போன்ற சிறந்த அருட்பேறுகள் என நாம் கொள்ளு தல் கூடும். இத்தகைய ஆற்றல்களை E.S.P. (Extra-Sensorial-Powers) என்று, மறை பொருளியல் ஆய்வு அறிஞர்கள் வழங்கு வர்.(6)

**அறிவியல் அனுபவங்கள் :**

விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபடும் அறிஞர்கள், தத்தம் ஆராய்ச்சிகளில் தமக்கு ஏற்படும் அனுபவங்களை அவ்வப்போது குறித்து வைப்பது வழக்கம். மலேரியாக் காய்ச்சல், மஞ்சட்காய்ச்சல், புற்றுநோய், தொழுநோய் முதலியவற்றைப் போக்கும் மருந்துகளைக் கண்டுபிடிக்கப் பற்பல விஞ் ஞானிகள், தம்மையே பல கடுஞ்சோதனை களுக்கு உட்படுத்திக்கொண்டு, பல துன்பங் களை அனுபவித்து, அவற்றின் மூலம் தாம் கண்டறிந்த அநுபவங்களைக் குறித்து வைத்து, உலகுக்குப் பெருநலம் புரிந்துள் ளனர்.

பேராசிரியர் ஜே. பி. எஸ், ஹால்டேன் அவர்கள், Corbon-monoxide என்னும் வாயு வை உட்கொள்வதால் ஏற்படும் விளைவுகள் யாவை என்று அறியத், தம் உயிர்க்கு இறுதி பயக்கக்கூடியபல சோதனைகளுக்குத்தம்மைத் தாமே ஈடுபடுத்திக்கொண்டு, அவற்றின் மூலம் தாம் கண்டறிந்த அநுபவங்களைக் குறித்து வைத்துச், சுரங்கத் தொழிலாளர் களுக்கும் வானூர்தியாளருக்கும் பயன்படும் பல சாதனங்களை அமைக்கத் துணைபுரிந் தார்.

இங்ஙனமே நம் அறிவியலறிஞர் ஆகிய மாணிக்கவாசகரும், இறைவன் தமக்குச் செய்த அருள் நலத்தால் தாம்பெற்ற அருள் அனுபவங்களை, நமக்கும் பயன்படும் பொருட்டு, அழகிய இனிய **கவிதையாகக்** குறித்துக் கொடுத்துள்ளார்;

**அருளியல் அனுபவங்கள் :**

'எத்தனையும் அரிய கடவுள், எத்தனை யும் எளியனாய் வந்து, எனக்குத் தடக்கை யின் நெல்லிக்கனி ஆயினன். அவன் என் பாற் செய்த பேரருட்டிறனை யான் சொல் லும் வகையறியேன். நாயை ஒத்தவனை அடியேன், அவ்வருட் பேரின்பத்தினைத் தாங் குதற்கு இயலாதுள்ளேன்......... இறைவன் அருளிய பேரின்பத் தேறலை யான் குடித்தும் நிறைவு பெற்றிலேன். விழுங்கியும் பொறுத் துக் கொள்ள மாட்டேன். செழுந்தண் பாற் கடலின் திரைகளைப் போல மேன்மேற் பொங்கி வழியும் பேரின்பம் அவனால் எனக் குக் கிடைத்தது. அப்பேரின்ப அமுதமா னது என் உள்ளமெல்லாம் முழுவதும் ததும்பி நிரம்பி, மயிர்க்கால்தோறும் தேக்கிடு மாறு அவன் செய்து விட்டனன்......இறை வன் என் உடலிற் குடில் அமைத்துக் கொண் டான். என் உடம்பெல்லாம் இனிய தேனைப் பாயச் செய்தான். புதுமை மிக்க அமுத ஒழுக்கினை எனது எலும்பின் துளைகளிலெல் லாம் ஊற்றெடுத்துப் பெருகும்படி செய் தான். ஒன்றுக்கும் பற்றாத என்னையும் மதக் களிப்பு மிக்க ஆண்யானை போல மிக மேலான பேரின்பத்தில் நிலை பெற்றிருக்கு மாறு செய்துவிட்டான். ...என்னுள்ளே அரு ளாகிய தூயதேன் கலவா நிற்க, அதனோடு மிக்க அமுதத்தினையும் இயைத்தருளினான்'.

''தடக்கையின் நெல்லிக்கனிஎனக்கு ஆயினன்
சொல்லுவ தறியேன் வாழி! / முறையோ ?
தரியேன் நாயேன்! தான்எனைச் செய்தது
தெரியேன். ஆவா! செத்தேன்! அடியேற்கு
அருளிய தறியேன். பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடல் திரைபுரை வித்து
உவாக்கடல் நள்ளுநீர் உள்ளகம் ததும்ப

(6) ''For instance take our ears. They cannot hear ultra-sonic waves of sound, but yogis do hear them. Ordinary human eyes can see only 70 octaves of radiation waves. But yogis can see immensely more of them and some have x-ray-like vision also. Dr. Osty records that Prof Bert Reese was engaged by Rockfeller for his clairvoyant factulty of discovering oil deposits''

—Dr. V. M. Bhat.

வாக்கிறந் தமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன்! கொடியேன ஊன்தழை
குரம்பை தோறும் நாயுடல் அகத்தே
குரம்பைகொண் டித்தேன பாய்த்தி, நிரம்பிய
அற்புதமான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன்!
உள்ளம கொண்டுஓர் உருகச்செய் தாங்கெனக்கு
அள்ளூறு ஆக்கை அமைத்தனன்! ஒள்ளிய
கனனற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையும் இருப்ப தாக்கினன்! என்னிற்
கருணை வானதேன் கலக்க
அருளொடு பரஅமுது ஆக்கினன்
பிரமன்மால் அறியாப் பெற்றி யோனே!''

—திருவண்டப்பகுதி

இத்தகைய அருளனுபவத்தினை அருட்டிரு இராம கிருஷ்ணர்பால் சுவாமி விவேகானந்தர் அவர்கள் பெற்றார். அரவிந்தர் முதலிய சமீப காலத்துச் சான்றோர்கள் பெற்ற செய்தியும், அவர் தம் நூல்களாற் புலனாகின்றது. கலிபோர்னியா ஆசிரமத்தைச் சேர்ந்த யோகாநந்தர் என்பவர் தாம் பெற்ற ஓர் அனுபவத்தைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

'என்னுடைய அருட்குரு என்மார்பில் இருதயத்திற்கு மேலே மெல்லெனச் சிறிது தட்டினார், என் உடம்பு அசைவற்று நின்று விட்டது. மூச்சு முழுவதும் வெளியே இழுக்கப்பெற்றது. என் உயிரும் உள்ளமும் சடத்துவ பந்தத்தினை விட்டு நீங்கி நின்றன...... கடல் போன்ற இன்பம். எல்லையில்லாத இன்ப வடிவினனாகக் கடவுளை யான் உணர்ந்தேன். அவர் தம் உடல் பேரொளிமயமாக விளங்கியது. பேரின்பமயமான அமிர்தம் என் உடலிற் பாதரசம் போலப் பாய்ந்தோடியது. இத்தகையதோர் எல்லையற்ற இன்பத்தினை, யான் அனுபவித்துணருமாறு செய்த என் குருநாதரின் திருவடிகளில் யான் நன்றியுணர்வோடு விழுந்து பணிந்து வணங்கினேன்'. (7)

இங்ஙனமே பல அருளநுபவ நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேராசிரியர் ஃப்ராய்ட் என்பவரும் (The Religious Conseiousness), பேராசிரியர் வில்லியம் ஜேம்ஸ் (The Varieties of Religious Experiene) என்பவரும், தத்தம் நூல்களில் பல செய்திகளை விளக்கி யிருத்தலால், இவற்றினை யெல்லாம் வீடப் பல மடங்கு சிறந்துயர்ந்த மாணிக்க வாசகரின் அருளனுபவத்திறம், எத்தகையதாக இருந்திருக்கும் என நாம் ஓரளவு கருதியுணர்தல் கூடும். (7)

சாமாறே விரைகின்றேன்:

மனிதனின் வாழ்க்கைப் பாதை இரு வேறு திசைகளிற் பிரிகின்றது. ஒன்று வாழும் வழி மற்றொன்று சாகும்வழி. முன்னையதை 'ஆமாறு' என்றும், பின்னையதைச் 'சாமாறு' என்றும் கூறலாம் நாம் வாழும் வழியிற்சென்று உய்ய முயலாமல், சாகும் வழியிலேயே விரைவாக ஓடிக் கொண்டிருக்கின்றோம். நம்முடைய இவ்விழி நிலையை, மாணிக்கவாசகர் தம்மீது ஏறட்டுக் கொண்டு இரங்கி வருந்திப் பாடுகின்றார்.

ஆமாறுன் திருவடிக்கே
அகங்குழையேன், அன்புருகேன்
சாமாறே விரைகின்றேன்
சதுராலே சார்வானே,

''சாமாறே விரைகின்றேன்'' என மாணிக்கவாசகர் தம்மைச் சுட்டிச் சொல்லிக் கொள்ளுவது, இந்நாளைய அறிவியற் கலைக்கும் பொருந்துவதாக இருக்கின்றது. இன்று ஆக்கவேலையைவிட விஞ்ஞானம் அழிவு வேலையிலேயே பெரிதும் முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றது.

'இன்று ஏற்பட்டுள்ள விஞ்ஞான ஆராய்ச்சி வளர்ச்சிகளின் பயனாக, ஒரு சிறு

---

7. ''My Guru struck gently on my chest above the heart. My body became immovably rooted. Breath was drawn out of my lungs as if by some huge magnet. Soul and mind last their physical bondage, and streamed out like a fluid piercing light from every pore. The flesh was as though dead. Identity was not confined to the body. An oceanic joy. The sprit of God, I realised, is exhaustless bliss. His body is countless tissues of light. The entire cosmos gently luminous, glimmered within the infintiude of my being. Blissful Amrit-nectar pulsed through me with a quick-silver-like fluidity

My Guru was standing before me. I started to drop at his feet in gratitude for the experience in cosmic consciousness (Samadhi) which I had long passionately sought.''

குமிழியை அழுத்துவதன்மூலமே, உலகில் மூன்றில் இரண்டு ''குதியை எளிதாக ஒரு கணத்தில் அழித்துவிடமுடியும் என்று, பேராசிரியர் அட்ரியன் என்பவர் கூறுகிறார். (8)

''நாம் மிகப்பல அறிவியல் அறிஞர்களையும், ஆனால் ஒரு சில சமயச் சான்றோர்களையுமே பெற்றிருக்கின்றோம். அணுவின் மறைபொருள் நுட்பங்களை அறிந்து கொண்டுவிட்ட நாம், மலைச்சொற்பொழிவினைப் புறக்கணித்துவிட்டோம். இன்றைய உலகில் அணுவரக்கன் ஓங்கி வளர்ந்து விட்டான்; அறவுணர்வோ குழந்தைமை நிலையிலேயே குறுகிக் கிடக்கின்றது. அமைதியை விடப் போரைப் பற்றியும், வாழ்வதைவிடக் கொல்லுதலைப் பற்றியுமே நாம் மிகுயாகத் தெரிந்திருக்கின்றோம்'' (9).

''சாமாறே விரைகின்றேன்'' என்னும் திருவாசகத் தொடர், ஒருவகையில இந்நாளைய அறிவியற் கலையின் நிலையை உணர்த்துவதாக இருக்கின்றது எனலாம்.

**அறிவியலும் இறையுணர்வும்:**

இஃதெங்ஙன மிருப்பினும், அறிவியலறிஞர்களின் சூழலிலும், இந்நாளிற் பலர் கடவுட்பற்றும் சமயவுணர்வும் உடையவர்களாகப் பெருகி வருகின்றனர். விஞ்ஞானத் துறையில் மாபெரும் மேதையாக விளங்கிய பேரறிஞர் ஆல்பர்ட் ஐன்ஸ்டைன், ''அறிவியல் இல்லாத சமயம் குருட்டுத் தன்மை வாய்ந்தது சமயம் இல்லாத அறிவியல் முடத்தன்மையுள்ளது'' (Religion without science, is blind, Science without religion is lame) எனக் கூறுகின்றார். டாக்டர் அலெக்ஸில் காரெல், 'மனிதன் பிற எல்லாப் பொருள்களையும் ஆராய்ந்து கண்டறிந் திருக்கின்றானாயினும், தன்னைத்தான் அறிந்து கொள்ள முயலாமையாற் பெரிதும் இடர்ப்படுகின்றான். அவன் தன்னைத்தானே அறிந்து கொண்டு உய்ய முயலுதல் இன்றியமையாதது' (Dr. Alexis Carrel, Man-the Unknown) என்கிறார்.

சர். ஆலிவர் லாட்ஜ் போன்ற பேரறிஞர்கள், மறுமை வாழ்வில் நம்பிக்கை கொண்டு பல நூல்கள் எழுதி வருகின்றனர். சர். ஆர்தர் எட்டிங்டன், ஆல்டஸ் ஹக்ஸ்லி, ஜே. பி. எஸ். ஹால்டேன், பெர்ட்ரண்ட் ரஸ்ஸல், பால்பிரண்டன், சர். வில்லியம் க்ருக்ஸ்,டாக்டர் மக்டுகல், சர். சி. வி. ராமன், சர். ஜே. சி, போஸ், சர். பி. சி. ரே, டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் போன்ற அறிவியற் பேரறிஞர்கள் பற்பலரும், சமயவுணர்வும், கடவுட் பற்றும் உடையவர்களே யாவர் என்பது, நாம் கருதுதற் குரியது

**மனநோய்க்கு மருந்து:**

உலகப் புகழ்பெற்றவரும், உளநூற்றுறைப் பேரறிஞரும் ஆகிய பேராசிரியர் கார்ல் ஜங் என்பவர், பின்வருமாறு கூறுகின்றார். ''கடந்த முப்பது ஆண்டுகளாக உலக நாகரிக நாடுகள் அனைத்திலும் உள்ள மக்கள் பலரும் என்பாற் கலந்து ஆய்வுரை கேட்டுள்ளனர். என்னுடைய பிணியாளர்கள் அனைவருள்ளும், வாழ்க்கையில் இரண்டாம் பகுதியில்-அதாவது, முப்பத்தைந்து வயதுக்குமேல்-தம் இன்னல்கள் தீருவதற்கு உரிய கடைசி வழியாகத் தமது வாழ்க்கையிற் சமயவுணர்வு (தெய்வ நம்பிக்கை) கைவரப் பெறுதலைக் கொள்ளாதவர்கள் ஒருவராவது இல்லை. அவர்களில் ஒவ்வொருவரும் நோயுற்றதற்குக் காரணம், உயிர்ப்புடைய ஒவ்வொரு மதமும் அவ்வக் காலத்தில் தன்னைப் பின்பற்றும் மக்களுக்குத் தருகின்ற மனநிறைவுணர்ச்சியை, அவர்கள்

---

8. ''Professor Adrian, President of the Royal Society of England, in his inaugural address on 'Science and Human Nature, at the 116th annual meeting of the British Association of Science, said that the control achieved over the forces of nature was so complete ''that we might soon become able to destroy two thirds of the world by pressing a button.''

—Dr. S. Radhakrishnan.

9. "We have too many men of Science but very few men of God. We have grasped the mystery of the atom and rejected the Sermon on the Mount. Ours is a world of nuclear giants and ethical infants. We know more about killing than we know about living.

—General Omar N. Bradley,

பெருமல் இழந்துவிட்டமையே யாகும். அவர்களில் ஒருவராவது மீண்டும் சமய வுணர்வு (தெய்வ நம்பிக்கை) கைவரப் பெரு மல், உண்மையிற் பிணி தீரப் பெற்றிலர்'' (10) என அவர் கூறுகின்ருர். எனவே சமயவுணர்வும் கடவுள் நம்பிக்கையுமே நம் மனநோய்கள் தீர்வதற்குச் சரியான மருந்து எனலாம்.


முவுடிரை:

எனவே, திருவாசகம் அறிவியலுக்குச் சிறிதும் முரண்பட்டதன்று; திருவாசகத்தி லும் பல சிறந்த அறிவியற் கருத்துக்கள் உண்டு என நாம் துணிந்து கூறலாம். துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், வடலூர் இராமலிங்க அடிகள், டாக்டர் திரு. ஜி. யூ. போப் பாதிரியார் போன்ற மாபெருஞ் சான்ருேர்கள் அனைவரும் போற்றிப் புகழ்ந்து ஓதியுய்ந்த திருவாசகத் திருமறையினை, நாமும் போற்றி ஓதி உய்ய முற்படுவோமாக!

—ஆசிரியர்

10. "During the past thirty years. people from all the civilized countries, of the earth, have consulted me Among all my patients in the second half of life-that is to say, over thirty-five years-there has not been one, whose problem in the last resort was not that of finding a religious outlook on life. It is safe to say that every one of them fell ill, because he had lost that which the living religions of every age, have given to their followers, and none of them has been really healed who did not regain his religious outlook."

—Prof. Carl Jung.



தஞ்சை மாவட்டம் அம்பல் பிரமபுரீசுவரர் கோயில் திருப்பணித் துவக்க விழாவில், உணவு அமைச்சர் மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல்;

# கோயில்கள் – இலக்கணம்

திரு. இரா. நாகசாமி, M. A.,
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை.

கோயில்கள், விமானம், இடைக்கட்டு, முன்மண்டபம், மகாமண்டபம், திருச்சுற்று, பரிவாரக்கோயில், கோபுரவாயில் எனப் பல பகுதிகளைக்கொண்டது. கோயிலை எடுப்பதற்கு முன்னர் உரிய நிலத்தைத் தேர்ந்தெடுத்துச் சமன் செய்வர். அங்கு எடுக்கவிருக்கும் கோயிலின் அளவை ஒட்டி நிலத்தில் ஒரு சதுரம் வரைவர். அதைப்பக்கத்திற்கு எட்டாக மொத்தம் 64 சதுரங்களாகவோ அன்றிப்பக்கத்திற்கு ஒன்பது சதுரங்களாக, 81 சதுரங்களாகவோ அமைப்பர். இவற்றில் நடுவில் உள்ள சதுரங்களில் விமானத்தையும், ஓரங்களில் உள்ள சதுரங்களில் திருச்சுற்று, பரிவாரக் கோயில் முதலியவற்றையும் அமைப்பர். இடைப்பட்ட சதுரங்கள் வெளியாக இருத்தல் வேண்டும். இவற்றை 'மர்மத்தானங்கள்' என்றும், அங்கு எந்தக் கட்டிடமும் எடுத்தல் கூடாது என்றும் கூறுவர். திருச்சுற்றை நீண்ட சதுரமாக அமைக்கச் சதுரத்தை இரட்டிப்பர். ஒவ்வொரு சதுரத்திற்கும் உரிய தெய்வங்கள் யாவை என்று உரிய நூல்கள் குறிக்கின்றன.

இக்கட்டிடங்களை அமைக்க ஸ்தபதியர் சிறந்த எளிமையான முறையை வகுத்துள்ளனர். இவற்றைப் பின்பற்றி எவ்வளவு பெரிய கோயிலாக இருப்பினும், எவ்வளவு உயர்ந்த கோயிலாக இருப்பினும் எளிதில் அவர்களால் எழுப்பிவிட முடியும். நாம் சொற்களையும் சொற்றொடர்களையும் அமைக்க எழுத்துக்களை வகுத்து அவற்றை மாற்றித் தொகுப்பதால் எவ்வாறு பல்வேறு சொற்களையும் தொடர்களையும் அமைக்க முடியுமோ அதே போன்று ஸ்தபதியர் கட்டிடங்களை எழுப்ப பல்வேறு ஆதாரப் பகுதிகளை வகுத்துள்ளனர். அவற்றை ஒன்றோடொன்று கூட்டியும், குறைத்தும், இணைத்தும் பல்வேறு விதமான கட்டிடங்களை அவர்கள் எழுப்பும்திறன் பெற்றுள்ளனர். கட்டிடம் எழுப்புவதில் ஆதாரப் பகுதிகளாக உள்ளவை 1 அதிட்டானம் (பீடம்). 2 சுவர் (கால்), 3. பிரஸ்தரம் (கூரை), 4 கழுத்து (கிரீவம்), 5. சிகரம் (தலை), 6. குடம் (ஸ்தூபி) என்பவையாகும். இவ்வங்கங்களை அடி, கால், தோள், கழுத்து, தலை, முடி என மனித உடல் அங்கங்களுக்கு உவமிப்பர்.

### அதிட்டானம் (அடி);

இது உபானம் ஜகதி, குமுதம், பத்மம், அந்தரி, வாஜனம், பட்டிகை என்ற பல பகுதிகளை உடைத்து. இவற்றை மாற்றி மாற்றி அமைப்பதால் பல்வேறு வகையான அதிட்டானங்கள் அமைக்கலாம். அதிட்டானத்தில் சிறப்பாக இருவகை உண்டு. 'பாதபந்த அதிட்டானம்' (பாதக் கட்டு) என்றும், 'பத்மபந்த அதிட்டானம்' (தாமரைக்கட்டு) என்றும் இருவகைப் படும். அதிட்டானத்தின் கீழ்ச் சில கோயில்களில் 'உபபீடம்' என்னும் பகுதி அமைக்கப்படும். தஞ்சைப் பெருங்கோயில், கங்கைகொண்ட சோழீச்சுவரம் ஆகிய கோயில்களில் இதைக் காணலாம். கட்டிடத்தின் உயரத்தை அதிகப்படுத்துவதற்கும், அழகு அளிப்பதற்கும் உப பீடத்தை அமைப்பர். பல கோயில்களில் உபபீடம் இன்றி அதிட்டானம் மட்டும் அமைக்கப்பட்டிருக்கும். அதிட்டானம்தான் மேலுள்ள கட்டிடம் முழுவதையும் தாங்குகிறது.

**சுவர் (கால்) :**

அதிட்டானத்தின் மேல் உள்ள பகுதி 'சுவர்' அல்லது 'கால்' என்று அழைக்கப் படும். இப்பகுதி வெறும் நெடுஞ்சுவராய் இருந்தால் அழகு இராது. ஆதலின் ஆங் காங்கே அரைத் தூண்களும், கோட்டங் களும், மகரதோரணங்களும் அமைக்கப் பட்டு அழகுற எடுக்கப்படும். கருவறை உள்ள பகுதியாயின் எந்தத் திக்குகளில்; எந்தக் கோட்டங்களில் எத்தெய்வங்கள் வைக்கப்படவேண்டும் என்ற நியதி உண்டு.

**பிரஸ்தரம் (கூரை) :**

சுவரின் மேல் வரும் கூரையே அறையை மூடும் அங்கமாகும். இது பூத வரி, கொடுங்கை, யாளிவரி என மூன்று பகுதிகளை உடையது. இதன்மேல் ஒன்று. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தளங்கள் அமைக்கப்படுவதுண்டு.

**கிரீவம் (கழுத்து) :**

மேலே அமைக்கப்படும் தலையின் (சிக ரத்தின்) அமைப்பை ஒட்டிக் கழுத்து சதுர மாகவோ, வட்டமாகவோ, எண்பட்டை யாகவோ, அமைக்கப்படும். இதில் நான்கு திசைகளிலும் நான்முகம், விஷ்ணு, சிவன், முருகன் அல்லது இந்திரன் ஆகிய தெய்வங் களின் உருவங்கள் வைக்கப்படும். தென் திசையில் சிவனும், மேற்குத் திசையில் திரு மாலும், வடதிசையில் நான்முகனும் பெரும்பாலும் காணப்படும். கிழக்குத் திசையில் சில இடங்களில் முருகனும், சில இடங்களில் இந்திரனும் காணப்படுவ துண்டு. இவை தவிரக் குறிப்பிட்ட மாற்றங் களை உடைய வேறு சில கோயில்களும் காணலாம். இடைப்பட்ட பகுதிகள் வெளியாக இருக்கும். அல்லது திசைக் காவலர்களின் உருவங்கள் வைக்கப்பட் டிருக்கும்.

**சிகரம் (தலை) :**

கழுத்துக்கு மேல் அமையும் பகுதி யைச் சிகரம் என்று அழைப்பர். இது சதுரமாகவோ, எண்பட்டையாகவோ, வட் டமாகவோ, அல்லது தூங்கானை வடி விலோ காணப்படும். சிகரத்தின் அமைப் பைக் கொண்டு கோயிலைப் பல்வேறு வகை யாகப் பிரிப்பர். எண்பட்டைச் சதுரமாக இருந்தால் அதைத் 'திராவிடசிகரம்' என் றும், சதுரமாக இருந்தால் அதை 'நாகர சிகரம்' என்றும், வட்டமாக இருந்தால் 'வேசர சிகரம்' என்றும் அழைப்பர். இப் பெயர்கள் உருவங்களை அறிந்து கொள்ள இடப்பட்ட இடுகுறிப் பெயர்களாகும். இவ்வமைப்பு அனைத்தும் தமிழகத்தில் காணப்படுகின்றன.

**குடம் :**

சிகரத்தின் மேல் குடம் போலும், அதன் மேல் குவிந்த தாமரை போலும் உள்ள பகுதியைக் குடம் அல்லது கலசம் அல்லது ஸ்தூபி என்று அழைப்பர். இது கல்லாலோ, சுதையாலோ, உலோகத் தாலோ செய்யப்பட்டிருக்கும்.

**நிலை (தளம்) ;**

பிரஸ்தரத்திற்கு மேல் ஒன்று, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிலைகள் அமைக்கப்படுவதுண்டு. ஒருநிலை உள்ள கோயிலைச் 'சிறுகோயில்' (அல்ப பிராஸாதம்) என்று அழைப்பர். பிற கோயில்களை நிலைகளின் எண்ணிக்கை யைப் பொறுத்து, 'இருநிலை விமானம்', 'மூன்றுநிலை விமானம்' என்று பெயரளிப் பர். ஒவ்வொரு நிலையிலும் சாலைகளும், கூடங்களும் மாலைபோல் சுற்றியமைக்கப் பட்டிருக்கும். நீண்ட சதுர அமைப்புடை யதைச் சாலையென்றும், சதுர அமைப்புடையதைக் கூடமென்றும் அழைப்பர். சில கோயில்களில் கருவறை யின் மேல் நிலைகளில், ஒன்றின்மேல் ஒன்றாக இரண்டு கருவறைகளுமாக மூன்று கருவறைகளுள்ள கோயில்கள் உண்டு. மாமல்லபுரத்திலுள்ள தர்மராஜ இரதம், காஞ்சியிலுள்ள வைகுந்தநாதர் கோயில், உத்தரமேரூரிலுள்ள சுந்தரவரதர் கோயில் முதலியவற்றில் இதுபோல் மூன்று கரு வறைகளைக் காணலாம். கீழ் நிலையில் கரு வறையின்றி மேல்நிலையில் மட்டும் கரு வறை அமைக்கப்பட்டால், அதை மாடக்

கோயில்' என்பர். நின்று உறங்கும் யானை போல் அமைக்கப்பட்ட கோயிலைத் 'தூங் கானை மாடம்' என்பர். இது தவிர வேறு சில அமைதிகள் உடைய கோயில்களும் உண்டு. கருவறையும், மேலுள்ள கட்டிடப் பகுதியும், 'விமானம்' எனவும் 'ஸ்ரீகோயில்' என்றும் அழைக்கப்படும். வாயிலை அலங் கரிக்கும் கட்டிடத்தைக் 'கோபுரம்' என அழைப்பர். கருவறை உள்ள கட்டிடத்தைக் 'கோபுரம்' என்று அழைக்கக் கூடாது.

வாயிலை அலங்கரித்து நிற்கும் அழகிய கட்டிடப்பகுதிக்குக் 'கோபுரம்' என்று பெயர். இது பல நிலைகளை உடையதாய் இருக்கும். ஏழுநிலை, ஒன்பதுநிலை முதலிய பல நிலைகளை உடைய கோபுரங்கள் உண்டு.

மண்டபங்களை எடுக்க அதிட்டானம், கால், பிரஸ்தரம் ஆகிய மூன்று பகுதிகளே தேவைப்படும். மண்டபங்கள் கருவறை யின் முன் இணைக்கப்பட்டிருந்தால் அதை 'முன்மண்டபம்' என்றும், அதுவே பெரிய அளவிலிருந்தால் 'மகாமண்டபம்' என்றும் அழைப்பர். கோயிலைச் சுற்றி எடுக்கப் பட்ட சுவருக்குத் 'திருச்சுற்றுமதில்' என் றும், அதையொட்டி மாளிகை எடுக்கப் பட்டிருந்தால் அதைத் 'திருச்சுற்று மாளிகை' என்றும் அழைப்பர்.

★



தஞ்சை மாவட்டம் அம்பல் பிரமபுரீசுவரர் கோயில் திருப்பணித் துவக்க விழாவில், உணவு அமைச்சர் மாண்புமிகு திரு. ப. மன்னை நாராயணசாமி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல்.

வாழ்த்துச் செய்தி :

# திருப்பெண்ணுகடம் திருக்குடநீராட்டுவிழா.

திரு. கே. எல். நரசிம்மன், B.A., B.L., I.A.S.

ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை

தொண்டை நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் நடுவே அமைந்து விளங்கும் தென்னுற்காடு மாவட்டப்பகுதி, அதனைச் சார்ந்த மற்றும் சில பகுதிகளுடன், பண்டைக் காலத்தில் நடுநாடு என வழங்கப்பெற்றது. இலக்கியங்களில் திரு முனைப் பாடிநாடு எனவும் சிறப்பித்து வழங்கப்பெறும். பெரிய புராணத்தில் சேக்கிழார் சுவாமிகள்,

''அறந்தரு நாவுக் கரசும்
ஆலால சுந்தரரும்
பிறந்தருள உளதானுல்,
நம் அளவோ பேருலகில்
சிறந்த திருமுனைப் பாடித்
திறம்பாடும் சீர்ப்பாடு''

எனத் திருமுனைப்பாடி நாட்டின் சிறப் பைப் பெரிதும் புகழ்ந்து போற்றிப் பாடி மகிழ்ந்துள்ளார்.

இத்தகைய திருமுனைப்பாடி நாட்டில் உள்ள தலங்கள் பலவற்றுள் திருப் பெண்ணுகடம் என்பதும் ஒன்று. இது "கடந்தை" எனவும் சுருக்கமாகக் குறிப் பிடப்பெறும். இங்கேயுள்ள சிவாலயம் ''தூங்கானைமாடம்'' என்னும் சிறந்த அமைப்பினை உடையது.

''தூமாண் கடந்தைத் தடம் கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே''

எனத் திருஞான சம்பந்தரும்,

''துன்னுர் கடந்தையுள் தூங்கானை
மாடச் சுடர்க் கொழுந்தே''

என்று திருநாவுக்கரசரும், இத்தலத்துக் கோயிலைத் தமது தேவாரப் பாடல்களில் பாடித் துதிக்கின்றனர். பிரளயகால வெள்ளத்திலும், அழியாமல் நிலைபெற்றது இத்திருத்தலம். ஆதலின் இங்குள்ள சிவ பெருமானுக்குப் பிரளயகாலேசுவரர் என்னும் காரணப்பெயர் அமைந்தது. இறை வனுக்குச் சுடர்க்கொழுந்தீசர் என்றும், இறைவிக்குக் கடந்தைநாயகி என்றும் பெயர்கள் வழங்கும்.

இத்தலத்திலேயே திருநாவுக்கரசர் பெருமான் சிவபெருமானைத் துதித்துச் சூலக்குறியும் இடபக்குறியும் பெற்று மகிழ்ந்தார். அறுபான்மும்மை நாயன் மார்களில் ஒருவராகிய கலிக்கம்பநாயனுர் அவதரித்தருளியது இத் தலமேயாகும். சைவசித்தாந்த சாத்திரங்களுள் தலைசிறந்த தாகிய சிவஞானபோதம் என்னும் தமிழ்ப் பெரும் தத்துவநூலை இயற்றியருளிய மெய்கண்டதேவர் தோன்றியருளியதும் இத்தலமேயாகும்.

இத்தகைய பல சிறப்புக்கள் வாய்ந்த திருப்பெண்ணுகடம் அருள்மிகு பிரளய காலேசுவரர் திருக்கோயிலுக்கு 1·25 இலட் சம் ரூபாய்செலவில் திருப்பணிகள் செய்யப் பெற்று, 13-7-73 அன்று, திருக்குட நீராட்டுவிழா நிகழவிருப்பது அறிந்து பெரிதும் மகிழ்கின்றேன்.

திருக்குட நீராட்டுவிழா சிறப்புற நிகழவும், விழாச் சிறப்புமலர் தமிழ் மணமும் சிவமணமும் கமழும் வண்ணம் நன்கினிது அமையவும், இறையருளை இறைஞ்சி என் மனமார்ந்த நல்வாழ்த்துக் களைத் திருப்பணிக் குழுவினருக்கும், அறங்காவலர் பெருமக்களுக்கும் அன் புடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ★

## திருப்பேரூர் அருண்மிகு சாந்தலிங்க அடிகளார் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா.

தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள் வீர சைவப் பெரும் சான்றோர்களில் ஒருவர். கி. பி. 17-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்திருந்தவர். இவர்தம் சமகாலத்தவராக விளங்கியவர், பிரபுலிங்கலீலை முதலிய பெரு நூல்கள் இயற்றிய துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகள். திருப்போரூர்ச் சந்நிதி முறை இயற்றிய சிதம்பர சுவாமிகளின் குருவாகிய விருத்தாசலம் குமாரதேவர், சாந்தலிங்க சுவாமிகளின் அருள்பெற்ற மாணவரே எனின், அவர்தம் குருவாக விளங்கிய சாந்தலிங்க சுவாமிகளின் பெருமை எத்தகையது என்பதனை, யாவரும் எண்ணி இனிதுணரலாம்.

தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள் கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோதவுந்தியார் என்னும் நான்கு சிறந்த நூல்களை இயற்றியுள்ளார். இந்நான்கு நூல்களும் முறையே, உயிர்கள்பால் இரக்கமுடைமை, இறையன்பு, உலகியற் பற்றொழித்தல், சமரச ஞானம் ஆகிய சிறந்த பண்பாடுகளை விளக்கி வலியுறுத்துவனவாகும். இந்நான்கு நூல்களுக்கும் திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகள், அரிய இனிய உரை வரைந்துள்ளார். இந்நூற் சிறப்பினையும் உரைச் சிறப்பினையும் வியந்து போற்றிச், சென்ற நூற்றுண்டில் தலைசிறந்து விளங்கிய யாழ்ப்பாணப் நல்லூர்ச் சிவத்திரு. ஆறுமுக நாவலர் அவர்கள் அழகுறப் பதிப்பித்துள்ளார்கள். இதனாலும் சுவாமிகளின் அருமை பெருமைகள் எத்தகையவை என்று நாம் இனிது உணரலாம்

திருப்புகழ்த் தண்டபாணி சுவாமிகள் தாம் இயற்றிய புலவர்புராணத்துள், சாந்தலிங்க சுவாமிகளின் வரலாற்றைச் சிறப்புற எடுத்து விளக்கிப் போற்றியுள்ளார்.

இங்ஙனம் பற்பல சிறப்புக்கள், வாய்ந்த சாந்தலிங்க சுவாமிகள் 300 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்து வைகியிருந்ததும், சமாதி கொண்டருளியதும், கோவையைச் சார்ந்த பேரூர் என்னும் மேலைச் சிதம்பரமாகும். அங்கேயுள்ள அருள்மிகு சாந்தலிங்க அடிகளார் திருக்கோயிலுக்குத் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா 6-7-73 அன்று நிகழவிருப்பது அறிந்து மிகவும் மகிழ்கின்றேன்.

விழா சிறப்புற நிகழவும், விழாச் சிறப்புமலர் நன்கினிது அமையவும், என்னுடைய மனமார்ந்த வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ★

---

## திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரி அம்மன் திருக்கோயில்
## உண்டியல் வருமானம்

(5-5-73 முதல் 23-5-73 வரை)

| | | |
|---|---|---|
| 1. | ரொக்கம் ரூ. | 20,692-11 பை |
| 2. | பொன் உருப்படிகள் கிராம் | 20கிராம், 300மி. கிராம் |
| 3. | வெள்ளி உருப்படிகள் | 1080 கிராம் |

திருவேற்காடு,
சென்னை-77.

T. P. வேங்கடாசலம்,
செயல் அலுவலர்.

# அம்பிகையின் அழகுவெள்ளம்

முன்னுரை :

தமிழிலுள்ள அம்பிகையைப் பற்றிய துதிநூல்கள் பல. அவற்றுள் ஆதிசங்கர பகவத்பாதர் அவர்களால், வடமொழியில் அருளிச் செய்யப்பெற்றுத் தமிழில் மொழி பெயர்க்கப்பெற்றுள்ள, **சௌந்தரிய லகரி** (அம்பிகையின் அழகு வெள்ளம்) என்னும் துதி நூலும், ஒன்ருகும். வடமொழியில் ஆதிசங்கரர் அருளிச் செய்துள்ள சௌந் தரிய லகரி நூல், மிகவும் புகழ் ஓங்கிய சிறந்த பெருந் துதிநூலாகும். இந்திய நாட்டின் பல பகுதிகளிலும், பல்வேறு காலங்களிலும் வாழ்ந்திருந்த பெரும் சான் ருேர்கள் பலர், அதற்கு உரை எழுதி யுள்ளனர். அவற்றுள் இப்பொழுது கிடைப்பவை மட்டுமே, சுமார் 35 உரை நூல்கள் ஆகும். இலட்சுமீதரர், பாற்கர ராயர், கைவல்யாச்சிரமர், காமேசுவரர், அச்சுதாநந்தர் முதலிய புகழ்மிக்க பேரறிஞர்கள், இந்நூலுக்கு உரை வகுத் தருளியுள்ளனர்.

சிறந்த கவிதை நடையில் அமைந் துள்ள இந்நூல், சாக்த ஆகமங்கள் தந் திரங்கள் ஆகியவற்றின் அரும்பெரும் பொருள்களை விளக்குகின்ற சாரமாகத் திகழ்கின்றது. அம்பிகையின் திருவுருவச் சிறப்பினையும், அருள் நலங்களையும் விதந் தெடுத்துப் புகழ்ந்து போற்றுகின்றது. அம்பிகையைப் போற்றி வழிபடுவதற்குரிய மந்திரங்கள் யந்திரங்கள் முதலியவற்றை விளக்குவதாக விளங்குகின்றது. இத் தகைய பலபெருஞ் சிறப்புக்கள் வாய்ந்த சௌந்தரிய லகரி என்னும் வடமொழித் துதிநூலை, இராமநாதபுரம் மாவட்டத்தில் வீரை என்று குறிப்பிடப்பெறும் வீர சோழம் என்ற ஊரில் வாழ்ந்திருந்த **வீரைக் கவிராச பண்டிதர்** என்பவர், அழகிய இனிய தமிழ்க் கவிதைகளில், மூலத்தின் கருத்தும் சுவையும் சிறிதும் குன்ருமல், சிறப்புற மொழிபெயர்த்து அருளியிருக்கின்ருர்.

திருவருணைக்கலம்பகம், திருவாரூர்க் கோவை, அருணசலபுராணம், செவ்வந்திப் புராணம், திருவிரிஞ்சைப்புராணம், திருச் செங்காட்டங்குடிப்புராணம் முதலிய பற் பல நூல்களைப் பாடியருளிய **சைவ எல்லப்ப நாவலர்,** இத்தமிழ்த் துதி நூலுக்கு மிகச் சிறந்ததொரு நல்லுரை இயற்றியுள்ளார். அம்பிகையை அன் புடன் வழிபடும் அடியவர்கள் பலரும், நாடோறும் பக்தியுடன் ஓதிப் பாராயணம் செய்து வருகின்ற அருட்பெரும் பனுவ லாகச், சௌந்தரிய லகரி என்னும் இந்தத் தமிழ்க் கவிதைநூல், சிறந்தோங்கித் திகழ்ந்து வருகின்றது. ஆதலின், அன் பர்கள் அனைவரும் அதனைப் பொருள் உணர்ந்து ஓதி வழிபட்டு மகிழ்வதன் பொருட்டு, இங்கு அந்நூல் பகுதி பகுதி யாக, எளிய இனிய நடையில் அமைந்த பொருள் விளக்கத்துடன், வெளியிடப் பெறுகின்றது.

## 1. நூற்ருெடக்கம்

அம்பிகையே, உலகனைத்திற்கும் தலைவியாகவும் தாயாகவும் விளங்கி வரு கின்ருள். இவ்வுலகின் தோற்றம் நிலை இறுதி ஆகிய எல்லாவற்றிற்கும், அவளே மூலமுதற் காரணமாகத் திகழ்கின்ருள். எல்லா ஆற்றலுக்கும் அவளே காரணம். அதனாலேயே அவள் **சக்தி** எனப் பெயர் பெறுகின்ருள். அவளது அருளும் துணை யும் பெருதார், எத்தகைய ஆற்றலும் இலராவர். **சிவம்** என்று சொல்லப்படும் மெய்ப்பொருளும்கூட, அம்பிகையாகிய ஆதிசக்தியுடன் சேர்ந்தால்தான்; எந்தத் தொழிலையும் செய்ய வல்லதாகும். இச்

சக்தி பிரிந்துவிடுமாயின், சிவமெனும் அப் பொருள் அசைதற்கும் இயலாததாகும். இவ்வாறு வேதங்கள் அனைத்தும் முழங்கு கின்றன. ஆதலால் ஒன்பது வியூகங்களாக அமைந்திருக்கின்ற இந்தப் பெரிய உல கத்தைப் படைத்தல் காத்தல் அழித்தல் முதலிய எவ்வகைப்பட்ட தொழிலையும் செய்கின்றவள், ஆதிசக்தியாகிய அம்பி கையேயாவள். அவளையே தேவரும் முனி வரும் யாவரும் துதிக்கின்றனர். இவ் வுலகில் மிகுதியான தவம் செய்தவர்கள் தான், அவளுடைய திருவடிகளை மெய் யினால் வணங்கவும், வாக்கினால் புகழவும் கூடும். ஒரு தவமும் செய்யாதவர்கள், அவளை வணங்கவும் புகழவும் இயலாது.

**சிவம் எனும் பொருளும் ஆதி சத்தியொடு**
**சேரின் எத்தொழிலும் வல்லதாம்;**
**இவள்பிரிந்திடின் இயங்கு தற்கும்**
**அரிதுஅரிது என மறை இரைக்குமால் ;**
**நவபெரும் புவனம் எவ்வகைத் தொழில்**
**நடத்தி, யாவரும் வழுத்துதாள் ;**
**அவனியின்கண் ஒருதவம்இலார்,**
**பணியல் ஆவதோ? பரவல் ஆவதோ?**

இப்பாடலால்,அம்பிகையின் அருளும் துணையுமின்றி, எவ்வகைப்பட்ட உயிர்கட் கும் எச்செயலும் செய்தல் இயலாது என்பது தெளிவாம். சந்திர கிரணமும் சந்திரகாந்தமும் சேரும்பொழுது நீர் தோன்றியும், பிரியும்பொழுது நீர் ஒழிந் தும் இருப்பதுபோல, மெய்ப்பொருளாகிய சிவமும், ஆதிசத்தியாகிய அம்பிகையுடன் சேர்ந்தால்தான், உலகத்தைப் படைத்தல் முதலிய தொழில்களைப் புரியும் ஆற்றல் பெறும். இல்லையேல் ஒரு செயலும் செய்ய மாட்டாமல், அசைவின்றிக் கிடக்கும். இவ்வுண்மையையே, "சிவமெனும் பொரு ளும், ஆதிசக்தியொடு சேரின் எத் தொழி லும் வல்லதாம் ; இவள் பிரிந்திடின் இயங்கு தற்கும்அரிது அரிது" என்பதனாற் குறிப் பிட்டார். 'அரிது அரிது' என்னும் அடுக்கு தெளிவுபற்றி வந்தது. சிவமும் சக்தியும் கூடி இருப்பதனாலேயே, உயிர்கள் ஆணும் பெண்ணுமாய்க் கூடி உலகம் நடைபெற்று வருகின்றது.

**"ஆதியே உலகத்தில் ஆணொடு**
**பெண்ணுமாய் அணை காரியம்**
**நாதன் நாயகி யோடு கூடி**
**நயந்த காரணம் என்பரே"**

என்பது சிவஞானசித்தியார் செய்யுள். வாமமகேசுவர தந்திரத்தில் சக்திகோணம் ஐந்துடன், சிவகோணம் நாலும் கூடுவது முத்தொழிலும் உண்டாவதற்குக் காரணம் என்று கூறப்பட்டுள்ளது. ஆதலின் "நவ பெரும் புவனம் எவ்வகைக் தொழில் நடத்தி யாவரும் வழுத்துதாள்" என அம் பிகையின் திருவடியைப் புகழ்ந்தார். நவம்- ஒன்பது. 'நவபெரும் புவனமும் நடத்தி" "எவ்வகைத் தொழிலும் நடத்தி" என விரித்து இயைத்துக் கொள்க. நவபெரும் புவனம் - ஒன்பது வியூகமாக அமைந்திருக் கின்ற பெரிய உலகம். நவவியூகம் ஆவன : சாலவியூகம், குலவியூகம், நாமவியூகம், ஞானவியூகம், சித்தவியூகம், நாதவியூகம், விந்துவியூகம், கலாவியூகம், சிவவியூகம் என இவை. இந்த நவவியூகங்களுள் உலக மெல்லாம் அடங்கும் என்பது கருத்து. வியூகம் - கூட்டம். மறை இரைக்கும் - வேதங்கள் முழங்கும். அவனி - உலகம். "தவமும் தவமுடையார்க்கு ஆகும்" என் பது திருக்குறள். ஆதலின், அம்பிகையைப் பணிவதற்கும் பரவுவதற்கும் தவமுடை யார்க்கே இயலும் எனக் குறிப்பிட, "ஒரு தவம் இலார் பணியல் ஆவதோ ? பரவல் ஆவதோ ?" என்று வினவினார். ஆவதோ- இயலுமோ ? இயலாது என்பது கருத்து.

'முன்பு செய் தவத்தின் ஈட்டம் முடி விலா இன்பமான அன்பினை எடுத்துக் காட்ட' எனவரும் சேக்கிழார் திருமொழி யும் இங்குக் கருதற் பாலது. அம்பிகை யைப் பணிந்து பரவுபவர்கள் தவமுடைய வர்கள்; அங்ஙனம் செய்கிலாதார் தவமிலா தவர், பாவியர் என்பது கருத்து. 'சிவ மெனும் பொருளும்' என்பதில் உம்மை உயர்வு சிறப்பு. 'இயங்குதற்கும் அரிது' என்பதில் உம்மை இழிவு சிறப்பு. 'எத் தொழிலும்' 'யாவரும்' என்பவற்றின் உம்மைகள் முற்றும்மை. 'நவபெரும் புவனம்' 'எவ்வகைத் தொழிலும் நடத்தி' என்பவற்றில் உம்மை தொக்கது. 'ஒரு தவம் இலார்' என்புழியும் உம்மை தொக் கது. 'ஆவதோ' எனவரும் ஓகாரங்கள்

இரண்டும் எதிர்மறை. ஆகாது, இயலாது என்பது கருத்து.

''அருளது சத்தி யாகும்
அரன்தனக்கு; அருளை யின்றித்
தெருள்சிவம் இல்லை; அந்தச்
சிவம் இன்றிச் சத்தி யில்லை''

என்பது சிவஞானசித்தியார். அதற்கு ஏற்ப, இப்பாடலிற் சத்தியை யின்றிச் சிவத்துக்கும் ஒரு செயல் இல்லை என அம்பிகையின் சிறப்புக் குறிப்பிடப்பெற்றது.

**மூவர் தொழிலும் தேவியின் அருளே :**

அம்பிகையின் ஆற்றல் எல்லையற்றது. அவளுடைய திருவடிகளாகிய தாமரை மலரின், நுண்ணிய துகளாகிய பரமாணுவைக் கொண்டு, பலவகை உலகங்களும் தோன்றுகின்றன. அங்ஙனம் அம்பிகையின் திருவடித் தாமரையின் நுண்துகளாகிய பரமாணுக்கள் இயற்றுகின்ற முறையிலேயே, வேதங்களையுடைய நான்முகன், பலவேறு வகைப்பட்டுப் பரந்து விரிந்த இடத்தை உடைய, உலகங்கள் முழுவதனையும் படைக்கின்றான். நான்முகன் படைக்கின்ற உலகங்கள் எல்லாவற்றையும், திருமாலானவர் பெரிய பாம்பின் வடிவு எடுத்து, எண்ணற்ற பெரிய படக் கூட்டம் பொருந்திய ஆயிரந் தலையாகிய அடவியினால் தாங்குகின்றார். அதற்கு மேல் உருத்திரர், அவ்வுலகங்களை அழித்துப் பொடியாக்கித் திருநீறாக மெய்யில் அணிந்து கொள்ளுகின்றார். இங்ஙனம் பிரமன் திருமால் உருத்திரர் ஆகிய மூவரும் முத்தொழில்புரிவது, அம்பிகையினுடைய அருளின் துணையினாலேயே யாகும் என்றால், அவளது பெருமையினை நாம் அளவிட்டு உரைத்தற்கு இயலுமோ?

பாத தாமரையின் நுண்துகட்
பரம அணுவினிற்பல இயற்றினால்,
வேத நான்முகன் விதிக்க வேறுபடு
விரிதலைப் புவனம் அடைய. மால்
முதுஅரா வடிவு எடுத்து. அனந்த
முதுகணப் பணாடவி பரிப்ப; மேல்
நாதனார் பொடிபடுத்து நீறணியின்
நாம் உரைத்து என்? அவள் பான்மையே!

அம்பிகையே உலகங்களைப் படைத்தல் காத்தல் ஒடுக்கல் ஆகிய முத்தொழிலையும் புரிகின்றாள் என்னாமல், அவளது பாத தாமரையின் நுண்துகள் ஆகிய பரம அணுக்களே பலவுலகங்களையும் படைத்துக் காத்து ஒடுக்குகின்றன என்றார், அம்பிகையின் சிறப்பை இனிது உணர்த்துதற்கு!

'' விரும்பும் பெரும் புலியூர் எம்பிரான்
அருள் மேவில் ஒரு
துரும்பும் படைத்து அழிக்கும்
அகிலாண்டத் தொகுதியையே''

எனவரும் குமரகுருபரர் பாடல், இங்கு நாம் நினைந்து இன்புறுதற்குரியது. பிரமன் நான்கு முகங்களை உடையவன் ஆதலாலும் நான்கு வேதங்களுக்கும் தலைவனாதலாலும், வேதநான்முகன் என்றார். விதிக்க-விதி முறைப்படி தோற்றுவிக்க. இவ்வுலகத்திலுள்ள பொருள்களெல்லாம் வேறுவேறு உருவும், வேறுவேறு இயற்கையும், நூறு நூறாயிரம் இயல்பும் உடையனவாகக் காணப்படுதலின், ''வேறுபடு விரிதலைப் புவனம் அடைய'' என்று அருளிச் செய்தார். விரிதலை-பரந்த இடத்தையுடைய, புவனம்-உலகம், அடைய-முழுவதும். பிரமன் படைக்கின்ற உலகங்களையெல்லாம் திருமால் காப்பாற்றுகின்றார்; இவ்வுலகத்தை ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேடன் தாங்கிக் கொண்டிருக்கின்றான் என்பர் ஆதலின், ''மால் முது அரா வடிவெடுத்து அனந்த முதுகணப் பணாடவி பரிப்ப'' என்றார். முது+அரா-மூதரா, பெரியபாம்பு. அனந்தம்-எல்லையற்ற, எண்ணில்லாத. முதுகணம்-பெருங்கூட்டம், திரள். பணம்-பாம்பின் தலையிலுள்ள படம். பணம்+அடவி-பணாடவி என வந்தது. மிகுதியையும், எண்ணற்ற தன்மையையும் குறிக்கப் பாம்பின் படத்தைப் 'பணாடவி' என்றார். அடவி-காடு. பரிப்ப-தாங்க. படைத்தற்கும் காத்தற்கும் பின்னரே ஒடுக்கற்றொழில் நிகழ்தலின் ''மேல்'' என்றார். உருத்திரர் உலகத்தை அழித்துச் சாம்பராக்கி, அதனைத் தம் திருமேனியில் அணிந்து கொள்வர் என்பது நூற்கொள்கை. ஆதலின் ''நாதனார் பொடிபடுத்து நீறு அணியில்'' என்றார். உருத்திரர் சிவபிரானின் கூறு அமைந்தவராகக் கூறப்பெறுதலின், அவ்வுருத்திரரை நாதனார் எனச் சிறப்பித்தார். பொடிபடுத்தல்-அழித்தல். அம்பிகையின் அருட்டுணையினாலேயே, பிரமன் திரு

மால் உருத்திரன் ஆகிய மூவரும் முத்தொழில் புரிகின்றனர். அம்பிகையின் அருள் இல்லையேல், அவர்களால் தத்தம் தொழிலைப் புரிதல் இயலாது என்பது கருத்து. இங்ஙனம் அம்மையின் அருளாலேயே மும்மூர்த்திகளும் முத்தொழில் புரிவார்கள் எனின், அம்மையின் எல்லையற்ற சிறப்பினை நம்மனோர் அளந்தறிந்து ஆராய்ந்து சொல்லுதல் இயலுமோ? ஒருகால் சொல்ல முயலினும், அவளது அளவில்லாத புகழும் சிறப்பும் நம் சொற்களின் எல்லைக்குள் அடங்குமோ? என்பார் '**நாம் உரைத்து என்?** அவள் பான்மையே' என்றார் பான்மை-புகழ், சிறப்பு. இப்பாடலால் அம்மையின் திருவடித் தாமரைகளையே அன்பர்கள் தியானித்து வழிபடுதல் வேண்டும் எனக் குறிப்பிட்டு அருளினார். (2)

### (3) எல்லோர்க்கும் எல்லாம் அருள்பவள் தேவியே :

அம்பிகை யாமளம் என்னும் சாக்த ஆகமத்தினால் பெரிதும் புகழ்ந்து போற்றப் படுபவள். ஆதலின், அவளுக்கு யாமளை என்று ஒரு பெயர் வழங்கும். அறிவில்லாதவர்களின் இதயம், இருள் அடர்ந்தது. அந்த இருளைப் போக்குவதற்கு ஒரு சூரியன் போதாது. எண்ணில்லாத பல கோடி சூரியர்கள் சேர்ந்தால்தான், அறிவில்லாதவர்களின் உள்ளத்திலுள்ள அறியாமையாகிய இருளை, ஒருகால் போக்க முடியும். அத்தகைய பலகோடி சூரியர்களின் ஒளிக்கதிர்களை ஒன்றுபடக் குழைத்துச் சேர்த்துச் செய்த ஒரு தீபம் போல விளங்கி, அம்பிகை அறிவில்லாதவர்களின் உள்ளத்தில் உள்ள அறியாமை இருளைப் போக்குகின்றாள். தன்னை நினைக்கும் திறம் இல்லாத தாமத குணத்தவர்களின் குற்றங்கள் செறிந்த அறிவுக்குப், பூங்கொத்துக்களினின்று ஒழுகுகின்ற தேனருவி போலத் திகழ்கின்றாள். மிகுதியும் வருத்துகின்ற வறுமையின் கொடுமையினால் வருந்துபவருக்கு, விரும்புவன எல்லாவற்றையும் வழங்குகின்ற சிந்தாமணிக் கூட்டமாய்த் திகழ்கின்றாள். தன்னை மறந்து பிறவியாகிய கருங்கடலில் விழுந்து வருந்துபவர்களை, அங்ஙனம் விழாமல் எடுத்துக் கரையேற்றுதலில், திருமால் திருவவதாரம் எடுத்த ஒப்பற்ற பெரிய வராகத்தினுடைய வெண்மையான கோடுபோல விளங்குகின்றாள். அறிவில்லாதவர்க்கு அறிவை வளர்த்தும், அன்பினால் நினைக்கும் திறமிலாதவர்க்கு இன்பத்தை விளைவித்தும், வறுமையால் வாடுபவர்க்குச் சிந்தாமணி போல் வேண்டுவனவற்றை வழங்கியும், தம் தீவினையால் பிறவிக் கடலில் விழுந்து வருந்துபவரை வீடுபேற்றின்பமாகிய கரையில் ஏற்றி உய்வித்தும், அம்பிகை தன் பெருங் கருணையால் நலங்கள் பல புரிந்து, அனைவரையும் காப்பாற்றியருளுகின்றாள்.

**அறிவிலர்க்கு இதய திமிரம் ஈரும்**
**அளவற்ற ஆதவர், அளப்பிலா**
**எறிகதிர்ப் பிரபை குழைத்து இழைத்தனைய**
**தீவி; யாமளை; நினைப்பிலார்**
**செறி மதிக்கு இணரின் ஒழுகு தேன் அருவி;**
**தெறுகலிக்கு அருள் மணிக்குழாம்;**
**பிறவி மைக்கடல் விழாது எடுப்பதொர்**
**பெருவராக வெண் மருப்பு அரோ !**

உலகத்திலுள்ள மக்கள் அனைவரும் பல்வேறு குறைபாடுகளைப் பெற்றுள்ளனர். உலக மக்களை அறிவிலார், அன்பிலார்; பொருளிலார், அருளிலார் எனப் பலவகைகளில் பிரிக்கலாம். அம்பிகை அவர்கள் அனைவருக்கும் ஏற்றபெற்றி அருள்புரிகின்றாள். அறிவில்லாதவர்களின் உள்ளத்திலுள்ள அறியாமையாகிய இருளைப் போக்கி, அறிவாகிய ஒளியைத் தீபம் போல வழங்குகின்றாள். ஆதலின் 'அறிவிலர்க்கு இதய திமிரம் ஈரும் அளவற்ற ஆதவர் அளப்பிலா எறிகதிர்ப் பிரபை குழைத்து இழைத்தனைய தீவி' என்று அம்மையைப் புகழ்ந்தார். இதயம் - உள்ளம். திமிரம் - இருள், ஈரும் -போக்குகின்ற. ஆதவர் - சூரியர். பிரபை - ஒளி. குழைத்து - கலந்து ஒன்றாகச் செய்து. இழைத்தனைய - செய்தாற்போன்ற. தீவி- தீபம் போன்றவள். அன்பினால் நினையாத தாமத குணத்தவர்கள் எவ்வாற்றாலேனும் தன்னை நினைக்குமாறு செய்து, அவர்களின் அறிவிற்கும் உள்ளத்திற்கும் இன்ப ஊற்றாயும் வெள்ளமாயும் பெருக்கெடுத்து அருள்புரிதலின், அம்பிகையை 'நினைப்பிலார் செறிமதிக்கு இணரின் ஒழுகு

**தேன் அருவி**'' எனச் சிறப்பித்தார். செறி- குற்றங்கள் நிறைந்த. மதி - அறிவு, உள்ளம். இணர்-பூங்கொத்து. தேனருவி- இன்ப ஊற்று, வெள்ளம். அம்பிகையை நினைந்து வணங்காதவர்கள் வறுமையினால் வருந்துவர். அங்ஙனம் வறுமையுற்று வருந்தித் தன்னை நினைந்து தொழுபவர் களுக்கு, அம்பிகை அருள் சுரந்து, அவர் களின் வறுமையைப் போக்கி, அவர் விரும்பும் செல்வங்களை யெல்லாம் வாரி வழங்கியருள்கின்றாள். ஆதலின் ''தெறு கலிக்கு அருள் **மணிக்குழாம்**'' என்றார். தெறுதல் - வருத்துதல். கலி - வறுமை. அருள் - அருள்புரிகின்ற. மணி - சிந்தா மணி. சிந்தாமணி என்பது, தேவர் உலகத் தில் உள்ளதாய், விரும்பி நினைத்தன எல்லாம் தரும் என்பர். ''சீர் அணி சிந்தாமணி - நினைத்தது கொடுத்தலிற் சீரையுடைய சிந்தாமணி'' என்பது, திருக் கோவையார் பேராசிரியர் உரை. அச் சிந்தாமணி வழங்கும் நலங்களிலும் மிகுந்த, பலகோடி நலங்களை அம்பிகை வாரி வழங்குபவள் ஆதலின், 'மணி' என்னாது ''**மணிக்குழாம்**'' என்றார். குழாம் - கூட் டம், திரள், குவியல்.

ஒருகாலத்தில் இரணியாக்கன் என் னும் அசுரன், உலகைச் சுருட்டிக் கடலுட் கொண்டுபோய் ஒளித்துவைக்க, அதனைத் திருமால் பன்றியின் உருவம் கொண்டு, தன்னுடைய கோரைப்பல் ஆகிய கொம் பினால் எடுத்துக் கடலினின்று மீட்டுக் காத்தருளினார் என்பது வரலாறு. ஆதலின் பிறவியாகிய கடலில் விழுந்து வருந்து பவர்களை, அம்பிகை தன்னருளால் கை கொடுத்து ஏற்றிக் காத்தருள்வள் என்ப தனை விளக்கப் ''பிறவி மைக்கடல் விழாது எடுப்பதொரு **பெருவராக வெண்மருப்பு**'' என உருவகம் செய்து புகழ்ந்தார். மைக் கடல் - கருங்கடல். மை - கருமை ஒரு- ஒப்பற்ற. வராகம்-பன்றி. வெண்மருப்பு- வெண்மையான கோடு, தந்தம், கொம்பு. நம்மனோர்க்கு விளையும் நன்மைகளுக் கெல்லாம் தேவியே காரணம். தேவியின் திருவருளால் அன்றி நாம் ஒரு நன்மை யையும் அடைவதில்லை என்பது, இப் பாடலின் கருத்து. யாமளை என்னும் அம்பிகையாகிய ஒரு பொருளையே தீபம் - தேனருவி - மணிக்குழாம் - பெருவராக வெண்மருப்பு எனப் பல பொருளாக உருவகம் செய்தமையால், இச் செய்யுள் **அற்புத உருவகம்** எனப்படும் யாமளை என்னும் ஒரு சொல்லே, தீபம் -தேனருவி- மணிக்குழாம் - வராக வெண்மருப்பு என் னும் சொற்களோடு, தனித்தனியே சென் றியைந்து பொருள் தந்து நின்றமையால், இஃது **இடைநிலைத் தீபகம்** என்னும் அணி யாகவும் கூறப்பெறும். (3)

# அபிராமியம்மை துதி

எழுகின்ற ஞாயிறே பொழிகின்ற வானமே
    எழில் கொண்ட பசுமை நிலமே
இதயத்தின் அடியிலே உதயத்தில் வளர்கின்ற
    எண்ண மலர்க் கோவி லரசே
தொழுகின்ற நெஞ்சமே புனை கின்ற மாலையில்
    சுழல்கின்ற ஞான மணமே
தூய்மையில் வாய்மையில் துணையாகி யென் பாடல்
    தொடர்கின்ற கவிதை நிழலே
நிழல்தந்த மகிழ்விலே தவழ்கின்ற தென்றலே
    நீதியே பாதி சிவமே
நேற்றாகி யின்றாகி நாளைக்கு மென்றாகி
    நிலையான சக்தி வடிவே
செழுமையாய் முழுமையாய் நின்னருள்யான்பெற்றுச்
    சீர்பாட வைத்த திறமே
தென்றல்நற் செந்தமிழ் தெம்மாங்கு பாடிடும்
    திண்டி நகர் அபிராமி யே

— மு. விசுவபாரதி.

# அருளிச்செயல் ஓதும்முறைகள்

'மகாவித்வான்' 'பத்மவிபூஷண்'
திருமிகு. பி ப. அண்ணங்கராச்சார்ய சுவாமிகள, காஞ்சிபுரம்.

திவ்வியப் பிரபந்தங்களை இயல் சேவிக்கும் காலத்தில், ஒருவிதமான நிபந்தனையும் இல்லாமல், அவரவர்களுக்குத் தோன்றின வாறு நிறுத்துவதே பெரும்பாலும் எங்கும் காணு நின்றோம். அடியடியாக நிறுத்த வேண்டியிருக்க, அங்ஙனம் நிறுத்தாமல் முதலடியின் சில சொற்களை இரண்டாம் அடியோடு கூட்டுவது, அவ்வடியின் சொற்களை மேலடியோடு கூட்டுவது, என்று இப்படி காணும் முறைகள், எக்காலத்தில் யாரால் எதற்காக ஏற்படுத்தப்பட்டவை? பாராயணங்கள் பண்ணும்போது பொருளை நோக்கி அடிகளை ஒடிப்பது எதற்காக? வடமொழி வேத பாராயணத்திலாவது, தோத்திர பாடங்களிலாவது, இப்படிப் பட்ட ஏற்பாடு இல்லையே! திவ்வியப் பிரபந்தங்களுக்கு மாத்திரம் எதற்காக ஏற்பட்டது? ஏற்பட்டாலும் எல்லா இடங்களிலும் எல்லார்க்கும் வேற்றுமையின்றி ஒரே விதமான ஏற்பாடு இருந்திடக்கூடாதா? நான்கு பேர்கள் சேர்ந்து சேவித்தால், நான்குபேரும் நான்குவிதமாக நிறுத்தும் படியாய்ப் பல இடங்கள் காணநேருகின்றதே; இஃது என்ன? என்று சில பெரியோர்கள் சர்ச்சை செய்வதுண்டு.

அர்ச்சாவதார வேதமான திவ்வியப்பிரபந்தங்களை, எம்பெருமான் திருவுள்ளம் உகக்குமாறு செவிக்கினியசெஞ்சொல்லாகச் சேவிக்க வேணும் என்கிற திருவுள்ளத்தோடு, முன்னோர்கள் ஏற்பாடு செய்த காலத்தில், பொருளின் சேர்த்தியை நோக்கி, நிறுத்துமிடங்களை ஒருவாறு ஏற்பாடு செய்தருளினார்கள். மேலெழ நோக்குமிடத்துச் சில சில இடங்களில் அவர்களுடைய ஏற்பாடு பொருத்தமில்லாதவைகள் போல் தோன்றவுங்கூடும் ஆனால் ஆராய்ந்து பார்த்தால் அதுவே இன்சுவை நிறைந்ததாய்ப் பொருத்தமாக இருக்கும். இங்ஙனே பல இடங்களிலும் ஆராய்ந்து பார்க்கையில், நிறுத்துமிடங்களில் ஏற்பாடு முன்னோர்களே செய்ததென்றும், அதுவும் ஆழ்ந்த ஆராய்ச்சியுடன் செய்யப்பட்டிருக்கிறதென்றும் சொல்லும்படியாக உள்ளது. ஆனால் முன்னோர்கள் ஏற்படுத்தின அளவோடு நில்லாமல், காலப்போக்கில் அவரவர்கள் தத்தமக்குத் தோன்றினவாறெல்லாம் நிறுத்தவும் ஒடிக்கவும் இடம் உண்டாயிற்று.

திருச்சந்தவிருத்தத்தில், "கேடில் சீர் வரத்தன்" என்கிற பாசுரத்தில், இரண்டாம் அடி "நாட்டமாயிரத்தனோடு நண்ணினும்" என்பது. இங்கு 'நாட்டமாயிரத்தன்' என்பது முழுச்சொல். நாட்டம் என்று கண்ணுக்குப் பெயர்; 'நாட்டமாயிரத்தன்' என்று ஆயிரம் கண்களையுடைய இந்திரனைச் சொல்லுகின்றது. 'நாட்டமாயிரத்தனோடு நண்ணினும்' என்பதற்கு, ஆயிரம் கண்களையுடைய இந்திரன் உலகைச் சேர்ந்தாலும் என்பது பொருள். இவ்விடத்தில் விவேகிகளோடு அவிவேகிகளோடு வேற்றுமையின்றிப் பெரும்பாலும் எப்படி நிறுத்துகிறார்கள் என்றால், 'நாடினோடு நாட்டமாய்-இரத்தனோடு நண்ணினும்' என்று சேவித்து வருகிறார்கள். சில பெரியோர்கள் இருக்கும்படியே சேவிப்பதும் உண்டு; அது மிகக்குறைவு. பெரும்பான்மையாக விபரீதமாகவே சேவித்து வருகிறார்கள். ஒரு திவ்விய தேசத்தில் பத்திருபது சுவாமிகள் இப்படியே ஏகரீதியாகச் சேவித்ததைக் கேட்ட ஒரு சிறந்த சான்றோர் வருந்திக் கூறினராம் 'இரத்தநாடு' என்று சொல்லுவதைவிட 'உரத்தநாடு' என்று சொன்னால் ஓர் ஊரின் பெயரையாவது சொன்னதாக இருக்குமே என்றாராம். அவருடைய பரிதாபத்தை என் சொல்வோம்!

இவ்விதம் பொருத்தமில்லாதபடி ஒடித்து நிறுத்தும் இடங்கள் பலபல உண்டு. அவற்றுக்கு எல்லாமாக இஃதொன்று எடுத்துக் காட்டினபடி. இத்தகைய பொருத்தமின்மைகளைத் திருத்துவதென்ருல், அது மிகவும் கடினமான செயலேயாகும். 'அநாதி சம்பிரதாயத்தைப் பாழ்படுத்த வந்துவிட்டான் இவன்' என்கிற தூஷணைக்கும் இடமேற்படும். 'ஸங்கே சக்தி; கலௌ யுகே' (கலியுகத்தில் எண்ணிக்கையே ஆற்றலுடையது) என்றபடி, பெருந்திரளாகச் சேர்ந்து ஒருவிதமாகச் சேவித்துவிட்டால், அதற்கே பிராபல்யம் ஏற்பட்டு விடுமாதலால், அவ்விடங்களில் திருத்துபவர்கள் ஏளனத்திற்கு உரியவராவார்கள். பிறரைத் திருத்த அஞ்சினுர்களாலுைம் விவேகிகளாயிருப்பவர்கள், தாங்கள் சேவிப்பதைப் பொருத்தமின்றிச் சேவிக்கமாட்டாமல், சொற்சுவைக்கும் பொருட்சுவைக்கும் பொருத்தமாகவே சேவிக்க விரும்புவார்கள். ஆதலால் அப்படி சேவிக்கும்போது, இவர்கள் ஒருபக்கம் இழுப்பதாகவும், பிறர் மற்ருெரு பக்கம் இழுப்பதாகவும் காண நேர்ந்துவிடுகிறது. மற்றவரும் விவேகிகளாக ஆகும் வரையில், இப்படிப்பட்ட தொல்லைகளை நீக்குதல் அரிதேயாகும்.

திவ்வியப்பிரபந்தம் தமிழ்மொழியில் அமைந்திருப்பதாலும், 'தமிழ்மொழி நமக்குச் சொந்தமானது தானே' என்று ஒவ்வொருவரும் நினைக்கும்படியாய் இருப்பதாலும், சிறிது வாயைத் திறக்கத் தகுதியுடையார் எல்லாருமே பகவத் விஷய அதிகாரிகள் என்று கருதப்படுகின்றனர். அத்தகையவர்களால் திவ்வியப் பிரபந்தங்களுக்கு ஏற்படும் கோளாறுகள் அபாரம். பெரியாழ்வார் திருமொழியில், 'சென்னியோங்கு' திருப்பதிகத்தில், ''நின்னுள்ளேனுய்ப் பெற்ற நன்மை இவ்வுலகினில் ஆர் பெறுவார்?'' என்கிற அடிக்குப்பொருள் தெரிந்து கொள்ள ஒருவருக்கு விருப்பம் உண்டாயிற்று. அவர் பகவத் விஷய அதிகாரி என்று பெரும்புகழ் பெற்ற ஒரு பெரியாரிடம் சென்று, இந்தத் திருமொழிக்குப் பொருள் விளக்கியருள வேணும் என்று கேட்டார்; 'நின்னுள்ளேனுய்' என்பதற்கு அவர்க்குப் பொருள் விளங்கவில்லை. கேட்டவர்க்கும் அவ்விடத்தில் தான் ஐயப்பாடு. ஒருவர் கேட்கும்போது 'எனக்கும் தெரியவில்லை' என்பது மதிப்புக் குறைவாய்ப் போய்விடும் என்று, பண்டிதர்களாக மதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் நினைக்கிற வழக்கமாதலால், அவரும் அப்படியே நினைத்து ஏதாவது ஒருவிதமாக இவர்க்குப் பொருள் சொல்லிவிட வேணும் என்றே நினைத்து, ''நின்னுள்ளே, நாய் பெற்ற நன்மை இவ்வுலகினில் ஆர் பெறுவார்?'' என்று பதப் பிரிவு செய்து பொருள் உரைத்தார். ஒருநாள் திருவரங்கநாதனுடைய கருவறையினுள்ளே ஒரு நாய் புகுந்துவிட்டது; அந்த ஐதிகத்தை இங்கே அருளிச் செய்கிருர் பெரியாழ்வார். கடைகெட்ட நாய்கூட உன்திருவடியருகே வரும்படியான பாக்கியம் பெற்றுவிட்டது. அத்தகைய பாக்கியத்தை இவ்வுலகினில் வேறு யார் பெறுவார் என்பதாகப் பொருள் கூறிவிட்டார். அதற்கு மேலும் ''ஐதிகம் அறியாதவர்கள் வேறு விதமாகவும் இதற்குப் பொருள் சொல்லக்கூடும். அதுவெல்லாம் பொருளேயன்று. இதுவே தொன்றுதொட்டுப் பெரியோர்கள் கூறிவரும் சம்பிரதாயப் பொருள்'' என்றும் சொல்லிவிட்டார்.

உண்மையில், இவ்விடத்தில் நாயும் இல்லை; பேயும் இல்லை. ''நின்னுள்ளேன் ஆய்ப் பெற்ற நன்மை''—அடியேன் நின்னிடத்தில் ஈடுபட்டவனுகிப் பெற்ற நன்மையை இவ்வுலகினில் வேறு யார் பெறுவார்? என்பதுதான், இவ்விடத்திலுள்ள கருத்து. இங்ஙனம் மேல்நோக்காகத் தத்தமக்குத் தோன்றுகின்ற பொருளைக் கொண்டு, அவரவர்கள் அருளிச் செயல்களில் அனர்த்தம் செய்கிறபடிகள் ஒன்றிரண்டல்ல; அவை உரைக்குங்கால் பாரதமாம்!

இங்ஙனே திருத்தவேண்டிய பிழைகள் நூற்றுக்கணக்காக நேர்ந்திருக்கின்றன. ஞாபகத்திற்கு வருகின்ற மற்ருேர் அதிசயம் கூறுகின்றேன். பெரியாழ்வார் திருமொழியில், ''புழையிலவாகாதே நின்செவி புகர் மாமதீ'' என்பது ஒரு பாசுரம். இவ்விடத்தில் பலரும் 'நின் செவீ' என்று அநாவசியமாக நீட்டிச் சேவிப்பது உண்டு. ஸ்ரீபெரும்

பூதூர் எம்பெருமானுர் சந்நிதியில் ஒரு திரு நாளில் குழாமாக இருந்து சேவிக்க நேர்ந்த போது, அடியேன் பக்கத்திலிருந்து சேவித்தவர், பலரும் சேவிக்கிற வழக்கப்படியே 'நின் செவீ' என்று நீட்டியே சேவித்தார். அவர் நன்கு வாசித்து விவேகியாகவும் இருந்தபடியாலே,'செவீ'என்றுநீட்டவேண்டியது அவசியமா? என்று அவரைக்கேட்டேன் 'எனக்குப் பாடம் (சந்தை) ஆனபடியே நான் சொல்லுகிறேன். அவ்வளவே எனக்குத் தெரியும்' என்ருர் அவர். 'ஆனுலும்,தேவரீருடைய அறிவாற்றலைச் சிறிது பயன்படுத்திப் பார்த்திருக்கலாமே' என்றேன். செவி என்று காதுக்குப் பெயர். ஆகையாலே நீட்டல் வேண்டாம் என்று தோன்றுகிறது என்ருர். இந்த சர்ச்சையை அவருடைய ஆசிரியர் ஒருவர் குறிக்கொண்டிருந்து, என்ன சர்ச்சை நடந்தது என்று பிறகு அவரைக் கேட்டார். செவீ என்கிற நீட்டலைப்பற்றிய சர்ச்சை என்று நடந்த செய்தியைச் சொன்னுர் அவர். அதற்கு அந்தப் பெரியார் சொன்னுராம்- அவன் ஒரு பித்தன், நீ ஒரு பேயன்; காது ஒன்றுதானு இருக்கும், இரண்டல்லவோ காதுகள்; 'ஒரு செவியானுல் செவியென்றே சொல்லத் தகும்: இரண்டாகையாலே செவீ என்ன வேண்டாவோ? 'ஹரி சப்தங்கூட அறியாதவன் ஒன்று சொல்வதும், அதை நீ ஆமோதிப்பதும் நன்ருய் இருக்கிறது' என்ருராம். வடமொழியில் ஹரி: ஹரீ, ஹரய: என்பது போலத் தென்மொழியில் செவி, செவீ,செவய:என்று அந்த ஆசிரியர் சப்த மஞ்சரிகூடப் புனைந்துவிட்டார் போலும். அவர் எளியவரல்லர். ஆசிரியப் பெரும் பதவி வகுத்தவர். விநோதமாகச் சொன்னுருமல்லர். உண்மையாகவே அப்படி மனத்தில் நினைத்துச் சொன்னுர்.

இவ்வண்ணமாக அடியேனுடைய அனுபவத்தில் நேர்ந்த இதிகாசங்களை எழுதுவதானுல், அஃது ஒரு பெரிய புத்தகமாகும். இப்படியாக நேர்ந்திருக்கிற பிறழ்வுகளைத் திருத்த யாராலும் முடியாது. தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுணர்ந்து, திவ்யப் பிரபந்த வியாக்கியானங்களையும் பலகால் சேவித்து நிரூபண நிபுணத்துவமும் பெற்றிருக்கின்ற மகான்கள், ஆங்காங்கு இல்லாமற் போகவில்லை; அப்படிப்பட்டவர்கள் அருளிச் செயல் சேவிக்கும் முறைகள், மிகத் திருத்தம் பெற்றேயிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆயினும் ''எதார்த்தவாதி வெகுஜன விரோதி'' என்கிற பழமொழி எமக்கு நன்கு தெரிந்திருக்கச் செய்தேயும்; நெஞ்சினுள் உறையும் கருத்துக்களை வெகுஜன கோபத்திற்கு அஞ்சி வெளியிடாமல் இருக்கும் வழக்கமில்லை. மிக அவசியம் என்றும் உசிதம் என்றும் நமக்குத் தோன்றுகின்ற நடைமுறைச் செய்திகளை வெளியிட்டு விட்டால், அஃது அடியோடு பலனின்றிப் போய்விடாது. காலப்போக்கில் தகுதியுடைய நல்ல பெரியோர்கள் மூலமாகவாவது, அது பயனுடையதாக நிறைவேறியே தீரும் என்கிற நம்பிக்கை யிருப்பதனுல் வெளியிடலாகிறது.

பல்லாண்டு என்பதை 'பெல்லாண்டு' என்று உச்சரித்தல்; 'பிரிவின்றியாயிரம்' என்றவிடத்து பிரவன்றி என்று உச்சரித்தல்; 'படைபோர்' என்பதைப் 'படபோர்' என்பது; 'வாழாட்பட்டு' என்பதை'வாழால் பட்டு' என்பது; 'எங்கள் குழுவினில்' என்பதை 'எங்கள் குழவினில்' என்பது; 'புகுதலொட்டோம்' என்பதை 'புகுதலிட்டோம்' என்பது;ஏழாட்காலும்' 'என்பதை 'காலய' என்பது; 'இராக்கதர்வாழ்' என்பதை 'இராக்கதிர்வாழ்' என்பது; 'வரம்பொழு' என்பதை 'வரம்பொழில்' என்பது; ''உடுத்துக்களைத்த... கலைத்ததுண்டு'' என்பது ''உன்தனுக்கு'' என்பது. 'அணிகோட்டுயர் கோன்'' என்பது... இப்படிப்பட்ட சேவைகள் எவ்வூரிலும் ஒரேவிதமாகக் காதில் விழுவதுண்டு. ஆனுல் சேவிக்கவேண்டிய முறைப்படி சேவிப்பவர்கள் எங்குமே இல்லையென்று நாம் சொல்லவில்லை. பிழையில்லாமலும் பரமபோக்யமாகவும் சேவிப்பவர்கள் ஆங்காங்கு ஒருவரிருவர் எழுந்தருளியேயுள்ளார்கள். பெரும் பான்மையாக நமது காதில் விழும் அபசப்தங்களானவை நன்ருக சேவிப்பவர்களையும் மறக்கச் செய்துவிடுகின்றன.

திருப்பாவை சாத்துமுறை நாடோறும் ஒவ்வொரு திருமாளிகையிலும் உள்ளது. அந்த இரண்டு பாசுரங்களை யாவது பிழையில்லாமல் சேவிப்பவர்கள் உண்டா?

1. "பெத்தம்மேல் துண்ணும் குலத்தில் பிறந்து"
2. "ஏழேழு பரவைக்கும்"
3. "மைத்துனன் காமங்கள் மாற்று"
4. "பறைகொண்ட வார்த்தை"
5. "பைங்கமலத் தண்டரையில்"
6. "திருமாலால் எங்கும் திருவருள் பத்தி"
7. "இன்பறவரென்பாவாய்"

என்று எப்படியெல்லாம், பிழை பெருக வாய்வந்தபடி சொல்லுபவர்கள் எங்கும் மலிந்துள்ளார்கள். "பட்டர்பிரான்" என்பதை "பட்டற பிரான்" என்பது. "விட்டு சித்தன்" என்பதை, "விஷ்ணு சித்தன்" என்பது ..ஆக இப்படிப்பட்ட பிழைகளும் அபாரம். விஷ்ணுசித்தன் என்பதுதானே சொல் வடிவம்; அதை அப்படியே சொன்னால் என்ன பிழை? என்று ஆட்சேபிப்பாருமுளர். விஷ்ணுசித்தன் என்பது வடசொல் வடிவமானாலும், தமிழ்ப் பிரபந்தங்களில் வழங்கும் சொல்வடிவம் அதுவன்று; விட்டுசித்தன் என்பதுதான் தமிழ்ச் சொல். முக்தி, பக்தி முதலிய வடசொற்கள் தமிழில் முத்தியென்றும் பத்தியென்றும் உச்சரிப்பாரில்லை. அப்படி உச்சரித்தால் அது பிழையேயாகும். இதுபோலவே விஷ்ணுசித்தன் என்பதும், விட்ணு சித்தன் என்பதும் தவறேயாகும். இப்படிப்பட்ட சொல் தவறுகளையும் எழுத்துத் தவறுகளையும் நாம் எடுத்துக்காட்டப் புகுந்தால் ஓரளவில் அடங்காது. ஆங்காங்கு திவ்வியப் பிரபந்தங்கள் சேவிப்பவர்களைத் தினப்படியாக யாவரும் காணமுடியுமாதலால், இங்கே நாம் எடுத்துக்காட்டிய செய்திகள் அனைவர்க்கும் பிரத்தியட்சமாகக் கூடியவையே. இந்த வியாசத்தை அவரவர்கள் வாசித்துப் பார்க்கும்போது, இனி இப்பிழைகள் புகாதபடி சேவிக்க வேணுமென்று ஆசை கொள்வார்கள். ஆனால் அநாதிவாசனை ஏறிக்கிடப்பதனால், பாசி படர்வதுபோல் பழைய தப்புப்பாடங்களே தலைகாட்டித்தீரும்.

நல்ல விவேகியான ஒரு சுவாமி, திருப்பாவையில், நாயகனாய்ப் பாசுரத்தில் "ஆயர் சிறு மயிரோ உமக்கு" என்றே சேவித்து வந்தார்; அடியேனாலும் தாங்க முடியாமல் ஒருநாள் அவரை அழைத்து, "அப்படிச் சொல்லவேண்டாம்; 'ஆயர் சிறுமீயரோமுக்கு என்னவேணும்' என்று சொல்லி அச்சொல்லின் வடிவத்தையும் பொருளையும் விவரித்தேன். அதுகேட்டு அவர் 'நாற்பது வருஷகாலம் இப்படித் தவறுதலாகச் சொல்லி வந்துவிட்டேனே' என்று மிகவும் அநுதபித்துத் திருத்திக்கொண்டார். ஆனாலும் இரண்டொருமாதம் கடந்தபிறகு அவர் பழையபடியே 'ஆயர் சிறு மயிரோ உமக்கு' என்றே சொல்லத் தொடங்கிவிட்டார். அவ்விடத்தில் திருத்திக் கொண்டதாக ஞாபகங்கூட அவர்க்கு இல்லையாயிற்று.

அவிவேகிகளா யிருப்பவர்கள் வாயில் வந்தபடி சேவிக்கிறார்கள் என்பது வியக்கத் தக்கதன்று. நல்ல விவேகிகளா யிருப்பாருங்கூட "நமது வாயில் என்ன சொல் வருகிறது? அதற்கு என்ன பொருள்?" என்று சிறிதும் ஆராய்ச்சி செய்யாமலே, யதேச்சமாகச் சேவித்துவருகிறார்கள் என்கிற துக்கம் அடியேனுக்கு அபரிமிதம். அடியேனுடைய பாபம் பிறர்வாயில்வரும் பிழைச்சொற்களே காதில்விழப் பிராப்தமாகிறது. அவை கேட்டுப் பொறுத்திருக்கும் இயல்புமில்லை பாவியேனுக்கு. ஆழ்வார்களின் ஈரச்சொற்களுக்கு இப்படியும் சில தண்டனைகள் ஏற்படவேணுமா என்கிற வருத்தம், நெஞ்சில் அபரிமிதமாக உண்டாகிறது. தவறாகச் சொல்லுமவர்

1. பெற்றம் மேய்த்துண்ணும் குலத்திற் பிறந்து
2. ஏழேழ் பிறவிக்கும்
3. மற்றை நம் காமங்கள் மாற்று.
4. பறை கொண்ட வாற்றை
5. பைங்கமலத் தண் தெரியல்
6. திருமாலால் எங்கும் திருவருள் பெற்று
7. இன்புறுவர் எம்பாவாய்

இவைகள் மேற்குறித்தவற்றின் சரியான பாடங்கள் ஆகும்.

கள் ஆப்தர்களா? என்றுகூட ஆலோசியாமல், அவர்களோடு போராடவும், திருத்தங்களைத் தெரிக்கவும் நேர்ந்து விடுகிறது. குணக்கிராகிகளா யிருப்பவர்கள், பொருளின் உண்மைகளைக் கேட்டு உகக்கிறார்கள்; திருத்திக் கொள்ளவும் மனங்கொள்ளுகிறார்கள். ‘இவன் சொல்லி நாம் கேட்பதா’ என்றிருக்குமவர்கள், ‘உன்னுடைய விசுவாமித்திர சிருஷ்டிகள் எம்மிடமும் விலை செல்லுமென நினைக்கிறாயோ?’ என்று வெறுத்துப் பேசுவர்கள். இவற்றால் அடியேனுக்கு இழப்பும் பேறும் யாதுமில்லையாதலால், என் பணியை யான் ஆற்றிக் கொண்டே வருகிறேன்.

தமிழ் வேதமென்றும், வடமொழி வேதத்திற் காட்டிலும் மேம்பட்டதென்றும், நம் ஆசாரிய சார்வபௌமர்கள் பாராட்டின திவ்வியப் பிரபந்தங்களில், நாம் அசிரத்தை காட்டலாகுமோ? எழுத்துக்களையும் சொற்களையும் மனம் போனபடியும் வாய் வந்தபடியும் சொல்லலாகுமோ? புத்தகங்கள் கண்ணாடிபோல் அச்சிடப்பட்டிருக்கின்றன. எழுத்துக்களை ஊன்றிப் பார்த்துப் பிழைபுகாவண்ணம் சிந்தனைசெய்ய வேண்டாவோ? ‘எங்ஙனே சொல்லிலும் இன்பம் பயக்குமே” என்று ஆழ்வார் அருளிச் செய்திருப்பதனால், அபத்தமாகவோ சுபத்தமாகவோ எப்படிச் சொன்னாலும் இன்பமேயாகு மென்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் அபத்தங்கள் புகாவண்ணம் காக்கவே வேண்டும். எம்பெருமான் வாத்சல்ய குணத்தினால் தோஷ போக்யன் ஆயினும், அது கொண்டு நாம் தோஷங்களை மனம் அறிந்து செய்யலாகாதன்றோ?

இது நிற்க. வடமொழியில் பிலுதம் என்பது, தமிழில் அளபெடை எனப்படுகிறது. அதாவது மூன்று மாத்திரை. வேதத்தில் பலவிடங்களில் அளபெடை வரும். அங்கெல்லாம் அது தனிப்படத் தெரியும்படி நீட்டி நிறுத்தி ஓதுவர்கள். திவ்வியப் பிரபந்தங்களிலும் அப்படியேபல இடங்களிலும் அளபெடை வருவதுண்டு. பெரியாழ்வார் திருமொழியில் (5-4-2.) ‘இறவுசெய்யும் பாவக்காடு **தீக்கொளீஇ** வேகின்றதால்’ என்றவிடத்து ‘தீக்கொளீஇ’ என்பதில், ளீகாரத்தை மூன்று மாத்திரை நீட்டி நிறுத்திச் சொல்லவேணும். இப்படி ஓரிடமன்று; ‘தெள்ளீதாக வுள்ளத்தைச் செந்**நிறீஇ**’ (முதல் திருவந்தாதி 30) ‘செந்நெற்கூழை வரம்**பொரீஇ**’ (பெரியதிருமொழி 3-5-8), ‘தோளிசேர் பின்னை பொருட்டெருதேழ் **தழீஇ**’ (திருவாய்மொழி 4-2-5), ‘ஒண்சுடரடிப்போதொன்று விண்**செலீஇ**’ ‘வானவர் முறைமுறை வழிபட **நிறீஇ**’ (திருவாசிரியம் 5) என்றிப்படி பல இடங்களுண்டு. இவ்விடங்களில் அளபெடை இருப்பதாக அறிந்துள்ளவர்கள் மிகச் சிலரேயாவர். அவ்விடங்களைச் சேவிக்கையில் கேட்கும்போது மிகவும் பரிதாபமாகவிருக்கும். நெடில்களை நீட்டுகிற அளவுகூட இல்லாமல், குறிலாகவே சேவிப்பர் பலர். இந்த யுகத்தில் திருந்தக்கூடியதாகத் தோன்றவில்லை இது. நீட்டவேண்டாத இடங்களில் நீட்டுவதோ அபரிமிதம். திருப்பாவையில் (ஏரார்ந்த **கண்ணி**) என்பதை (ஏரார்ந்த **கண்ணீர்**) என்று நீட்டி, கண்ணனைக் கண்டவுடனே யசோதைக்கு ஆனந்தக்கண்ணீர் பெருகிவிட்டதென்று, இவர்களும் கண்ணீர் பெருக்கத் தொடங்கிவிடுவார்கள். திருவாய்மொழியில் ‘மாமணிவண்ணாவுன் செங்கமல வண்ண மென்மலரடி’ என்றவிடத்து, பிரித்து நிறுத்துகையில் செங்கமல**வண்ணா!** என்று திருவாய்ப்பாடி வரையிலோ, திருக்குருகூர் வரையிலோ நீட்டுவர் பலர். இப்படி பொருத்தமில்லாது நீட்டுகிறவர்கள் அளபெடை வருமிடங்களில் நீட்டவேணுமென்பதை அடியோடு அறியாமலேயிருந்து வருகிறார்கள். திருத்தித் தருவாருமில்லை. ஆழ்வார்களின் அருளிச் செயல்களைப் பக்தி சிரத்தையுடன், பொருளுணர்ந்து, பிழையறச் செம்மையாக ஓதுவதும், ஓதுவிப்பதும் அன்பர்கள் அனைவருக்கும் கடமையாகும்.

*

# பேதைமை செய்த பெருங்கண்கள்

'திருமால்நெறிச் செல்வர்' திரு. தி. வேங்கடகிருஷ்ணன் அவர்கள், M.A., B.O.L.

**கண்களின் சிறப்பு :**

'கண்ணிற் சிறந்த உறுப்பில்லை' என்பது கற்றறிந்தோர் கூற்ருகும். மனிதன் சிறந்த முறையில் வாழ்வதற்கு அவனுடைய உறுப்புக்கள் அனைத்தும் அழகுற அமைந்திருக்க வேண்டுவது இன்றியமையாததேயாயினும், கண்கள் பல காரணங்களாற் சிறப்புள்ளன வாகக் கருதப்படுகின்றன. கண்களின்றேல் கவினுறு காட்சிகளையும் பொருள்களையும் கண்டு களிக்க முடியுமா? அம்மட்டா? உள்ளத்தூறும் உணர்ச்சிகளை உணர்த்துவதும் கண்களே யன்ருே?'அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சங் கடுத்தது காட்டும் முகம்' என்னும் குறளில் நெஞ்சங் கடுத்ததை முகங் காட்டும் என்று கூறப்பட்டிருப்பினும், முகத்திலுள்ள கண்கள் அல்லவோ அதைக் காட்டுகின்றன. இன்பத்தையும் துன்பத்தையும் இயல்புறக் காட்டுவன கண்களல்லவோ. 'அன்பிற்கு முண்டோ அடைக்குந்தா ழார்வலர் புன்கணீர் பூசல் தரும்' என்னும் குறளில் அகத்துறை அன்பை அறிவிப்பன அரிய கண்களல்லவோ: ''கண்ணுடையர் என்பவர் கற்ருேர்......'' என்னும் குறளிலும் கண்களின் பெருமை தானே பேசப்படுகின்றது. கல்லாதவர் முகத்திரண்டு புண்ணுடையர் என்று, கண்ணைப் புண்ணுகத் தாழ்த்தி உரைத்தாலும், முகத்திற்கு அழகுதருவது கண்ணே என்பது பெறப்படுகிறதல்லவா?

கண்களே யாவற்றினும் அருமையானவை என்பதைப் பல எடுத்துக் காட்டுகளால் எளிதில் உணர்த்தமுடியும். ஒரே ஒரு எடுத்துக்காட்டு:'இராமனின் பரக்கும் தொல் புகழ் அமுதினைப்பா ரெல்லாம் பருகக்' காரணமாக இருந்த இரக்கமற்ற கைகேயி, தசரதனிடத்தில் ''என் சேய் உலகாள்வது; சீதை கேள்வன் ஒன்ருல் போய் வனம் ஆள்வது எனப் புகன்று..'' நின்றபோது பல்லாற்ருனுந் துன்பமுற்றுப் பின் இரந்தேனும் இக்கொடுமையை விலக்க வேண்டுமென்று எண்ணிய தசரதன் அவளை நோக்கிக் கூறுமிடத்து,

> ''கண்ணே வேண்டும் என்னினும்
> ஈயக் கடன்வேன்
> உள்ளோர் ஆவி வேண்டினும்
> இன்றே யுனதன்ருே''

என்று கூறும் சொற்கள் நோக்கற்பாலன. ஆவிக்கு அடுத்தாற் போன்று அருமையாகக் கருதப்படுவது கண் என்று புலனுகின்றதன்ருே!

இனி இக்கண்களே, பிறரைக் கவர்வதற்கும், அச்சுறுத்துவதற்கும், சினங் கொள்ளச் செய்வதற்கும் காரணமாக உள்ளன என்பதை இலக்கியங்களைக் கொண்டு எளிதில் அறியலாம்.

விசுவாமித்திரன், தசரதன்பால் தான் செய்யும் வேள்வியை இடையூறின்றிக் காத்தளிக்க உதவுமாறு, மன்னனின் கண்ணெனத் திகழும் கார்மேனிவண்ணனை அனுப்பி வைக்குமாறு கேட்கிருன். அச்சொல் அவனுடைய மார்பகத்தில் எறிவேல் பாய்ந்தா லொத்துத் துயரந்தர, அவன் ''கண்ணிலான் பெற்றிழந்தான் என உழன்று'' தானே வந்து உதவுவதாகக் கூறுகிருன். அதைக் கேட்ட முனிவன் சினங்கொள்கிருன். அப்பொழுது அவனுடைய சிவந்த கண்களைக் கண்டு தேவரும், யாவரும் அஞ்சினர் என்பதை அறிகிருேம். ஈண்டு, சிவந்த கண்களே பிறரை அச்சுறுத்துகிறதன்ருே!

**உறங்கா வில்லிதாசர்:**

இனி, கண்ணழகால் கவரப்பட்டோர் செய்தியைக் காண்போம். விசிஷ்டாத்துவைதக் கொள்கையை வீறுடன் நிறுவிய இராமாநுசர் வாழ்ந்த காலம் அது. கருடன் மீது அமர்ந்து, கார்முகில் வண்ணன் காட்சி தரும் விழா நாள். பக்தர்களின் கூட்டம் பரவசத்துடன் பலவிடங்களிலும் குழுமியிருந்தது. நண்பகல் நேரம். வெய்யோன் தன் வெங்கதிர்களைப் பொழிந்து பக்தர்களின் பக்தியைச் சோதித்துக் கொண்டிருந்தான். அவ்வமயம் கட்டிளங்காளை ஒருவன் கையிற் குடையும் விசிறியும் கொண்டு, தன் காதலியின்மீது கதிரவனின் கரங்கள் படாதவாறு குடை பிடித்துக் கொண்டும், அவ்வப்போது விசிறியினுல் அவளுடைய முகத்தில் மென்மையாக வீசிக்கொண்டும் சென்று கொண்டிருந்தான். துறவிகளுக்கெல்லாம் அரசராக மதிக்கப்படும் எதிராசர் இதைக் கண்ணுற்றுத் துணுக்குற்ருர். அழியா அழகும் அருள் உள்ளமும் படைத்த எம்பெருமானுக்குச்

சமர்ப்பிக்க வேண்டிய திருவால வட்ட கைங்கரியத்தையும், குடை கவிப்பதையும், கணந்தோறும் அழிந்துகொண்டேயிருக்கும் இக்காரிகைக்குச் செய்கிறனே, இப்பெருங்கூட்டத்தினர் இதைக்கண்டு எள்ளி நகையாடுவார்களே என்று எள்ளளவும் வெட்கமில்லாதிருக்கின்றனே, இவன் என்று வியப்புற்று, அவனை அழைத்து அவன் தன்னுடைய செயலுக்கு ஏன் நாணவில்லை என்று கேட்டார்.

அதற்கு அவன், ''பெரியீர், இப்புவியில் உள்ள அழகிய பொருள்கள் அனைத்தையும் வென்று அழகுற மிளிர்கின்றன இவளுடைய கண்கள். அக்கண்ணழகால் கவரப்பட்ட நான் வேறெதையும் காண்கிலேன். என் கண்கள் என் வயமில்லையே'' என்றான். பின்னர் இராமானுசர் கேட்ட கேள்விக்கு விடையாக அவன், தன் பெயர் வில்லிதாசன் என்றும், தன்னுடைய மனைவியின் பெயர் ஏமாம்பாள் என்றும் கூறினன்.

இராமானுசர் அவனை நோக்கி, ''வில்லிதாசரே, இவளுடைய கண்களைக் காட்டிலும் அழகுமிக்க கண்களைக் காட்டினல், அக்கண்ணுடையாரைக் காதலித்து இவளைக் கைவிடுவீரா?'' என்று கேட்க, அக்கண்களினும் மிக்க அழகுடைய கண்ணுடையவர் எவரும் இரார் என்று உறுதியாக எண்ணிய அவனும், அவ்வாறே செய்ய இசைந்தான்.

அன்று இரவு இராமானுசர் அவனை அரங்கநாதன் சந்நிதிக்கு அழைத்துச் சென்று அரங்கநகர் அப்பனின் அருள்பொழியுங் கண்களைக் காட்ட, நல்லூழால் அவனுக்கு அக்கண்களில் என்றுங் குன்ரு எழில் தோன்ற, அவற்றில் ஈடுபட்டுத் தன்மனைவியின் கண்கள் இரவிக்கெதிர் மின்மினிபோல் எழிலற்றிருக்கக் கண்டு, எதிராசரைச் சரணடைந்தான். ஏமாம்பாளும் அவ்வாறே இராமானுசரின் சீடராக ஆனள் என வரலாறு கூறும்.

### திருப்பாணாழ்வாரின் ஈடுபாடு:

இவ்வாறு காரிகையின் கண்களில் ஈடுபட்ட காமுகனைக் கவர்ந்து உய்வித்த திருவரங்கத்துச் செல்வனின் திருக்கண்களில் ஈடுபடாதார் யாரே உளர்! பக்தியிற் சிறந்த திருப்பாணாழ்வார், பரந்தாமனல் அருள் பாலிக்கப்பெற்று, லோகசாரங்க முனிவரால் தோள்மீதேற்றிக் கொள்ளப்பட்டுத் திருவரங்கனின் பக்கலில் கொண்டு வந்துவிடப்பட்டு அவனது திருமேனியழகை அடிமுதல் முடிவரை ஒவ்வோர் உறுப்பாகப் பார்த்துப் பார்த்துப் பரவசமடைந்தார். பரவசத்தினல் பாட்டுக்கள் வெளிவந்தன. அவருடைய கண்கள் திருமாலின் திருக்கண்களில் பதிந்தன. அக்கண்களின் அழகுதான் என்னே. 'கரியவாகியும் புடைபரந்தும் மிளிர்கின்றன! அதில் செந்தாமரை மலரிலுள்ளது போன்று செவ்வரிகள் ஓடியிருக்கின்றன. அவை காதளவோடு நீண்டுள்ளன. கஞ்சத்தின் அளவிற்றேனும் கடலினும் பெரிய கண்களாய் அவை உள்ளன. இத்தனை அழகையுங் கண்ட அவருடைய சித்தம் பேதைமை அடைகிறது. ஈண்டு, பேதைமை என்பது தனக்கு ஏதும் தெரியாமல், அறிவற்றவன் என்று எண்ணும் நிலையேயாகும். பேதைமையிலும் அப்பெரியாருடைய திருவாயிலிருந்து பக்திச்சுவை சொட்டும் பாசுரம் வெளிப்படுகிறது. அப்பாட்டைக் கேட்போம்.

**''பரியனுகி வந்த அவுணனுடல்**
**கீண்ட அமரர்க்கு**
**அரிய ஆதிப்பிரான் அரங்கத்து**
**அமலன் முகத்துக்**
**கரிய வாகிப் புடைபரந்து மிளிர்ந்து**
**செவ்வரியோடி நீண்டவப்**
**பெரிய வாய கண்கள் என்னைப்**
**பேதைமை செய்தனவே''**

என்பது அப்பெரியாரின் பாசுரமாகும்.

கஞ்சனின் தூண்டுதலால், குதிரை வடிவில் வந்து தன்னைக் கொல்ல நினைத்த அசுரனைக் கண்ணன் கொன்றான். கொன்ற வெம்மை சிறிதுமின்றி, அமரர்களுக்கும் அறிதற்கரியவனுகிய அவ்வாதிப் பொருள் திருவரங்கத்தே அருள்பொழியுங் கண்ணுடன் பள்ளி கொண்டிருப்பதைக் கண்டு திருப்பாணாழ்வார் தம் மனத்தைப் பறிகொடுத்து இவ்வாறு பாடுகிறர்.

அரங்கனின் பெரியவாய கண்கள் செய்வித்த பேதைமையா லன்றோ பெறற்கரிய பேறு பெற்றனர் பெரியோர் பலரும்.

---

**அருள்மிகு தேவிகருமாரியம்மன் திருக்கோயில் திருவேற்காடு, சென்னை-77.**
**உண்டியல் வருமானம்**

**23.5.1973-லிருந்து 5.6 1973 முடிய**

| | | |
|---|---|---|
| 1. | ரொக்கம் | ரூ. 15,906.93 |
| 2. | பொன் உருப்படிகள் கிராம் | 113 கிராம் 400 மி.கிராம் |
| | கில்டெட் | 7 கிரா 700 மி.கிராம் |
| 3. | வெள்ளி உருப்படிகள் கிராம் | 520 கிராம் |

**20.6.1973 லிருந்து 5.7.1973 முடிய**

| | | |
|---|---|---|
| 1. | ரொக்கம் | ரூ. 16,614-12 |
| 2. | பொன் உருப்படிகள் கிராம் | 21.மி.கிராம் 060. |
| 3. | வெள்ளி உருப்படிகள் கிராம் | 737 |

**(ஒ-ம்) டி. பி. வேங்கடாசலம்,** செயல் அலுவலர்.

# சிவஞான ஜனநாயகம்

'ஆராய்ச்சிப் பேரறிஞர்' திரு. மு அருணாசலம் அவர்கள், M.A.

சேக்கிழாருடைய பெரிய புராணம் ஒரு பக்திப் பெருங்காப்பியம். இறையன்பும் இறையடியார் அன்புமே உயிர்நாடியாயுள்ள பெருஞ் சரிதம். சேக்கிழார் பெரியபுராணத் திற் சிருட்டிப்பது ஒரு புது ஜனநாயக உலகம். இவ்வுலகில் அனைவரும் சமமே. இன்று இந்தியக் குடியரசின் வாக்காளராயிருக்க இரு தகுதிகள்-இந்தியக் குடிகள் அல்லது குடிமகளாயிருத்தலும், இருபத்தொரு வயது கடந்திருத்தலும், வேண்டுமென்பர். அதுபோல, சேக்கிழாரின் ஜனநாயக அரசில் உரிமை பெற்றவர் இரண்டே தகுதியுடையவர், ஒன்று தமிழ் மகன் அல்லது மகளாய்ப் பிறந்திருத்தல்; இரண்டு சிவபிரானிடத்து, சிவனடியாரிடத்து, சிவ சின்னங்களிடத்து, மாறாத அன்பு பூண்டிருத்தல். அறுபத்துமூன்று நாயன்மார் சரிதத்தில் இவ்விரு தகுதிகளையும் காண்கிறோம்.

இந்த நாயன்மாருள் ஆடவரும் உள்ளனர், முன் குறிப்பிட்டவாறு பெண்களும் உள்ளனர், குழந்தைகளும் உள்ளனர்; சிறுத்தொண்டரின் மகனான சீராளதேவன், அப்பூதியின் பிள்ளைகளான திருநாவுக்கரசு பலர், அமர்நீதியோடு துலாக்கோல் தட்டில் ஏறிய அவர் புதல்வர், பூம்பாவை, சுந்தரர் முதலை வாயிலிருந்து மீட்ட பிள்ளை, சுந்தரர் தமது மக்களாக ஏற்றுக்கொண்ட கோட்புலிநாயனாரின் புதல்வியரான சிங்கடி வனப்பகை முதலியோர். சண்டேசரைக் கோயிலில் நாம் வழிபடும் கடமையுடையவர்களாதலால், அவரும் பெரிய புராணத்தில் ஒரு குழந்தை என்பதை மறந்துவிடுகிறோம்; சிறிய பெருந்தகையார் என்றும், சிறிய பெருந் தோன்றலார் என்றும் சேக்கிழார் குறிப்பிடுகிறார். சம்பந்தரே குழந்தையல்லவா? மூன்று வயதில் சிவஞானப் பாலுண்டு 16இல் முத்தியடைந்த திருஞானசம்பந்தரும், 81 வயதில் ''பூம்புகலூர்ப் புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்'' என்று சென்று மறைந்த அப்பரும் இருக்கின்றார்கள். அந்தணர் பன்னிருவர், ஆதிசைவர் நால்வர், வேளாளர் 13, முடியரசர் 6, குறுநிலமன்னர் 5, வணிகர், 5, இடையர், 2, ஏகாலியர், குயவர், சாலியர், சான்றார், செக்கார், நுளையர், பாணர், புலையர், வேடர், மாமத்திரர்—ஆகியோர் ஒவ்வொருவர். மரபறியாதவர் அறுவர்; இனி இவர்களில் சோழ நாட்டினர் 31, நடுநாடு 8, தொண்டைநாடு 7, பாண்டி நாடு 4, மலைநாடு 2, கோனாடு, மழநாடு 1; நாடு குறிக்கப்படாதவர் 9 பேர், இவர் அனைவரும் தமிழ் நாட்டினரே. இது குலத்தாலும், வயதாலும், பால் பிரிவாலும், இடத்தாலும் பெறும் ஜனநாயகத்தைக் காட்டும்.

வழிபாட்டு முறையாலும் இவர்கள் எவ்வளவோ வேறுபட்டவர்கள், அப்பூதி, கணநாதர், சோமாசி மாறர் போன்ற பன்னிருவர் குருவருளால் முத்தி பெற்றோர். சிவனடியார் வழிபாட்டால் முத்திபெற்றோர் காரைக் காலம்மை, அமர்நீதி மெய்ப்பொருள் முதலான பத்தொன்பதின்மர். சிவலிங்க வழிபாட்டால் முத்தியடைந்தோர் ஏனைய முப்பத்திருவர். திருமுறைப்பாடல் பாடினோர் திருமூலர், அம்மை, சம்பந்தர், அப்பர், சுந்தரர், சேரமான், ஐயடிகள் காடவர்கோன் ஆகிய எழுவர். கொள்கைக்காக உயிரைத் துறந்தவர் ஏனாதிநாதர், புகழ்ச் சோழர், மெய்ப்பொருள் ஆகிய மூவர். வல்வினை செய்து உயர்ந்தோர் ஏயர்கோன், எறிபத்தர், மூர்த்தி, கண்ணப்பர் முதலான பதினெழுவர் காலத்தால் மிகவும் பழமையான வரலாறுகள் கண்ணப்பர் சண்டேசர் என்ற இருவர் வரலாறுகள்; இவ்விரு வரலாறுகளும் சம்பந்தருக்கு ஆயிரம் ஆண்டு முற்பட்டிருத்தலும் கூடும்; பின்னும் எழுவர் சம்பந்தருக்கு முற்பட்டவர். அவர் காலத்தோர் அப்பர், அப்பூதி, முருகர் சிறுத்தொண்டர் போன்ற பன்னிருவர்; அவருக்குப் பின்னர் சுந்தரமூர்த்தி காலத்திலும் இருந்தவர் சேரமான், கோட்புலி, நரசிங்க முனையரையர் போன்ற பதின்மூவர். காலம் தெரியாதோர் ஏனைய இருபத்தொன்பதின்மர். எனவே இவர்கள் அனைவரும் காலத்தால் எவ்வாறு வேறுபட்டவர் என்பதை நன்குணரலாம். கூட்டமாக உள்ள அடியாரைப் (தொகையடியார்) பார்க்குய போது, முப்போதும் திருமேனி திண்டுவாரும் தில்லைவாழந்தணரும் சிவாசாரியர். ஏனைம் ஏழு கூட்டத்தாரில் எல்லாக் குலத்தாரும் அடங்குவர்.

**மூவேந்தர் தமிழ்வழங்கும் நாட்டுக் கப்பால்**
**முதல்வனார் அடிச்சார்ந்த முறைமை யோரும்**
**நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையிற் கூறும்**
**நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும்,**
**பூவேய்ந்த செஞ்சடைமேல் அடம்பு தும்பை**
**புதியமதி நதிஇதழி பொருந்த வைத்த**
**சேவேந்து வெல் கொடியான் அடிச்சார்ந்தாரும்**
**செப்பிய அப்பாலும் அடிச் சார்ந்தார் தாமே.**

இங்கு, சேக்கிழார் சொல்வது. 'தமிழ் வழங்கும் நாட்டுக்கப்பால் முதல்வனார் அடிச்சார்ந்த முறைமையோர் என்பதும், காலத்தால் திருத்தொண்டத் தொகையில் கூறும் தொண்டர் காலத்துக்கு முன்னிருந்தாரும் பின்னிருந்தாரும் என்பதும்; இவர்கள் அனைவரும் அப்பாலும் அடிச்சார்ந்தார் என்பது கருத்து.

இங்கு சேக்கிழார் உபயோகிக்கும் சொற்களை நன்கு கருதவேண்டும், அப்பாலும் அடிச் சார்ந்தார் இருவகை. முதல் வகை தமிழ் வழங்கும் நாட்டுக்கு அப்பால் உள்ளவர்கள். இவர்கள் 'முதல்வனார் அடிச் சார்ந்த முறைமையோராவர்'. இங்கு நம்மாசிரியர் சிவபெருமான் அடிச்சார்ந்தார் என்று இறைவனுடைய சிறப்புப் பெயரைச் சொல்லவில்லை. ஆகவே, இவர்கள் எந்தச் சமயத்தராய் இருந்தாலும், இவர்கள் அனைவரும், சைவர்களைப் பொறுத்தவரையில், அப்பாலும் அடிச்சார்ந்தார் என்று சுந்தரரால் போற்றப் பெற்ற தொண்டர் இனத்தைச் சேர்ந்தவர்கள். உதாரணமாக நாம் சொல்லக் கூடியவர்கள், இருபத்து நாலுமணி நேரமும் இறை உணர்வோடு வாழ்ந்த காந்தியடிகள்; காளி தேவியின் அடிமையாக இருந்த இராம கிருஷ்ண பரமஹம்சர்; ஒரு கன்னத்தில் அடித்தால் மற்றொரு கன்னத்தையும் காட்டு என்று சொன்ன ஏசுநாதர்; எல்லா உயிர்களையும் இறைவன் வடிவாய்க் கருதி அன்பு செய்த அஸ்ஸிஸி நகரத்து பிரான்ஸிஸ் முனிவர்— ஆகிய அனைவரும்சைவர் வணங்கத்தக்கநாயன்மாரே. 15ஆம் நூற்றுண்டில் தென் காசிக் கோயில் கட்டிய பராக்கிரம பாண்டியன் பிற்காலத்தில் எப்போதேனும் திருப்பணி செய்பவர்களுக்கும் சேர்த்து, 'வாராததோர் குற்றம் வந்தால் அப்போதே வந்தங்கு அதனை ஒழித்துப் புரப்பார்களைப் பாரார் அறியப் பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே'' என்று பாடி வைத்தமைபோல, நம் சுந்தர மூர்த்தி சுவாமிகளும் 'அப்பாலும் அடிச் சார்ந்தார் அடியார்க்கும் அடியேன் என்று பாட, சேக்கிழார் பெருமான் இத்தொடருக்கு இவ்வளவு அருமையான விளக்கம் கொடுத்திருக்கிறார்.

**இனி**, பாடலின் இரண்டாம் பகுதி, சுந்தரர் காலத்துக்கு முன்னும் பின்னும், 'சேவேந்து வெல்கொடியான் அடிச் சார்ந்தாரும் அப்பாலும் அடிச் சார்ந்தார்' என்பது இக்கருத்து. சங்ககாலம் முதலிய காலங்களில் நாம் காண்கின்ற சைவப்புலவர்களும், சைவ அரசர் அடியவர் போன்ற பெருமக்களும் சைவர்களாகவே வாழ்ந்து நாடெங்கும் மலை மலைகளான சிவாலயங்களைக் கட்டி நாடெங்கும் சிவமணம் கமழச் செய்த சோழமன்னர்களும், செம்பியன்மாதேவி போன்ற அரசியரும், சைவ நாயன்மாரே ஆவர். செம்பியன் மகாதேவியார் வரலாற்றை அறிந்தவர்கள் தங்கள் இல்லத்தில் அவர் திருவுருவம் வைத்துப் பூசிப்பர் என்பது உறுதி. அவர் சேக்கிழாருக்கு நெடுங்காலத்துக்கு முன் வாழ்ந்தும்கூட, அவரை நாயன்மார் வரிசையில் இவர் சேர்க்காத காரணம், அவர் திருத்தொண்டத் தொகையில் கூறப்பெருத தொன்றே.

இனி, பிற்காலத்தவராய உய்யவந்த தேவர் ஒட்டக்கூத்தர், மெய்கண்டார், அருள் நந்தி, அவ்வையார், அருணகிரி, கச்சியப்பர், தாயுமானவர், பரஞ்சோதியார் என்ற எண்ணற்ற பெருமக்கள் இந்த வரிசையில் சேரத் தக்கார்.

'அப்பாலும்' என்பதைச் சைவ சமயத்துக்கு அப்பாலும் இருந்து கடவுளை வழிபட்டவர் என்று நாம் பொருள் கொண்டால், உலக முழுமையும் உள்ள இறையடியார்களை ஒரு குலமாகத்தழுவிக் கொண்டவர்கள் ஆவோம். ஆன்மார்த்தத் துறையில் ஒரே குலம் என்ற கொள்கையும் இதுவே. இதற்குச் சமயாசாரியர் இருவர் சம்மதமும் உள்ளது என்பதை, 'புத்தன் மறவாதோடி எறி சல்லி புது மலர்கள் ஆக்கினன் காண்' என்ற திருத்தாண்டகத்தாலும், 'உமைபங்கன் கழலே மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன்' என்ற திருத்தொண்டத் தொகையினாலும் அறியலாம்.

தொடக்கத்தில், சேக்கிழார் காட்டுகின்ற சிவஞான ஜனநாயகத்தில் இடம்பெற இரு தகுதிகளை யாம் குறிப்பிட்டோம். தமிழ் நாட்டிற்பிறக்க வேண்டும். சிவபிரான் சிவனடியாரிடத்து அன்புபூண்டொழுகவேண்டும் என்பன அவை. இரண்டிலிருந்துமே சேக்கிழார் விதிவிலக்குத் தருகிறார்; எந்த நாட்டிலும் பிறந்திருக்கலாம்; எந்தத் தெய்வத்தையும் வழிபடலாம்: ஆனால் வழிபடுவதே முக்கியம்.

இதுவே சேக்கிழார் செய்த பெரிய புராணம் என்ற பக்திக் காவியம் காட்டுகின்ற சிவஞான ஜனநாயகம். இத்தகையதொரு ஜனநாயகம், தமிழ் இலக்கியத்தில் மட்டுமின்றி, உலக இலக்கியங்களிலும் வேறு எங்குமே காண்பதரியலாது. ★

# விளக்கை விளக்கும் விளக்கு

மாட்சிமிகு நீதிபதி திரு என். மகாராசன் அவர்கள், B.A., B.L.,
உயர்நீதி மன்றம், சென்னை-1.

மனித உணர்ச்சிகளை அப்படி அப்படியே எடுத்துச் சொல்லுவதற்கு மனித மொழிக்குப் போதிய ஆற்றல் ஏற்படவில்லை. கேவலம் வயிற்று வலியை எடுத்துக் கொள்வோம். அதன் பம்மல்கள், பாய்ச்சல்கள், துள்ளல்களையெல்லாம் சொல்லாலே விளக்க முடிவதில்லை. நல்ல வேளையாக டாக்டருக்கும் நம்முடைய அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான், வயிற்று வலி என்று சொன்னவுடனே, அவருக்கு நம்முடைய நோய்க்கூறு விளங்கிவிடுகிறது. தகுந்த மருந்தைக் கொடுத்து, எப்படியோ குணப்படுத்தி விடுகிறார்.

காலத்துக்கும் இடத்துக்கும் கட்டுப்பட்ட வயிற்று வலி அனுபவத்தையே சொல்லினால் நமக்கு வருணிக்க முடியவில்லையென்றால், காலத்தையும் இடத்தையும் கடந்து நிற்கும் அனுபவங்களைப் பற்றி எப்படிச் சொல்லுவது? அனுபவப் பாதையிலே சென்ற நம் ஞானிகள் இந்தப் பிரச்னையை எவ்வாறு சமாளித்திருக்கிறார்கள் என்று பார்ப்போம்.

அவர்கள் செய்த முதற்காரியம் என்னவென்றால் இளைச்சுப்போன உரைநடையை ஒதுக்கிவிட்டு, உணர்ச்சி ததும்பும் கவிச் சொல்லிலே பேசினார்கள். மேளதாளங்களோடு கவி பேசும்போது, வெற்றுச் சொல்லுக்கில்லாத திறமையும் வேகமும் அதற்கு ஏற்பட்டு விடுகிறது.

''பேச்சுமூச்சற்ற பேரின்ப வெள்ளமுற்று
நீச்சுநிலை காணமல் நிற்கும்நாள் எந்நாளோ?

என்று சொல்லி ஏங்குகின்றார் தாயுமானவர். வெள்ளத்தைப் பார்த்திருக்கிறோம். அதில் தழுவி விழுந்து நீச்சு நிலை காணமல் தத்தளித்திருக்கிறோம்; பேச்சு மூச்சில்லாமல் திக்குமுக்காடி யிருக்கிறோம். இந்த அனுபவத்தை ஜாடையாகக் காட்டிவிடுகிறார் கவிஞர்.

சில ரகசியங்களை வெட்ட வெளிச்சமாகச் சொல்லிவிட்டால், மக்கள் அவற்றை மதிக்காமல் போய்விடுவார்களோ என்ற அச்சம் நம் ஞானிகளுக்கு இருந்திருக்கிறது. ஆகவேதான், உண்மைகளைப் பாதி மறைத்தும் பாதி மறைக்காமலும், குறியீடுகள் மூலம் சுட்டிக் காட்டுகிறார்கள். அவர்கள் சொல்லினால் போடும் முடிச்சுகளை, குருவின் உதவியில்லாமல், அவிழ்க்க முடியாது. உதாரணமாக ஞானப்பயிற்சியொன்றைச் சிவவாக்கியர் எப்படி விவரிக்கிறார் என்று பார்ப்போம்.

''மூலமாங் குளத்திலே முளைத்தெழுந்தகோரையை
காலமே எழுந்து நாலுகட் டறுப்பீரேல்
பாலனாகி வாழலாம் பரப்பிரம்ம மாகலாம்
ஆலமுண்ட கண்டர்பாதம் அம்மைபாதம்
உண்மையே''

மிகுந்த நிச்சயத்தோடு அம்மையப்பர் பாதத்தில் அடித்துச் சத்தியம் பண்ணிக் கொடுக்கிறார் சிவவாக்கியார். ஆனால் மூலமாகிய குளம் எங்கே இந்த உடலில் இருக்கிறது. குளத்தில் முளைத்தெழுந்த கோரை எது, அதில் நாலுகட்டு அறுப்பது எப்படி, அறுத்தால் எவ்வாறு பரப்பிரம்மம் ஆகலாம் என்பதெல்லாம், கேவலம் புலமையினால் அறியக்கூடிய காரியங்கள் அல்ல. இதைப் போலவே, பாம்பாட்டிச் சித்தர் சொல்லினால் செய்கிற நெசவும், நம்மைத் திணறடிக்கிறது.

''வடக்கும் கிழக்குமாய் நூலிழைப்போம்
மற்றுஞ் சுழலிலே பாவு பூட்டுவோம்
நடக்கும் வழியிலே யுண்டை சேர்ப்போம்
நடவா வழியிலே புடைவை நெய்வோம்''

என்று பெருமிதத்தோடு அவர் பாடுகிறார். ''நடவா வழியிலே எப்படிப் புடவை நெய்

வது?'' என்று நாம் புருவத்தை நெரித்துக் கொண்டிருக்கும் போது, இடைக்காட்டுச் சித்தர், "வெட்ட வெளிக்குள்ளே பால்கற'' என்று ஒரு போடு போடுகிறார். சித்தர்கள் தான் இப்படியெல்லாம் சொல் மரபைச் சிதறடிக்கிறார்கள். சொல்லைத் தாறுமாறாய்ப் பயன்படுத்துகிறார்கள் என்று நினைப்பது தவறு. ஞானப்பாதையில் நடந்த கவிஞர்கள் எல்லோருமே, திருமூலரிலிருந்து இராமலிங்க அடிகள் வரை இந்தப் பொல்லாத பிரவர்த்தியில் ஈடுபடுகிறார்கள்.

''ஆறு தெருவில் அகப்பட்ட சந்தியில்,
சாறு படுவன நான்கு பனையுள;
ஏறற் கரியதோர் ஏணியிட்டு, அப்பனை
ஏறலுற்றேன்; கடல் ஏழுங் கண்டேனே!''

என்று முழங்குகிறார் திருமூலர். அவர் ஏறிய ஏணி மேல் ஏறிக் கடல் ஏழையும் அதாவது ஏழு நிலைகளையும் கண்டிருக்கிறார் இராமலிங்க அடிகளும். ஆனால், தான் கண்ட காட்சியை அடிகள் விவரிக்கும் முறை வேறு.

''சோதி மலையொன்று தோன்றிற்று, அதிலொரு
வீதி யுண்டாச்சுதடி—அம்மா
வீதி யுண்டாச்சுதடி''

அந்த வீதியில் செல்லும்போது வீதியின் நடுவே, ஒரு மேடையைக் கண்டார். அந்த மேடை மேலேறினால், ஒரு கூடம்;

''கூடத்தை நாட, அக்கூடம்மேல் ஏழ்நிலை
மாடமிருந்ததடி அம்மா
மாடம் இருந்ததடி''

ஒவ்வொரு நிலையிலும் ஒரு அற்புதக் காட்சியைக் கண்டார்; கருநீலம் செய்ய பவளமாயிற்று; மரகதப் பச்சை செம் மாணிக்கமாயிற்று; பெருமுத்துவச்சிரம் பேர் மணியாயிற்று; பவளத்திரள் வெண்மணி யாயிற்று; பன்மணி பொன்மணியாகவும், பகர்மணி படிகமாகவும் ஆயிற்று என்று சொல்லிக் கூத்தாடுகிறார் இராமலிங்கசுவாமிகள். அவருடைய அனுபவத்திலே அவருக்கு எவ்வளவு நிச்சயமும் தெளிவும் இருக்கிறது என்பதற்கு அவருடைய பாடலே சாட்சி. ஆனால், பாடலைப் படிப்பவர்களுக்குப் பொருள் எளிதாக விளங்குவதில்லை. ''புலன் அறிவே அறிவு'' என்றிருக்கும் நமக்குப் புலனுக்கு எட்டாத அனுபவங்களை ஞானிகள் எடுத்து விளக்க வேண்டியிருக்கிறது. அதுவும் நம்முடைய பொய்மை மிகுந்த சொல்லிலும், மொழியிலும் விளக்க வேண்டியிருக்கிறது; நம்முடைய மொழியோ மாசு நிறைந்தது; ஒன்றாகக் காணும் ஆற்றல் அற்றது, பேதம் நிறைந்தது; நான் என்றும் நீயென்றும் சொல்லிச் சொல்லிப் பேதத்தைப் பெருக்கி மயக்கத்தை வளர்ப்பது. பேதமற்ற காட்சியைப் பேதம் நிறைந்த சொற்களில் எப்படிச் சொல்லுவது? சொல்லைத் தறித்து, முறித்துத் தலை கீழாகத் தொங்கவிட்டால், நமக்கு ஒரு அதிர்ச்சி ஏற்படுமல்லவா? அதிர்ச்சியிலே நம்முடைய புலன் மரபு கெட்டு, ஆணவம் தடுமாறி உண்மைக் காட்சியைக்கூட ஒரு வகையாக நாம் உணர்ந்து விடலாம் என்று ஞானிகள் எதிர் பார்க்கிறார்கள். சக்கிமுக்கிக் கல்லை உரைசி, தீ உண்டாக்குவது போல, சொல்லோடு சொல்லை எப்படித் திருமூலர் உரைசுகிறார் என்று பாருங்கள்.

''எழுதாத புத்தகத் தேட்டின் பொருளைத்
தெருளாத கன்னி தெளிந்திருந்தோத
மலராத மொட்டின் மணத்தின் மதுவைப்
பிறவாத வண்டு மணமுண்ட வாறே''

என்பது திருமந்திரம். எழுதாத புத்தகத்துக்கு ஏடேது, தெருளாத, அதாவது தெளிவில்லாத கன்னி எப்படித் தெளிந்திருந்து ஓதினாள்? மலராத மொட்டுக்கு, மணமேது? பிறவாத வண்டு, மணத்தையாவது உண்பதாவது? இப்படி இடக்குத்தனமாகச் சொல்லையாண்ட தமிழ்க் கவிஞர்கள் வேறொருவருமே இல்லை—திருமூலரைத் தவிர. சொல்லதிர, நம் மனமதிர இப்படியெல்லாம் பேசிவிட்டு, ''நல்ல குருவை நாடிக் கேள். பொருள் விளங்கிவிடும்'' என்று சொல்லி நமக்கு ஆறுதல் வேறு கொடுக்கிறார் திருமூலர்.

இப்படி அவர் உபதேசம் செய்யும் போதே, சொல்லை வைத்து ஒரு விளையாட்டு விளையாடுகிறார். ''பெருண்மை என்ற விளக்கு இருக்கிறதே, அது கோடி சூரியப் பிரகாசத்தோடு ஒளி வீசிக் கொண்டு நிற்கிறது. ஆனால், அது உங்கள் குருட்டுக் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. உங்களுக்கு அந்த உண்மையைக் காட்டுவதற்காகவே தீவட்டி வைத்துக் கொண்டு காத்திருக்கிறார்கள் குருமார்கள். 'அவர்கள் விளக்கினால், விளக்குடையவனாகிய இறைவன் உங்கள் கண்ணுக்கும் காட்சியளிப்பான்'' என்று சொல்லுகிறார். ஆனால், இப்படியா சுவையில்லாமல் அவர் சொல்லுவார்!


''விளக்கை விளக்கும் விளக்குடையார்கள்
விளக்கில், விளங்கும் விளக்கவர்தாமே''

என்று பாடுகிருர்.

ஆசான் மூலமாக அறியவேண்டிய இரகசியங்களுக்குத்தான் மூடாக்குப் போடுவார்கள் நம் ஞானிகள். ஆனல், ஆன்ம உலகத்தில் அவர்கள் கண்ட அடிப்படை உண்மைகளை, முடிந்த முடிவுகளை, சித்தாந்தத்தை மனந் திறந்து வாய்விட்டுப் பேசுகிருர்கள். மனிதனுக்குத் துன்பத்தைத் தருவது அவனுடைய ஆணவமே—'' நான் '' என்ற மயக்கமே. அந்த மயக்கத்திலிருந்து விடுதலை யடைந்தவுடனேயே, அவனுக்கு ஆனந்தம் கைகூடி விடுகிறது. பரம்பொருளாவது பேரண்டம் முழுவதுமே முட்டித் ததும்பிக்கொண்டு நிற்கிறது; ஒவ்வொரு அணுவுக்குள்ளும் தோய்ந்து நிற்கிறது. அந்தப் பரவஸ்துக்குள்ளே பேதம் என்பதே கிடையாது. ஒரே தன்மைத்தானது அது இந்த வஸ்துவுக்குள்ளே ஆனவம் என்ற விதை எப்படியோ விழுந்தது. அது முளைவிட்டு, வளர்ந்து, கப்புங் கவடுமாகச் செழித்தோங்கி அந்தப் பரவஸ்துவையே மறைத்துக் கொண்டு நிற்கிறது. இந்த வேடிக்கையை உணர்பவனே ஞானி. உணர்ந்த மாத்திரத்தில், அவனுடைய ஆணவம், ஆங்காரம், எல்லாம் மடிந்துவிடுகிறது. ஆணவத்திலிருக்கும் போது எட்டாக் கனியாக இருந்த பேரின்பம் அவனுக்கு எட்டிவிடுகிறது. இந்த உண்மையைப் பட்டினத்தார் உணர்ந்து அனுபவித்துப் பாடுகிருர் :

''ஓங்கார மாய்நின்ற வஸ்து விலேயொரு
வித்துவந்து
பாங்காய் முளைத்த பயனறிந் தாற்பதிஞ
லுலகும்
நீங்காமல் நீங்கி, நிறையா நிறைந்துநிறை
யுருவாய்
ஆங்கார மானவர்க் கெட்டாக் கனிவந்தமர்ந்
திடுமே''

சித்தாத்தப் பாதையிலே சென்ற ஞானிகள் தம்முடைய அனுபவங்களை என்றும் இறவாத பாடல்களிலே பொதிந்து நமக்குத் தந்துவிட்டுப் போயிருக்கிருர்கள், உணர்வுடையவர்கள் படித்துப் பயன்பெறலாம்.



சென்னை யானைகவுனி வைகுண்டப்பெருமாள்-தர்மராசாகோயில்.

# அதிர வீசி யாடுவார்

(வித்துவான். திரு. வே. மகாவேதன், திருப்பனந்தாள்)

மதுரைச் சொக்கப் பெருமான் உலகம் உய்யத் திருக்கூத்து ஆடுகின்றார். பாண்டிய வேந்தனின் வேண்டுகோளுக்கு இணங்கி இறைவன்கால்மாறியாடியமையைத்திருவிளையாடற்புராணங்கள் புகழ்ந்து கூறுகின்றன. கால்மாறியாடிய திருவிளையாடல் பற்றித் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணமும், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணமும் கூறும் செய்திகளையும், கால்மாறியாடியமையால் இறைவன்பெற்ற திருநாமங்களையும், மக்கள் இத்திருவிளையாடலில் தோய்ந்திருந்தமைக்குரிய கல்வெட்டுச் சான்றுகளையும் காண்போம்.

### அறுபத்துநான்கு கலைவல்லார் :

பாண்டிய அரசன் ஒருவன் மதுரைப் பெருமான்மேல், மாறா அன்புடன் பகையின்றி அரசாண்டான்; இப் பாண்டியன், 'சிவபெருமான் உலகம் உய்யத் திருக்கூத்தாடுதலின் அதனைக் கற்கலாகாது' என்று எண்ணினான். பரதக் கலை தவிர மற்ற எல்லாக் கலைகளையும் முற்றக் கற்றான். '**எண்ணெண் கலைவல்லான்**' என உலகம் புகழ வாழ்ந்து வந்தான்.

பாண்டியனின் மிகு புகழைச் சோழன் அறிந்தான்; சிறிது பகையுணர்வு கொண்டான்; ஆடற்கலையையும் நன்கு கற்றான். அறுபத்துநான்குகலைகளிலும் சோழன் தேறி 'எண்ணெண் கலைவல்லான்' என்னும் புகழடைந்தான்.

### பாண்டியன் பரதநூல் கற்றமை :

கூத்தும் வல்ல பாடகன் ஒருவன் சோழனைக் கண்டு பரிசில் பெற்றபின், மதுரைக்குச் சென்றான்; பாண்டியனை வணங்கி, ''எண்ணெண் கலைவல்லான்' என்ற பெயர் நினக்கு உரியதல்ல; அப்பெயர் சோழனுக்குரியது; நீ கூத்துக் கற்கவில்லையல்லவா?'' எனத் துணிவுடன் கூறினான் பின்னர் பரிசில் பெற்றுச் சென்றான்.

இந்நிகழ்ச்சி பாண்டியன் உள்ளத்தை மாற்றியது. பாண்டியன் கூத்தினையும் கற்க விரும்பினான்; 'புயங்கநட்டம்' என்னும் இறைவன் ஆடும் ஒருவகை நடனம் பயில நாட்டமுற்றான்; அமைச்சர் உதவியால் ஆவன செய்தான்; இடத்தாளை மேலே தூக்கி வலப்பாதத்தை ஊன்றி ஆடும் கூத்தினைச் சில நாட்களில் மிக வருத்தமுற்று முழுமையாகக் கற்றான்; எனினும் இறைவன் ஆடும் திருக்கூத்தினைத் தான் கற்க நேரிட்டமைக்காக உள்ளம் வருந்தினான்.

### பாண்டியன் உள்ளம் வருந்தியமை :

கூத்தில் வல்லவனாகிய பாண்டியன், ஒருதாளை ஊன்றி மற்றொரு தாளை வளைத்து மேலே எடுத்து நிற்கும்போது, உடல் நோவது கண்டான்; 'எனக்கு ஒரு கணம் இவ்வாறு நிற்கவும் இயலாததாக இருந்தது; இறைவன் மாறி நின்றாடாமல் மன்றத்துள் திருநடம் புரிகின்றாரே' என வருந்தினான்; ஆழ்துயர் உற்றான்; ''இறைவன் அண்டசராசரங்கள் அனைத்தும் தாங்கும் மிகப்பெரியவன் எனவே இறைவனுக்கு வருத்தம் இல்லாமலும் இருக்கலாம்'' எனத் தெளிவான்; தேரானாகி மீண்டும் துன்புறுவான்.

### மாறன் ஆழ்துயர்கெட மாறி யாடினார் :

மதுரைச் சொக்கர், பாண்டிய மன்னனின் கவலையைப் போக்க மனமிரங்கினார்; வெள்ளியம்பலத்தில், பதஞ்சலியும் வியாக்கிர முனிவனும் காண ஆடும் கூத்தினை விடுத்துப் புதுமைக் கூத்து ஆடினார்; வலப்பதம் இடம் வரவும், இடக்கரம் வலம் வரவும் திருவடியின்மேற் கொடியைக் காட்டி, மெல்ல

ஆடுதலை விடுத்து, நள்ளிரவில், மாறனின் துயரம் மறைய அதிரவீசிக் கால்மாறி யாடினார். தேவர்கள் வியந்து ஏத்தினர்.

விடியற்காலை தொண்டர்கள் மூலம் பாண்டியன், இச் செய்தியை அறிந்தான்; திருக்கோவிலிற் சென்று வழிபட்டான்; மாறியாடிய திருக்கூத்தே நிலைத்திருக்க வேண்டும் என்று வேண்டினான். இறைவனும் அருள் புரிந்தார்.

### பாண்டியனின் கோவில் தொண்டு :

மாறியாடியமையினால் மனம் மகிழ்ந்த பாண்டியன் சிற்றம்பலம் பொன் வேய்ந்தான்; முத்துக் கயிறு கட்டினான்; மாணிக்கத் தாலாகிய விளிம்பு செய்தான்; பல மணிகளால் ஒழுங்குறக் கோவிலை அலங்கரித்தான். முத்துக் கவிகை, மாணிக்கக் காம்புடைய கவரி, வயிரம் சேர்ந்த கனக சிங்காதனம், நீண்ட முடி, பூண், புதிய வாசிகை முதலியன தந்தான்; இடையரு அன்புடன் இறைநெறி புரந்தான்.

### சோழனும் வணங்கினான் :

மாறியாடிய நாள்முதல் சொக்கருக்கு 'அதிரவீசியாடுவார்' 'மாறியாடிக் கொடியிட்ட பெருமாள்' என்னும் பெயர்கள் பலரறிய வழங்கலாயின. இச் செய்திகள் அறிந்த சோழ அரசன் பகைவிட்டுச் சிவனினும் செழியர் கோவை வழுத்தினான். இவை திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் கூறும் செய்திகளாம்.

### பரஞ்சோதி முனிவர் திருவிளையாடலில்

மதுரைச் சொக்கர் கால்மாறியாடிய காலத்தில் வாழ்ந்த பாண்டிய மன்னன் விக்கிரம பாண்டியன் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க ஏற்று ஆண்ட 'இராசசேகரன்' ஆவன். சமகாலச் சோழ அரசன் ஆனைக்காஉறை அண்ணல்மீது ஆராக் காதல் உடைய 'கரிகாற் பெருவளத்தான்' ஆவன்.

சோழ நாட்டுப் புலவன், 'நீ கூத்துக் கற்றிலை' என்றதால், பாண்டியன் பகையும் மானமும் மீதூரப் பரதமும் கற்றான்; இறைவன் திருநடம் ஆடுதலில் உள்ள துன்பத்தை அறிந்தான்; கால்மாறியாடச் செய்ய விரும்பினான்; சிவராத்திரி அன்று கோவிற்குச் சென்றான்; சிவாகம விதிகளின்படி இரவு நான்கு யாமப் பூசைகள் செய்த பின்னர் இறைவன் ஆடிய திருக்கூத்தினைக் கண்டான்; கையிரண்டையும் தலைமேற் கூப்பிக் 'கால்மாறியாடி என் வருத்தம் போக்க வேண்டும்; இன்றேல் நான் என் வாளின் மேல் குப்புற வீழ்ந்து இறப்பேன்' என்று கூறிப் பணிந்தான். வாளின்மேல் மாறன் பாயுமுன், பாண்டியன் காண இடத்தாள் ஊன்றி வலத்தாள் வீசி இறைவன் கால் மாறியாடியதாகப் பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம் கூறுகிறது. பரத நூலின் பகுதிகள் இத்திருவிளையாடலில் விளக்கப்பட்டுள்ளன [செய்யுள் 8-14].

### இறைவன் பெற்ற இரு திருப்பெயர்கள் :

'இறைவன் புதுமைக் கூத்தாடுங்கால் மெல்ல ஆடுவதை விடுத்து அதிரவீசி ஆடினான்' என வேப்பத்தூரார் திருவிளையாடல் குறிப்பிடுகிறது. "அதிரவீசித் திதமுறு மதுரை" (கட் : 16) "புதுமைக் கூத்தை ஆடினான் அதிரவீசி" (32 : 12) என்ற பாடற் பகுதிகளால் இறைவன் மாறியாடுங்கால் அதிர வீசி ஆடியமை புலப்படும்.

சைவசமய குரவருள் முதல்வராகிய திருஞானசம்பந்த சுவாமிகள், 'வீடலாலவாய்' எனத் தொடங்கும் பதிகத்தில்,

> 'முதிரும்நீர்ச் சடைமுடி முதல்வன்நீ முழங்கழல்
> அதிரவீசி யாடுவாய் அழகன்நீ புயங்கன்நீ
> மதுரன்நீ மணாளன்நீ மதுரை யாலவாயிலாய்
> சதுரன்நீ சதுர்முகன் கபாலமேந்து சம்புவே'

என்ற நான்காம் திருப்பாடலில் ஆலவாய் அழகர் அதிரவீசி ஆடியமையைக் குறிப்பிட்டுள்ளார். இறைவன் அதிரவீசி ஆடியமையால் அதிரவீசியாடுவார் என்னும் பெயர் வழங்கியதாக நம்பி திருவிளையாடல் கூறுகிறது.

ஆலவாய் அண்ணல், பதஞ்சலி முனிவர் காண வெள்ளியம்பலத்தில் முன்னர் ஆடினார். பாண்டியனுக்காகக் கால்மாறியாடி

நடம் புரியும்போது, திருவடியின்மேற் கொடி காட்டினர். இதனை,

''ஏர்தரும் வலப்பதம் இடம்வரப் பணை
சார்தரும் இடக்கரம் வலம்வ ரத்தனி
வாதுறு கூத்தினை யாடி மாசறு
கோவைசூழ் தாள்மிசை கொடியும்
காட்டினர்''

என்ற திருவாலவாயுடையார் திருவிளையாடற் செய்யுளால் அறியலாம் இக்காரணத்தால் மாறியாடிக் கொடியிட்ட பெருமான் என்னும் பெயர் வந்ததாக நம்பி திருவிளையாடல் கூறுகிறது.

இவ்விரு பெயர்களும் கால்மாறியாடியமையால் வந்ததனை,

'அன்றுமுன் அதிரவீசி யாடுவான் என்று
மேவார்
குன்றுமுன் மாறியாடிக் கொடியிட்ட
பெருமான்என்றும்
மன்றுற வழங்கக் கேட்ட வளவனும்
இகல்விட் டன்பிற்
சென்றுமுன் வழுத்தினன்அச் சிவனினும்
சேழியர்கோவை'

என்ற நம்பி திருவிளையாடற் செய்யுள் காட்டும்.

### அழகன் அதிரவீசி யாடுவார்:

இறைவன் அதிரவீசி யாடுவார் என்ற பெயர் பெற்ற செய்தி மக்களிடையே பரவி வழங்கி இருந்தது. அதிரவீசியாடுவார் என்ற பெயரும் திருவாலவாயுடையார் திருவிளையாடலும் மக்களால் நன்கு அறியப்பட்டமையை வெள்ளனூர் அகத்தீசுவரர் கோயிலில் உள்ள மாறவர்மன் குலசேகர பாண்டியனின் (20 ஆ ஆ) கல்வெட்டால் உறுதி செய்யுமுடியும். ''சொக்கக் கூத்தர்க்கும் ஆவுடைய நாச்சிக்கும் அமுதுபடிக்காக, மேல் வேம்பநாட்டு மயேந்திரபுரத்து அழகன் அதிரவீசியாடுவார் என்பவன் தென் சிறுவாயில் நாட்டு வெள்ளை நல்லூருடையான் எடுத்தான் சேமன் முதலியவரிடம் வாங்கிய ஊர்வயலில் இராமதேவியுடலான தம்பிக்கு நல்லானில் வடக்கடைய மூன்றில் ஒன்று நீக்கித் தருமமாகத் தந்தான்'' எனக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. (புதுக்கோட்டைச் சீமைக் கல்வெட்டுக்கள் எண், 540). இறைவன் ஆடிய தாண்டவம் சொக்கத் தாண்டவம் என்பர் நம்பி. இக்கல்வெட்டுள் இறைவன் சொக்கக்கூத்தர் எனப்படுவதும் திருவிளையாடற் புராணச் செல்வாக்கையே காட்டுவதாகும்.

### மாறியாடும் பெருமாள்:

இறைவன் மாறியாடியதிருவிளையாடலை அறிந்து இன்புற்று ஈடுபாடு கொண்ட சிவநெறிச் சீலர்கள், 'மாறியாடும் பெருமாள்' என்ற பெயர் சூடிக்கொண்டனர். திருமயம் கைலாசநாதர் கோவிலில் உள்ள, முதல் சடையவர்மன் சுந்தர பாண்டியனின் பன்னிரண்டாவது ஆட்சியாண்டு (கி. பி. 1263) க்குரிய கல்வெட்டில் கையொப்பம் இட்டவருள் ஒருவன் பெயர் மாறியாடும் பெருமாள் முத்தவனப் பெருமாள் எனக் காணப்படுகிறது. (புதுக்கோட்டை கல். எண், 351).

### தொகுப்புரை:

இறைவன் கால்மாறி ஆடிய வரலாறு இரு திருவிளையாடல் நூல்களிலும் இனிமையாகச் சொல்லப்பட்டுள்ளது. இந் நிகழ்ச்சியை ஒட்டி, 'அதிரவீசியாடுவார், மாறியாடிக் கொடிஇட்ட பெருமான்' என்ற பெயர்கள் பயில வழங்குவதாயிற்று. தமிழக மக்கள் சிலர் அதிரவீசியாடுவார், மாறியாடும் பெருமாள் என்ற பெயர்களைச் சூடிக் கொண்டனர் எனக்கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. திருவிளையாடற் புராணத்தைக் கேட்டும் படித்தும் சிந்தித்தும் அருமைப்பாடு அறிந்தும் பெயர் சூட்டியும் மக்கள் பல்லாற்றனும் பயின்று வந்தமையை இக்கல்வெட்டுச் சான்றுகள் காட்டுவனவாகும். எல்லாப் பிறப்பும் பிறந்திளைக்கும் நாம் வினையின் நீங்கவேண்டும். நம்பி, ''மன்றுள் மாறியாடிய பாதம் பயன் பல தரவல்லது; வினை தீர்க்கும் மருந்து'' எனக் கூறுகிருர். அதிர வீசி ஆடிய, மாறியாடிய திருக்கூத்தை இடையருது ஏத்தி எல்லாப் பயன்களும் பெறுவோமாக!

''இத்திருக் கோயில்தன்னைத் தொழு பவர்
என்றும் குன்றுப்
புத்தியும் பொருவிலாத பத்தியும் புகழும்
உண்டாய்
சத்திய ஞாலம் முற்றும் தனிக்குடை நிழலின்
ஆண்டு
முத்தியும் பெறுவர் தீரா மும்மல மம்மர்
தீர்ந்தே''

(—திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்)

# அடியவர்களின் செய்கை

இறைவனின் அடியவர்களுக்குப் 'பக்தர்கள்' என ஒரு பெயர் வழங்கி வருகின்றது. பக்தியுடையவர்கள், பக்தர்கள் எனப்படுகின்றனர். எனினும் பத்தர் என்றும் அச்சொல் வழங்கி வருகின்றது. பத்தர் என்னும் சொல், பக்தர் என்னும் சொல்லின் தமிழ் வடிவம் என்று, பொதுவாக ஒரு கருத்து உண்டு. ஆயினும் பத்தர் என்னும் சொல்லுக்குப் பத்துவகையான இலக்கணம் அல்லது இயல்புகளை உடையவர் என்றும், ஒரு பொருட் குறிப்பு காணப்படுகின்றது. திருநாவுக்கரசர் தம்முடைய விடம்தீர்த்த திருப்பதிகத்தில்,

> பத்துக் கொலாம் அவர் பாம்பின்கண்
> பாம்பின்பல்
> பத்துக் கொலாம்எயி றும்நெரிந்து உக்கன;
> பத்துக் கொலாம்அவர் காயப்பட் டான்தலை;
> பத்துக் கொலாம்அடி யார்செய்கை தானே''

என்று அருளிச் செய்துள்ளார். இப்பாடலின் ஈற்றடியால், இறைவனின் அடியவர்களின் செய்கைகள் பத்து என்று தெளிவுறத் தெளிகின்றது. நம்மாழ்வாரும் ''பத்துடை அடியவர்க்கு எளியவன். பிறர்களுக்கு அரிய வித்தகன்'' என்று தம்முடைய திருவாய்மொழியில் அருளிச் செய்துள்ளார். இவற்றின்படி இறைவனின் அடியவர்கள், பத்து வகையான செயல்கள் அல்லது இயல்புகளைப் பெரும்பாலும் பெற்றிருப்பார்கள் எனத் தெரிகின்றது. அவை யாவன :

1. உலகத்தையும் உலகியற்கைப் பொருள்களையும் அருள் வடிவமாகக் காணும் இயல்பு.

2. கருவி கரணங்களின் தீமைகளை முறையேகளைந்தொழிக்க முயலும் சிந்தனை

3. முற்பிறவிகளிற் பட்ட துன்பங்களை நினைத்து நினைத்து நெட்டுயிர்ப் பெறிதல்.

4. திருவருள் மேலீட்டால் உடம்பில் இளைக்குடு எப்பொழுதும் நிலவுதல்.

5 ஊண் உறக்கம் உலக நுகர்ச்சி என்பனவற்றிற் கருத்தின்றி, அவற்றைத் துறக்க முயலுதல்.

6. பிறரோடு உரையாடுதற்கும் பழகுதற்கும் தாமாக முயலாமல் அவற்றைத் தவிர்த்தொழுகுதல்.

7. எப்பொழுதும் மௌனம் கடைப்பிடித்து ஒழுகுதலையே விரும்பி மேற்கோடல்.

8. பித்தேறினாற்போல உலகியற் பொருள்களிற் பாகுபாட்டுணர்வு தோன்றாமல் நிற்றல்.

9. பிராணவாயு அடங்கி நிற்க மூர்ச்சை எய்தியிருத்தல்.

10. தற்போதம் என்பது சிறிதும் இன்றிச் செயலற்று விளங்குதல்.

இப் பத்துவகையான செயல்களையும் இயல்பாகவே பெற்றிருத்தல் பற்றியே இறைவன் அடியார்களுக்குப் 'பத்தர்கள்' என்று பெயர் ஆயிற்று எனக் கொள்ள இடன் உள்ளது.

இனி இங்ஙனமின்றி வேறு வகையிலும் அறிஞர்கள் சிலர் விளக்கம் கூறுவர். 1. தத்துவரூபம், 2. தத்துவ தரிசனம், 3 தத்துவ சுத்தி, 4. ஆன்ம ரூபம், 5. ஆன்ம தரிசனம், 6. ஆன்ம சுத்தி, 7 சிவரூபம். 8. சிவதரிசனம், 9. சிவயோகம், 10; சிவபோகம் என்னும் தசகாரியம் ஆகிய பத்தையுங்கூட, இறைவனின் அடியார்களுக்குரிய பத்துச் செய்கைகளாகக் கூறுவர். மேற்குறித்த பத்துச் செயல்கள் ''ஒழிவில் ஒடுக்கம்'' என்னும் நூலில், அதற்கு உரைவகுத்த திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் அவர்களாற் குறிப்பிடப் பெற்றிருப்பனவாகும்.

—ஆசிரியர்

# திருமால் அடியார் இயல்புகள்

நமது தமிழ்நாட்டில் திருமால் வழிபாடு மிகத் தொன்னெடுங் காலமாக நிகழ்ந்து வருகின்றது. நிலத்தினை முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை என நம் தமிழ் முன்னோர்கள் நூல்களில் வகுத்திருப்பதுடன், முல்லை நிலத்துக்குரிய சிறப்புத் தெய்வம் திருமால் என்றும் வரையறை செய்துள்ளனர். ''அங்கண் முல்லையின் தெய்வம் என்று அருந்தமிழ் உரைக்கும் செங்கண்மால்'' என்று தமது பெரியபுராணத்தில், சேக்கிழார் பெருந்தகையும் திருமாலின் சிறப்பினைப் புகழ்ந்து போற்றிப் பாடியுள்ளார். ''மாயோன் மேய மைவரை உலகம்'' என்றும், ''மாயோன் மேய மன் பெருஞ் சிறப்பின் தாவா விழுப்புகழ்ப் பூவைநிலை'' என்றும் வரும் தொல்காப்பிய நூற்பாக்களால், திருமால் வழிபாட்டின் பழமையும் பெருமையும் புலனாகின்றன.

இத்தகைய திருமாலுக்குரிய பல பெயர்களுள், விஷ்ணு என்னும் சொல்லும், மிகச் சிறப்பாக வழங்கி வருகின்றது. விஷ்ணு என்னும் சொல்லுக்கு வியாபகம் என்பது பொருள். விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபட்டுவரும் அடியவர்கள் வைஷ்ணவர்கள் எனப் பெறுவர். அவ்வைஷ்ணவப் பெருமக்களுக்குச் சிறப்பாக அமைந்திருக்க வேண்டிய இலக்கணங்கள் பல உண்டு. அவற்றை ''ஸ்ரீவைஷ்ணவ லட்சணங்கள்'' எனப் பெரியோர்கள் குறிப்பிடுவர். அவையாவன பின்வருமாறு:

1. எம்பெருமானைத் தவிர வேறு பொருள்களில் உள்ள பற்றுக்கள் யாவற்றையும் அறவே விடுதல்.

2. எல்லா உயிர்களையும் எக்காலத்திலும் பாதுகாக்கும் எம்பெருமான் தவிர, வேறொருவரும் தமக்குத் தஞ்சம் அல்லர் எனத் தெளிந்து, அவனையே உபாயமாகப் பற்றுதல்.

3. பகவான் சரம சுலோகத்தில் 'என்னையே உபாயமாகப் பற்று' எனக் கட்டளையிட்டிருத்தலால், அவனையே உறுதியாகப் பற்றியுள்ள தமக்கு வீடுபேறு தவறாமற் கிடைக்கும் என நம்பித் துணிந்திருத்தல்.

4. இங்ஙனம் வீடுபேறு தப்பாமற் கிடைக்கும் என்று நம்பித் துணிந்திருந்தாலும், அதனை அடைதற்கு ஆர்வம் மிகுந்து விரைந்து முயலுதல்.

5. வீடுபேறு அடைதலில் மனம் விரைந்து நிற்பினும், உலகத்தில் வாழும் நாட்களில், எம்பெருமான் உவந்து கோயில் கொண்டிருக்கும் திவ்விய தேசங்களில் மிகவும் ஈடுபாடு கொண்டு, அவ்வத் திவ்விய தேசங்களில் விளங்கும் எம்பெருமான்களின் சிறந்த குண நலன்களை அனுபவித்துக் கொண்டு, மனமொழிமெய்களினால் கைங்கரியம் செய்து வருதலையே தமக்குப் பொழுது போக்காகக் கொள்ளுதல்.

6. ஞானம் அநுட்டானம் இவை நன்றாகவேயுடைய வைஷ்ணவர்களைக் காணின், ''தீயில் தாமரை மலர்ந்தன்ன'' இவ்வுலகிலும், இத்துணைச் சிறப்பு வாய்ந்தார் சிலர் உளரோ?'' என அவர்கள் பெருமையைப் பாராட்டி, அவர்களிடம் அழுக்காறு ஒழிந்து அவர்கள் தாழ்குலத்தினராகஇருப்பினும், அவர்களுடன் தாமும் கலந்து உவகையுடன் அன்பு பாராட்டுதல்.

7. தள்ளத்தக்கன இவை, கொள்ளத் தக்கன இவை எனத் தெள்ளிதின் விளக்கும் திருமந்திரத்திலும், அதை விரித்துச் சொல்லும் துவயத்திலும், ஊன்றிநிற்றல்.

8. ஆசாரியாபிமானம் ஒழியக் கதியில்லை, ஆசாரியாபிமானமே உத்தாரகம் என்றுணர்ந்து, தன்னை ஏற்றுப் பணி

கொள்ளும் ஆசாரியன்பால் மிக்க அன்பு பாராட்டுதல்.

9. இரும்பைப் பொன்னுக்குவாரைப் போன்று, இழிந்த தன்னை ஏற்று உபதேசத்தினால் திருத்தி உய்வித்த ஆசாரியனிடத்திலும், இத்தகைய ஆசாரியனிடம் தன்னைக் கொண்டுபோய்ச் சேர்த்த ஈசுவரனிடத்திலும் நன்றியுடையவனாய் இருத்தல்.

10. சித்து அசித்து ஈசுவரன் என்னும் மூன்றையும் பொருளாகக் கொண்டுள்ள ஞானமும், உலகப் பொருள்களில் பற்றற்ற தன்மையும், இவை இரண்டும் நமக்கு வாய்த்துள்ளன என்று இறுமாப்புக் கொள்ளாமையாகிய சாந்தியும், அமையப் பெற்ற பரம பாகவதரோடு கூடி வாழ்தல்.

''புறம்புண்டான பற்றுக்களை அடைய வாசனையோடே விடுகையும், எம்பெருமானையே தஞ்சம் என்று பற்றுகையும், பேறு தப்பாதென்று துணிந்திருக்கையும், பேற்றுக்கு விரைகையும், இருக்கும் நாள் உகந்தருளின நிலங்களிலே மிகவும் ஈடுபட்டுக் குணாநுபவ கைங்கரியங்களே போது போக்காகையும், இப்படி இருக்கின்ற வைஷ்ணவர்கள் ஏற்றம் அறிந்து உகந்திருக்கையும், திருமந்திரத்திலும் துவயத்திலும், நியதனாகையும், ஆசார்ய பிரேமம் கனத்திருக்கையும், ஆசார்யன் பக்கலிலும் எம்பெருமான் பக்கலிலும் நன்றியுள்ளவனாய்ப் போருகையும், ஜ்ஞாநமும் விரக்தியும் சாந்தியும் உடையவனாய் இருக்கும் பரம ஸாத்விகரோடே ஸஹவாஸம் பண்ணுகையும், ஸ்ரீவைஷ்ணவ அதிகாரிக்கு அவச்ய அபேட்சிதம்'' என்பது பிள்ளை லோகாசார்யர் என்னும் வைணவப் பெருஞ்சான்றோரின் விளக்கம்.

—ஆசிரியர்



சென்னை யானைகவுனி முருகப்பன் தெரு, அருள்மிகு வைகுண்டப் பெருமாள்-தர்மராசா கோயில் அட்டபந்தனத் திருக்குடநீராட்டு விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த பெருமக்கள்

# தஞ்சை மாவட்டக் கோயில்களின் வரலாறு

( சீர்காழி வட்டம் )

முற்றொடர்ச்சி

**1. சீர்காழி :**

இது சென்னை மாயூரம் இருப்புப் பாதையில் உள்ள ஒரு நிலையமும், சீர்காழி வட்டத்திற்குத் தலைமையிடமுமாகும். 1967-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி, இங்குள்ள மக்கள் தொகை 19,531. சைவ சமய ஆசிரியர்கள் நால்வரில் ஒருவராகிய, திருஞானசம்பந்தப் பெருமான் தோன்றியருளிய தலம். இத் தலத்திற்குச் சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்னரே 12 திருப்பெயர்கள், ஒவ்வொரு காரணம் பற்றி ஏற்பட்டு வழங்கி வந்தன என்பது தேவாரத் திருமுறைகளால் தெரிய வருகின்றது. அப் பன்னிரண்டு திருப்பெயர்களையும், அவற்றிற்குரிய வரலாற்றுக் காரணங்களையும், திருஞானசம்பந்தர் தமது தேவாரப் பாடல்களில் ஆங்காங்கே அருளிச் செய்துள்ளார். சீர்காழிக்குச் சம்பந்தர் 67, அப்பர் 3, சுந்தரர் 1 ஆகமொத்தம் 71 தேவாரத் திருப்பதிகங்கள் உள்ளன.

(1) **பிரமபுரம்**: பிரமன் வழிபட்டு அருள் பெற்ற தலம். ''நாவியலும் மங்கையொடு நான்முகன்தான் வழிபட்ட நலங்கொள் கோயில்'' என்றும், ''பிரமன் உயர் அரன் எழில்கொள் சரண இணை தரவளர் பிரமபுரமே'' என்றும் திருஞானசம்பந்தர் குறிப்பிட்டருளியிருத்தல் காணலாம்.

(2) **வேணுபுரம்**: சூரபதுமனுக்கு அஞ்சிய இந்திரன், தன்னையும் தேவர்களையும் காத்தருள வேண்டி வழிபட்டபோது, இறைவன் வேணு (மூங்கில்) வடிவாய் முளைத்து அருளிய தலம். குருவை இகழ்ந்த பழியும், விருத்திராசுரனைக் கொன்ற பழியும் நீங்கும்படி இந்திரன் வேணுவின் வழியாக மறைந்து வந்து அடைந்து வழிபட்ட தலம்.

(3) **புகலி**: சூரபதுமனின் கொடுமைகளைப் பொறுக்கலாற்றுமல், அவனை அழிப்பதற்கு முருகப்பெருமானைத் தந்தருளும்படி வேண்டித் தவங்கிடந்த தேவர்கள் புகல் (அடைக்கல) அடைந்த தலம். '' பகைகளையும் வகையில், அறுமுக இறையை மிக அருள, நிகரில் இமையோர் அருளும் புகலி''.

(4) **வெங்குரு**: பிரமனுல் இகழப்பட்ட அசுரகுருவாகிய சுக்கிரன் நாரதருக்குரிய அறிவுரையின்படி வந்து வழிபட்டுத் தேவ குருவாகிய பிருகற்பதிக்கு இணையாகும் பேறு பெற்றதலம். நரகர் தன்னைக் கொடியவன் என்று இகழும் பழி நீங்க எமதருமன் வழிபட்டு, முன் உணர்ச்சியுற்று மோனஞான நிலைபெற்ற தலம். ''**வெங்குரு** (சுக்கிரன்) விளங்கி உமைபங்கர் சரணங்கள் பணி வெங்குரு'' என்றும், ' 'செங்கோல் நடாவிப் பல்லுயிர்க்கும் செய்வினை மெய் தெரிய வெங்கோத் தருமன் மேவி ஆண்ட வெங்குரு'' என்றும் வரும் தேவாரப் பாடற் பகுதிகள் இதனை வலியுறுத்தும்.

(5) **தோணிபுரம்**: ஊழிதோறும் உண்டாகிய பிரளய வெள்ளங்களில் உலகமெல்லாம் அழிந்து மறைந்தபொழுது, பிரணவமாகிய தோணியாக மிதந்து, சிவபெருமான் தேவியாருடன் தன்பால் எழுந்தருளப்பெற்றதலம். ''அணிநீர் உலகமாகி எங்கும் ஆழ்கடலால் அழுந்தத் துணிநீர் பணியத் தான் மிதந்த தோணிபுரம்'', ''பாணி உலகாள மிக வானின் மலி **தோணிநிகர் தோணிபுரம்**'' என்பன தேவாரம்.

(6) **பூந்தராய்**: சங்கநிதி பதுமநிதி என்னும் இரண்டு நிதிகளின் தெய்வங்களும், தாம் என்றும் குறைவிலா நிறைவிற் பெருகி வளர்ந்து கொடைத் தன்மையிற் சிறந்து விளங்கப் பூந்தாராய் (பூமாலையாக) இருந்து இறைஞ்சிய தலம். இரணியாக்கனை அழிக்கத் திருமால் வெள்ளைப் பன்றியாகச் சென்று, வென்று, பூமியை பூந்தாராய்த் தம் கொம்பில் ஏற்று வருத்திய பழிபோகப் பூசித்த தலம். ''அராமிசை இராதெழில் தராயரபராயண **வராக உருவா**, தராயனை விராயரி பராய்மிகு பராய்மொழி விராய பதியே'' என்பது திருஞானசம்பந்தர் பாடல்.

(7) **சிரபுரம்**: தேவர்களுடன் அமிழ்தம் உண்ண வேற்று வடிவம் கொண்டு மறைந்து வந்து அமர்ந்திருந்த சயிங்கேயன் (சிலம்பன்) என்னும் அசுரனைச் சூரியன் காட்டத் திருமால் சட்டுவத்தால் வெட்ட, அவனது தலை (சிரம்)

இராகுவாய் நின்று வணங்கிய தலம். ''**தலையாய்க் கிடந்து** இவ்வையமெல்லாம் தன்னதோர் ஆணை நடாய்ச் சிலையால் மலிந்த சீர்ச் சிலம்பன் சிரபுரம்'' ''அரவை அரி சிரம் அரிய அச்சிரம் அரன சரணம் அவை பரவ **இரு கிரகம்** (இராகு, கேது) அமர் சிரபுரமதே'' என்பன சம்பந்தர் பாடல்.

*(8)* **புறவம்:** அக்கினி தேவன் புறுவாகவும், தேவேந்திரன் பருந்தாகவும், வடிவங் கொண்டு வேள்வியில் தன்னைச் சோதிக்க வரச், சிபிச் சக்கரவர்த்தி புறுவின் எடை அளவுக்குத் தன் தசையை அரிந்து இடவும், போதாமற் செய்து, அவனே துலையில் ஏறி அமரும்படி செய்து வருத்திய பாவம் நீங்கப் புறவாக வடிவங் கொண்ட அக்கினிதேவன் பூசித்த தலம். ''புறவின் எதிர் நிறைநிலவு பொறையன் உடல் பெற அருளு புறவம் அதுவே''.

*(9)* **சண்பை:** கபில முனிவரின் சாபத்தால் தமது குலத்தினர் வயிற்றுதித்த பிள்ளையாகிய இருப்பு உலக்கையைப் பொடியாக்கிக் கொட்டிய தூள் சண்பைப் புல்லாக முளைக்க, அவற்றையே ஆயுதமாகக் கொண்டு போர் செய்து யது குலத்தோர் மடிய அப்பழி நீங்கும் படி கண்ணனும் கபில முனிவரும் போற்றி வணங்கிய தலம்.

*(10)* **காழி:** காளிதன் என்னும் பாம்பும், நடனத்தில் தோல்வியுற்ற காளிதேவியும் போற்றி வழிபட்டு அருள்பெற்ற தலம். **காளி** என்பது காழி என மருவியது. ஸ்ரீகாளி-சீர்காழி. 'ஐந்தலை நீண்முடிய கடல் நாகரையன் காவலாகக் காழி அமர்ந்தவனே''.

*(11)* **கொச்சைவயம்:** பராசர முனிவர் கங்கை நதியின் நடுவில் படகில் செல்லுங்கால், மச்சகந்தி என்னும் பரதவப்பெண்ணைப் புணர்ந்ததனுல் ஏற்பட்ட தீநாற்றமும் பழியும் இகழ்வும் நீங்கும்படி வழிபட்ட தலம். (கொச்சை-தீநாற்றம். வயம்-சயம், போக்குதல்).

*(12)* **கழுமலம்:** உரோமசமுனிவர் தவம் புரிந்து ஞானேபதேசம் பெற்று, உலகில் உயிர்களின் மல அழுக்கைக் கழுவி நீக்கும் வல்லமையும் வரமும் பெற்ற தலம். ''முழுதுடலில் எழும் மயிர்கள் குழுவு நீக்கும் முனி (உரோமசர்), குழுவினெடு கெழுவு சிவனைத் தொழுதுலகில் இழுகுமலம் அழியும் வகை கழுவுமுரை கழுமல நகர்''.

**பிரமபுரம், வேணுபுரம்,**
**புகலி, பெரு வெங்குரு, நீர்ப்**
**பொருவில் திருத் தோணிபுரம்,**
**பூந்தராய், சிரபுரம், முன்**
**வருபுறவம், சண்பைநகர்,**
**வளர்காழி, கொச்சைவயம்,**
**பரவுதிருக் கழுமலமாம்**
**பன்னிரண்டு திருப்பெயர்த்தால்.**

**கோயில்:**

சீர்காழிக் கோயில் நாற்புறமும் உயர்ந்துள்ள சிறந்த மதில்களுடன், நான்கு கோபுரங்களை உடையதாய், நகரின் நடுவில் அமைந்து திகழ்கின்றது. கோயிலுக்கு உள்ளேயே, கிழக்கு நோக்கி மூன்று முதன்மையான சந்நிதிகள் உள்ளன. பிரமபுரீசுவரர் சந்நிதி மூலத்தானமாக அமைந்துள்ளது. அதற்கு வெளியே வடகிழக்கில் தனியாகத் திருநிலைநாயகியின் சந்நிதி உள்ளது. வெளிப் பிராகாரத்தில் திருஞானசம்பந்தர் சந்நிதி மிகப் பெரிய அளவில், ஒரு தனிக்கோயில் போல அமைந்துள்ளது. சுவாமி சந்நிதியின் முன்னே, முத்துச் சட்டைநாதர் சந்நிதி இருக்கின்றது. வடக்குப் பிராகாரத்திலும், மேற்குப் பிராகாரத்திலும் படிகள் உள்ளன. அவைகள் கட்டுமலையின் மேலுள்ள திருத்தோணியப்பர் சந்நிதிக்கும், அதற்கும் மேலுள்ள சட்டைநாதர் சந்நிதிக்கும் செல்லுகின்றன. திருஞானசம்பந்தருக்கு ஞானப் பால் அளித்த இறைவனும் இறைவியும், தோணிமலைச் சிகரத்தில் கம்பீரமாக வீற்றிருக்கின்றனர். தோணிமலைச் சிகரத்திற்கும் மேலே, சட்டைநாதசுவாமி எழுந்தருளியுள்ளார். திருமால் திரிவிக்கிரம அவதாரம் எடுத்து மாவலியின் தலைமேல் அடிவைத்து, அவனைப் பாதல உலகத்திற்குச் செல்லும்படி செய்தார். அதனுல் அவர் தம்மைத் தாமே வியந்து கொண்டு செருக்குற்று அலைந்து திரிந்தார். ஆதனுல் உலகில் உயிர்கள் துன்புற்று வருந்த நேர்ந்தது. அதுகண்ட சிவபிரான் தம் கைத்தண்டால் அவரைத் தாக்கினுர். திருமால் மூர்ச்சையுற்று மயங்கி விழுந்தார். பின்னர்ச் சிவபிரான் திருமகளின் வேண்டுகோட்படி, அவரை உயிர்த்தெழச் செய்தார். அப்போது திருமால் தம்முடைய எலும்பையும் தோலையும் (அகந்தையினையும், மாயையினையும்) எடுத்து அணிந்து கொள்ளும்படி சிவபிரானை வேண்டினுர். சிவபிரான் திருமாலின் தோலைச் சட்டையாகவும், எலும்பைக் கதாயுதமாகவும் ஏற்றுக் கொண்டார். திருமாலின் தோலைச் சட்டையாக அணிந்து கொண்டதனுல், **சட்டைநாதசுவாமி** என்ற பெயர் ஏற்பட்டது. இவர்தம் திருமேனிக்கு வெள்ளிக்கிழமைதோறும் நள்ளிரவில் புனுகுச் சட்டம் (Civet) பூசி வழிபாடு நிகழ்ந்து வருகின்றது. அதனுல் இவரைச் **சட்டநாதசுவாமி** என்றும் மக்கள் வழங்குவர்.

சிவபிரான் குரு லிங்கம் சங்கமம் என்னும் மூவகை நிலைகளில் விளங்கி அருள்புரிகின்றார்;

பெரும்பாலான கோயில்களில் இலிங்க வடிவில் மட்டுமே, அவர் விளங்குகின்றார். ஆனால் சீர்காழியில் இம்மூன்று நிலைகளிலுமே, சிவபிரான் ஒருசேர எழுந்தருளியுள்ளார். **இலிங்கம்** பிரமபுரீசர்; **குரு** தோணியப்பர்; **சங்கமர்** சட்டைநாதர்.

இக்கோயிலில் பரம்பரை உரிமையில்லாத சிவாசாரியர்கள், **காரணம்** என்னும் ஆகமத்தின்படி, ஆறுகால பூசை செய்து வருகின்றனர். பொன் வெள்ளி வைரங்களால் ஆகிய அணிகலன்கள் பல உள்ளன. அவற்றுள் சுவாமி அம்பாள் சம்பந்தர் பொற்கவசங்களும், அம்பாளின் காசு மாலையும், தாடங்கமும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இவ்வணிகலங்களின் மொத்த மதிப்புத் தொகை, சுமார் 2,92,000. இக்கோயிலுக்கு 1400 ஏக்கர் நன்செய் நிலங்களும், 280 ஏக்கர் புன்செய் நிலங்களும் உள்ளன. இவற்றின் மூலம் குத்தகையாக மொத்தம் 2,26,000 ரூபா வருவாய் கிடைக்கின்றது. கோயிற் பணியாளர்களுக்கும், நித்திய பூசைகளுக்கும், பருவகால விழாக்களுக்கும், பொது ஆட்சிக்கும் இத்தொகை பயன்படுத்தப்படுகின்றது. உண்டியின் மூலம் ரூபா 600, அர்ச்சனை அபிடேகங்களின் மூலம் ரூபா 1,000 ஆண்டொன்றுக்குக் கிடைக்கிறது. மூன்று பெரிய தேர்களும், இரண்டு பல்லக்குகளும், ஒரு வெள்ளித் தேரும், நான்கு வெள்ளி எருதூர்திகளும், மற்றும் அன்னம் கிளி யானை குதிரை வெள்ளாடு பெருச்சாளி பூதம் மயில் ஆகிய வாகனங்களும் இருக்கின்றன. சித்திரை மாதத்தில் ஆண்டின் பெருவிழா (பிரம்மோற்சவம்) நடைபெறுகின்றனது. இரண்டாம் நாள் விழாவில், சம்பந்தருக்கு இறைவன் ஞானப்பால் அளித்த அருள் நிகழ்ச்சி, மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. 50,000-க்கு மேற்பட்ட மக்கள் இவ்விழாவைத் தரிசிக்கின்றனர். ஆடி மாதத்திலும் புரட்டாசி மாதத்தில் நவராத்திரியிலும், திருநிலைநாயகிக்குச் சிறப்பு விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

இத்தலத்தைப் பற்றிய புராண கதைகள் பற்பலஉண்டு. இத்தலத்தில் 22 தீர்த்தங்கள் இருக்கின்றன. அவற்றில் இரண்டு கோயிலுக்குள்ளேயே இருக்கின்றன. அம்பிகையின்கோயிலுக்கு முன் உள்ளது பிரமதீர்த்தம். இங்கு தான் அம்பிகை சம்பந்தருக்கு ஞானப்பால் ஊட்டினாள். சுவாமிசந்நிதியில் உட்பிராகாரத்தில் பராசர தீர்த்தம் உள்ளது. கோயிலுக்கு வெளியே மேற்குக் கோபுரத்துக்கு அருகில் **காளி** தீர்த்தம் உள்ளது. தலத்திற்குக்கிழக்கே **விநாயகநதி**, காவிரியினின்று சிபிச்சக்ரவர்த்திக்காக அக்னிதேவன் கொணர்ந்த **புறவநதி**, அகத்தியரின் கமண்டலத்திலிருந்து விநாயகர் கொணர்ந்த **கழுமலநதி** என்பவை, தீர்த்தங்களாக உள்ளன. சீர்காழியில் சம்பந்தரும் அப்பரும் அன்புக் கடலாகவும், அருட்கடலாகவும் சந்தித்து மகிழ்ந்தனர். சம்பந்தர் அவதரித்த காரணத்தால் இதனை மிதிக்க அஞ்சிச் சுந்தரர் இதன் எல்லையை வலம் வந்து வணங்கிப் போற்றினர். மாணிக்கவாசகர் ''கழுமல மதனில் காட்சி கொடுத்தும்'' என்று இத்தலத்தைக் குறிப்பிட்டுள்ளார். **அருணகிரி நாதர்** அருளிய திருப்புகழ்ப் பாடலும் இதற்கு உண்டு. மாசிலாமணி தேசிகர் பாடிய திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ், அருணாசலக் கவிராயர் பாடிய காழிப்பள்ளு, காழி அந்தாதி, காழிப்புராணம் முதலிய பல நூல்கள், இத்தலத்தின் சிறப்பை உணர்த்துகின்றன. காழிக்கங்கை மெய்கண்டார், சீர்காழிச் சிற்றம்பல நாடிகள், சண்பை ஞானப்பிரகாசர், சீர்காழி மறைஞானசம்பந்தர், காழிக் கண்ணுடைய வள்ளலார் முதலிய அருட்பெரும் சான்றோர்கள் பலர், இத்தலத்துடன் தொடர்புடையவர்கள் ஆவர். இக்கோயில் தருமையாதீன கர்த்தரின் அருளாட்சியின் கீழ்ச் சிறப்புற விளங்கி வருகின்றது. தென்னகத்திலுள்ள சைவத் திருக்கோயில்களுள், தலை சிறந்த ஒரு பெருங் கோயிலாக, இது மிகவும் புகழ்மிக்குத் திகழ்கின்றது.

## கல்வெட்டுக்கள்:

இக்கோயில், கல்வெட்டுத் துறையிலும் மிகவும் முதன்மையுடையது. சுமார் ஆறு நூற்றாண்டுகளுக்குரிய, 47 கல்வெட்டுக்கள் இக்கோயிலில் உள்ளன. அவைகள் சோழப் பேரரசனாகிய வீர ராசேந்திரன் (கி. பி. 1063-1070) காலம் முதல், விசய நகர அரச மரபைச் சேர்ந்த வேங்கடதேவராயர் (கி. பி. 1598) காலம் வரையில் செதுக்கப் பெற்றனவாகும். இவற்றின் மூலம் பற்பல வரலாற்றுச் செய்திகள் அறியப்படுகின்றன.

## சோழர்கள்:

வீர ராசேந்திரன் (கி. பி. 1063-1070)

முதலாம் குலோத்துங்கன் (கி. பி. 1070.1120)

இரண்டாம் குலோத்துங்கன் (கி. பி. 1132-1150)

இரண்டாம் இராசராசன் (கி. பி. 1151-1163)

இரண்டாம் இராசாதிராசன் (கி. பி. 1162-1175)

மூன்றாம் குலோத்துங்கன் (கி. பி. 1179-1216)

மூன்றாம் இராசராசன் (கி. பி, 1216-1246)

**பாண்டியன்:**

சுந்தரபாண்டியன் (கி. பி. 1251-1270)

**பல்லவத்தலைவன்:**

கோப்பெருஞ்சிங்கன் (கி.பி.பதின்மூன்றும் நூற்றாண்டு)

**விசயநகர்:**

விருபண்ண உடையார் (கி. பி. 1319)

கிருஷ்ணதேவராயர் (கி.பி. 1509-1529)

வேங்கடதேவர் (கி. பி. 1586) மற்றும் விட்டல தேவர்.

முதன் முதலாகக் குறிக்கப்பெறும் அரசர் வீரராசேந்திர சோழர். இறுதியாகக் குறிக்கப்பெறுபவர், கோடல் வசவணநாயக்கரின் புதல்வர் ஆகிய இராமப்ப நாயக்கர்.

**கிராமம்:**

இக்கிராமத்தின் பெயர் திருக்கழுமலம். இது திருக்கழுமல நாட்டில் ஒரு பிரமதேயம். பிரமதேயம் என்பது வேதங்களைக் கற்றுவல்ல பிராமணர்களுக்கு அரசன் வரி செலுத்த வேண்டாமல் பரிசாகக் கொடுக்கின்ற நன்கொடையாகும். திருக்கழுமலநாடு இராசாதிராச வளநாட்டின் ஓர் உட்பிரிவு. கோனேரி தேவமகாராசர் (கி. பி. 1488) ஆட்சியில் இக்கிராமம் சீர்காழி என வழங்கப் பெற்றது.

**சந்நிதிகள்:**

இங்குள்ள முதன்மையான இறைவர் திருக்கழுமலத்துத் திருத்தோணிபுர முடையார் என்றும், திருத்தோணிபுரமுடைய நாயனுர் என்றும் கட்வெட்டுக்கள் குறிக்கின்றன. மூலத்தானத்துச் சுவர்களில், முதலாம் வீரராசேந்திர சோழரின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. ஆதலின், அக்கருவறைப் பகுதி அவ்வரசனின் காலத்திற்கு முன்னரே அமைந்திருந்த தாதல் வேண்டும். வீரராசேந்திர சோழனின் கல்வெட்டு ஒன்று, அம்பிகையின் பெயர் **பெரிய நாச்சியார்** என்று குறிக்கின்றது. அவ்வரசன் ஆட்சியிலேயே, உய்யவந்தான் இராசவிச்சாதரன் என்னும் தலைவனுல், ஆளுடைய பிள்ளையார் (சம்பந்தர்) திருவுருவம் ஒன்று, கோயிலில் எழுந்தருளச் செய்யப் பெற்றது. இக்கோயிலும் தலமும் திருஞானசம்பந்தரின் வரலாற்ருேடு தொடர்புடையவை. ஆதலின், இக்கோயில் அனைவராலும் பெரிதும் மதித்துப் போற்றி வழிபடப்பெற்று வருகின்றது. பலர் நந்தவனங்கள், நிலங்கள், பூசைப்பாத்திரங்கள், ஆகியவற்றைச் சம்பந்தருக்காக வழங்கியுள்ளனர். கல்வெட்டுக்கள் இவற்றைப் பற்றியெல்லாம் விவரிக்கின்றன. மூன்றும் இராசராச சோழன் காலத்தில், ஆளுடைய பிள்ளையார் கோயிலில், மங்கையர்க்கரசி நாச்சியாருக்கும் ஒரு சந்நிதி ஏற்படுத்தப்பெற்றது.

மூன்றும் இராசராச சோழனின் (கி. பி. 1214-1246) ஆட்சிக் காலத்திலேயே, ஆளுடைய பிள்ளையார் சந்நிதியின் முதற் பிராகாரத்திற்குக் கங்கைகொண்ட சோழபுரத்தில் வாழ்ந்திருந்த அன்பர் ஒருவர் திருப்பணி செய்தார். அச்சந்நிதியின் முன்னுள்ள மண்டபத்தில், மூன்றும் குலோத்துங்க சோழனின் (கி.பி. 1179-1216) கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. எனவே அவனது காலத்திற்கும் முன்னரே, அம்மண்டபம் இருந்து வந்ததாதல் வேண்டும். மூன்றும் இராசராசனின் ஆட்சிக்காலத்தில், **காலிங்கராயர்** என்பவர் இங்குத் திருவெண்காடுடையார் சந்நிதியை அமைப்பித்தார். இரண்டாம் இராசராசனின் காலத்தில், இராசராசேசுவரமுடைய நாயனுர் சந்நிதி என ஒன்று குறிக்கப்படுகின்றது. இது முதலாம் இராசராசனுனோ அல்லது இரண்டாம் இராசராசனுலோ அமைக்கப்பெற்ற சந்நிதியாக இருத்தல் கூடும். பதின்மூன்றும் நூற்றுண்டில், பாண்டியர் ஆட்சிக் காலத்தில், பாண்டிநாட்டுப் **பொன்பற்றி** என்னும் ஊரைச் சேர்ந்த தலைவன் ஒருவன், இராசாக்கள் நாயனுர், மரகதச் **சொக்கியார்** என்பவரின் திருவுருவங்களைக் கோயிலில் எழுந்தருளச் செய்தான். மேலும் அரசனின் பெயரால், இராசாக்கள் நாயனுர் சந்தி'' என்னும் சிறப்பு வழிபாடு நிகழ்வதற்கும், நிபந்தங்கள் அமைத்தான். குலோத்துங்கனின் ஆட்சியில் புதிய திருவுருவங்கள் அமைக்கவும், முன்பே அமைந்திருந்து பழுதுபட்டுச் சிதைவுற்றவைகளைச் செப்பனிடவும், நிலக் கொடைகள் வழங்கப்பெற்றன. விசயநகர அரசராகிய **விருபண்ண உடையார்** (கி. பி. 1391) ஆட்சியில், கோயிலில் மண்டபம் ஒன்று புதிதாகக் கட்டப்பெற்றது. மற்றும் அப்போதிருந்த திருஞானசம்பந்தர் மடத்திற்கு நில தானங்களும் செய்யப்பெற்றன.

மூன்றும் இராசராசனின் ஆட்சியில் இக்கோயிலுக்குப் பொற்குவளைகள் பல வழங்கப்பெற்றன. திருநந்தவனத்துக்காகச் செய்யப்பெற்ற நிலதானங்களைப் பற்றிப் பல சாசனங்கள் அறிவிக்கின்றன. கோப்பெருஞ்சிங்கன் (கி. பி. 13 நூற்.) ஆட்சியில், கோயிலில் திருப்பதிகம் ஓதுவதற்கு நிலங்கள் வழங்கப்பெற்றன. இவற்றுள் ஒரு கல்வெட்டு, சுங்கம் தவிர்த்த சோழன் என்னும் முதலாம் குலோத்துங்கன் (கி. பி. 1070-1120) நிலவளவாய்வு (**Revenue Survey**) செய்ததனை உணர்த்துகின்றது. மற்ருெரு கல்வெட்டு, தேவாரத் திருவிசை கற்பித்த ஆசிரியர்களுக்கு நிலக்

கொடை அளிக்கப்பெற்ற செய்தியைத் தெரிவிக்கின்றது. மூன்றும் இராசராசனின் எட்டாம் ஆட்சியாண்டில், துரோகிகளாக மாறிய சிலரின் நிலங்களைப் பறிமுதல் செய்து, பொது ஏலத்தில் கோயிலுக்கு விற்கப்பட்ட செய்தி புலனாகின்றது. கி. பி. 1598-ல், வேங்கடதேவராயர் ஆட்சியில், **ஆபத்துத் தாரணர்** (சட்டைநாதர்) க்குச் சிறப்பு அபிடேகம், நிகழ்த்தப்பெற்ற செய்தியை ஒரு கல்வெட்டுச் சுட்டுகின்றது. புகழ்மிக்க கிருஷ்ண தேவராயர் (கி. பி. 1509-1529) இக்கோயிலுக்குச் சர்வமான்ய நன்கொடைகள் பல வழங்கியுள்ளார்.

## 2. மகேந்திரப் பள்ளி

இத்தலம் சீர்காழி வட்டத்தில் உள்ளது. கொள்ளிடம் இருப்புப்பாதை நிலையத்தில் இருந்து, கிழக்கே 3 கல் தொலைவில் உள்ள நல்லூர்ப்பெருமணம் என்னும் ஆச்சாள்புரத்திற்கு வடகிழக்கில் 4 கல் தொலைவில் உள்ளது. இஃது இப்போது **கோவிலடிப் பாளையம்** என்னும் பெயரால் குறிப்பிடப்பெறுகின்றது. இங்குள்ள இறைவனின் பெயர், திருமேனி அழகேசுவரர். இறைவி, வடிவாம்பிகை. மகேந்திரன் என்னும் இந்திரன் வழிபட்டமையால், மகேந்திரப்பள்ளி (மயேந்திரப்பள்ளி) எனப் பெயர்பெற்றது.

இங்குள்ள கோயில் கிழக்கு நோக்கியுள்ளது; 60 செண்ட் நிலப்பரப்புள்ளது. இங்கு ஒரே ஒரு பிராகாரமும், இறைவனுக்கும் இறைவிக்கும் ஆக இரு சந்நிதிகளும் உள்ளன. இத்தலத்திற் பிரமன் சூரியன் சந்திரன் ஆகியோரும் வழிபட்டு அருள்பெற்றனர். இதனைப் பின்வரும் திருஞானசம்பந்தர் தேவாரப் பாடல் குறிப்பிடுகிறது.

சந்திரன் கதிரவன் தகுபுகழ் அயனொடும்
இந்திரன் வழிபட இருந்தஎம் இறையவன்
மந்திர மறைவளர் மயேந்திரப் பள்ளியுள்
அந்தமில் அழகனை அடிபணிந் துய்ம்மினே.

இதனால் இத்தலம் கி. பி. 7-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாதல் புலனாகின்றது. கி, பி. 15-ஆம் நூற்றாண்டில் விளங்கிய **அருணகிரி நாதர்,** தமது திருப்புகழில் இத் தலத்தைப் பாடித் துதித்துள்ளார். இஃது ஒரு பஞ்சாயத்துச் சிற்றூர். மக்கள் தொகை 1882. இக்கோயிலுக்குப் பரம்பரை உரிமையில்லாத அருச்சகர் ஒருவர், மாத ஊதியம் பெற்றுக் கொண்டு நான்கு காலபூசை செய்து வருகின்றார். இக்கோயிலில் உள்ள பொன் வெள்ளி நகைகளின் மதிப்பு ரூபா முந்நூறு (300) ஆகும். இவற்றுள் அம்பிகையின் பொன்னாலியன்ற திருமங்கல நாண் சிறப்பாகக் குறிப்பிடற்பாலது. இக்கோயிலுக்கு 8.03 ஏக்கர் நன்செய் நிலமும், 2.82 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இவற்றின்மூலம் ஆண்டுக்கு ரூபா ஆயிரத்துத் தொள்ளாயிரம் (1900) வருவாய் கிடைக்கின்றது. இத்தொகை கோயிற் பாதுகாப்புக்கும், பொதுவாகப் பூசை முதலியவற்றிற்கும் பயன்படுத்தப்படுகின்றது. மரத்தால் செய்யப்பெற்ற எருது மயில் குதிரை ஆகிய வாகனங்கள் மூன்று உள்ளன. இக்கோயிலில் திருவாதிரை விழா ஒன்று மட்டுமே முதன்மையான விழாவாகக் கொண்டாடப் படுகின்றது. அறநிலையத் துறையினரால் நியமிக்கப்பெற்ற அறங்காவலர் ஒருவர், இதன் பொறுப்பாளராக இருந்து வருகின்றார்.

## 3. ஆச்சாள்புரம்:

இது தேவாரத்தில் திருநல்லூர்ப் பெருமணம் எனவழங்கும். சிதம்பரத்திற்குத் தெற்கே 5 கல் தொலைவில் உள்ள கொள்ளிடம் இரயில் நிலையத்திற்கு, 3 கல் தொலைவிலும், சீர்காழிக்கு வடகிழக்கில் 10 கல் தொலைவிலும், இத்தலம் அமைந்துள்ளது. இங்குள்ள பழைய சிவன் கோயிலால், இது மிகவும் புகழ் பெற்றுத் திகழ்ந்து வருகின்றது. அக்கோயில் இவ்வூரின் நடுவில் அமைந்திருக்கின்றது. ஆச்சாள்புரம் சீர்காழி கொள்ளிடம் ஆகிய ஊர்களுக்கு உந்தூர்தி வசதிகள் உள்ளன. சென்னை திருச்சிராப்பள்ளி முதன்மைப் பாதையில் உள்ள கொள்ளிடம் இருப்புப் பாதை நிலையம், இங்கிருந்து 4 கல் தொலைவில் உள்ளது. இங்குள்ள குடிமக்கள் தொகை 3087.

148711

ஆச்சாள்புரம் கோயிலின் பரப்பு சுமார் ஒரு ஏக்கர் ஆகும். இதன் இராசகோபுரம் 50 அடி உயரம் வாய்ந்தது. இரண்டு பிராகாரங்கள் உள்ளன. கருவறையில் அழகிய சிற்பவேலைப்பாடு செய்யப்பெற்றுள்ள கருங்கல்தூண்கள் 50 உள்ளன. இங்கேதான், திருஞானசம்பந்தருக்கும் நம்பியண்டார் நம்பி என்பவரின் புதல்வி (சொக்கியார்)க்கும் திருமணம் நிகழ்ந்தது. இத் திருமணத்தைத் திருநீலநக்கர் நடத்தி வைத்தார். திரு நீலகண்ட யாழ்ப்பாணர், திருமுருகர் என்னும் நாயன்மார்கள் அத் திருமணத்திற் கலந்து கொண்டார்கள். இங்குள்ள நூற்றுக்கால் மண்டபத்தில் திருஞானசம்பந்தருக்கும், அவரது மனைவியாராகிய தோத்திரபூரணி அம்மை (சொக்கியார்)க்கும் தனிச் சந்நிதி உள்ளது.

இத்தலத்திற்கு உரிய புனிதமரம் ஆச்சா என்பது ஆகும். அதனை ஒட்டியே இதற்கு ஆச்சாபுரம்எனப் பெயர் ஏற்பட்டது. பிற்றை நாளில் இப்பெயர் ஆச்சாள்புரம் என மருவி வழங்குவதாயிற்று. ஆச்சாள்புரம் என்பது மனைவியைக் குறிக்கும் ஒரு சொல் என்றும், திருஞானசம்பந்தரின் மனைவியார் பிறந்தருளிய ஊர் ஆதல்பற்றி இதற்கு **ஆச்சாள் புரம்** எனப் பெயரமைந்தது என்றும் சிலர்

52
O2m 211, N59TK N73. 15.10.

கூறுவர். இத்தலத்திற்குச் சிவலோகம், நல்லூர், முக்திபுரம் என வேறு பெயர்களும் உண்டு. திருஞானசம்பந்தர் முக்தி பெற்ற தனுல், **முக்திபுரம்** என்றும், திருஞானசம்பந்தரின் திருமணம் நிகழப்பெற்ற நல்ல ஊர் ஆதலின் **நல்லூர்** என்றும்; திருஞானசம்பந்தரின் திருமணத்திற்கு வந்த அனைவருக்குமே **சிவலோகம்** வழங்கியதனுல், சிவலோகம் என்றும் இத்தலத்திற்குப் பெயர்கள் அமைந்தன. இங்கு வசிட்டர் பிருகு பராசரர் விசுவாமித்திரர் சமதக்னி அசுவர் அத்திரியர் துருவாசர் வியாசர் மிருகண்டு கங்கை அகத்தியர் முதலிய பலர் இறைவனை வழிபட்டு அருள்பெற்றனர். இங்கே பிருகுதீர்த்தம் அசுவதீர்த்தம் வசிட்டதீர்த்தம் அத்திரிதீர்த்தம் வியாசதீர்த்தம் மிருகண்டுதீர்த்தம் அகத்தியர்தீர்த்தம் சமதக்னிதீர்த்தம் எனப் பல தீர்த்தங்கள் உள்ளன. மந்தாதா என்னும் அரசனுக்காக' முன்னெரு காலத்தில் சிவலோகத்தியாகராசர் தமது சூலத்தால் உண்டாக்கியதாகக் கூறப்பெறும் பஞ்சாட்சரதீர்த்தம் என்பது தெய்விக ஆற்றல் மிக்கதாகப் போற்றப்பெறுகின்றது. இங்கு விநாயகருக்கு இரண்டு சந்நிதிகள் உள்ளன. ஒன்று தென்மேற்கிலும், மற்றென்று வடமேற்கிலும் உள்ளது.

விக்கிரமசோழன் (கி. பி. 1120-1135) மூன்ரும் குலோத்துங்கன் (கி. பி. 1179-1211), மூன்ரும் இராசராசன் (கி. பி. 1216-1246), மாறவர்ம பராக்கிரம பாண்டியன் (கி. பி. 14 நூற்) ஆகியோருடைய கல்வெட்டுக்கள், பிராகாரச் சுவர்களில் வெளிப்புறத்திலும், உட்புறத்திலும் காணப்படுகின்றன. அவைகள் இறைவனைக் கயிலாசமுடையார், திருப்பெருமண முடைய மகாதேவர், திருப்பெருமண முடையநாஞர் என்றும்; இறைவியைத் திருகாமகோட்டமுடைய நாச்சியார் என்றும் குறிப்பிடுகின்றன. இங்கேயுள்ள சுவாமியின் பெயர், சிவலோகத் தியாகராசர். சுயம்புலிங்கம். கிழக்கு நோக்கியுள்ளார். இங்குள்ள அம்பிகைக்குத் **திருவெண்ணீற்று உமை** என்பது பெயர். இப்பெயர் திருஞானசம்பந்தரால் தம் தேவாரத்தில் சுட்டப்பெற்றுள்ளது.

அம்பிகை கிழக்கு நோக்கியுள்ளாள். மாவடி விநாயகர், சுப்பிரமணியர், நால்வர், அறுபத்துமூவர், சுந்தரேசுவரர், கயிலாயநாதர், நாகநாதர், விசுவநாதர், மாத்ருபூதேசுவரர், சூரியர், சந்திரர், வைரவர், சனீசுவரர், துர்க்கை ஆகிய கடவுளர் இக்கோயிலில் எழுந்தருளியுள்ளனர். சிவபிரான், அம்மை, உமைமுருகிறைவர், இலக்குமி, விநாயகர், முருகர், சந்திரசேகரர் ஆகியோரின் விக்கிரகங்கள் உள்ளன. அவை பஞ்சலோகத்தால் செய்யப்பெற்றவை. கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் அவர்கள் பாடிய தலபுராணமும், மகா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ் என்னும் நூலும், இத்தலத்திற்கு உண்டு. திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இத்தலம் திருநெல்லூர்ப்பெருமணம் என்றபெயரால் சிறப்பிக்கப்பட்டுள்ளது. சாந்தை அயவந்தி, கருவூர் ஆனிலை, கச்சூர் ஆலக்கோயில், கச்சி ஏகம்பம் என்பனவற்றிற்போல, நல்லூர் என்பது ஊரின் பெயர், பெருமணம் என்பது கோயிலின் பெயர்.

கல்லூரப் பெருமணம் வேண்டா, கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய்
ஆய்த்தில;
சொல்லூர்ப் பெருமணம் சூடலரே
தொண்டர்;
**நல்லூர்ப் பெருமணம்** மேய நம்பானே.
—சம்பந்தர்.

பரம்பரை உரிமையுள்ள சிவாச்சாரியர்களால், காரணம் காமிகம் என்னும் ஆகமங்களைத் தழுவி, ஆறுகால பூசைகள் நடைபெறுகின்றன. இக்கோயிலில் உள்ள பழமையான பொன் வெள்ளி அணிகலன்கள், ரூபா பதின்மூன்ருயிரத்துக்கு (13,000) மேல் மதிப்புடையனவாகும். இவற்றுள் அம்மையின் காசுமாலை, திருமங்கல நாண், சுவாமியின் வெள்ளிக்கவசம் என்பவை, சிறப்பாகக் குறிப்பிடுதற்குரியன. 34.39 ஏக்கர் நன்செய் நிலங்களும், 45.22 ஏக்கர் புன்செய் நிலங்களும் உள்ளன. குத்தகை மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூபா நாற்பத்துநான்கு ஆயிரம் (44,000) வருவாய் கிடைக்கின்றது. இத்தொகை, கோயிற் பணியாளர்களின் ஊழியத்திற்கும், நித்திய பூசைகளுக்கும், சிறப்புத் திருவிழாக்களுக்கும், பொது நிர்வாகத்திற்குமாகப் பயன்படுத்தப்படுகின்றது. மரத்தால் செய்யப்பெற்ற ஒரு பெரிய திருத்தேரும் ஐந்து பல்லக்குகளும், பழுதுற்ற நிலையில் உள்ளன. புரட்டாசியில் நவராத்திரி விழாவும், ஐப்பசியில் கந்தர் சஷ்டி விழாவும், வைகாசியில் சம்பந்தர் திருமண விழாவும், நடைபெறுகின்றன. இவற்றுள் திருஞானசம்பந்தர் திருமண விழா, வைகாசியில் பத்து நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. அதுவே இங்கு நடைபெறும் விழாக்களுள் முதன்மையானது. ஆதலால் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அவ்விழாவிற் கலந்துகொண்டு மகிழ்கின்றனர். பரம்பரை அறங்காவலராகிய தருமையாதீனத் தலைவரின் அருளாட்சியில், இக்கோயில் சிறப்புற விளங்கி வருகின்றது.

இவ்வூர், அண்மை வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்ததாகும். தஞ்சை மாவட்டத்தில் ஆங்கிலேயர்கள் 18-ஆம் நூற்ருண்டின் தொடக்கத்தில் நிகழ்த்திய பல போர்களில், இவ்வூரிலும் மிகக் கடுமையானதொரு போர் நடைபெற்றது. கி. பி. 1744-ல் ஆங்கிலேயர்கள் தேவிகோட்டையைக் கைப்பற்றிய பிறகு, ஆச்சாள்புரம் கோயிலையும் கைப்பற்றத் தீர்

மானித்தனர். அதன்படி ஒரு பெரும்படை, கோயிலை நோக்கிப் புறப்பட்டிருந்தது. கோயிற் பொறுப்பேற்றிருந்த சிவாசாரியர் கள், அவர்களை எதிர்த்து ஒன்றும் செய்ய முடியாமையால், கோயிலை மாசுபடுத்தவும், சிதைத்துச் சீரழிக்கவும் வேண்டாமென்று, படைவீரர்களை மன்றாடிக் கேட்டுக் கொண்ட னர். ஆயினும், ஆங்கிலேயர்கள் பலர் கோயி லைக் களங்கப்படுத்தியது கண்டு, தஞ்சையி னின்று வந்த மராத்திய அரசரின் படைகள், ஆங்கிலேயரை எதிர்த்தன. ஆயினும் பயனின் றித் தோல்வியுற்றன. கி. பி. 1759-ஆம் ஆண்டிலும் ஆங்கிலேயர்கள் இக்கோயிலைக் கைப்பற்றி உட்புகுந்திருந்தனர். அதற்குச் சிறிது பின்னர்ப் பிரெஞ்சுக்காரர்களும், சில காலம் இக்கோயிலைத் தம் வசமாக்கி வைத் திருந்தனர்.

இக்கோயிற் கல்வெட்டுக்களின் மூலம், முதன் முதல் சுட்டப்பெறும் அரசன், முத லாம் இராசராச சோழனுவன். இறுதியாக அறியப்படுபவர் மராத்திய அரசராகிய ஏக் கோஜி என்பவர் (கி. பி. 1676-1683). பின் வரும் அரசர்களின் கல்வெட்டுக்கள் இக்கோயி லிற் காணப்படுகின்றன.

1. முதலாம் இராசராசன் (கி. பி. 985-1014)

2. விக்கிரம சோழன் (கி. பி. 1120-1135)

3. இரண்டாம் இராசராசன் (கி. பி. 1163-1178)

4. மூன்றும் குலோத்துங்கன் (கி. பி. 1179-1211). இவன் திரிபுவன வீரதேவன் எனவும் வழங்கப்பெறுவான்.

5. மூன்றும் இராசராசன் (கி. பி. 1216-1246)

6. மாறவர்மன் பராக்கிரம பாண்டியன்

7. சடாவர்மன் சுந்தரபாண்டியன் (கி. பி. 1251-1270)

முதலாம் இராசராசனின் கல்வெட்டுக் கள் சிதைவுற்றுச் சிறுசிறு துணுக்குகளாகவே காணப்படுகின்றன. விக்கிரம சோழனின் ஆட்சியிலிருந்தும், அதற்குப் பிற்பட்டும் உள்ள கல்வெட்டுக்கள் பழுதுபடாமல் இருக் கின்றன. எனவே இவற்றிற்கு முற்பட்ட கல்வெட்டுக்கள் மறைந்திருத்தல் வேண்டும். விக்கிரம சோழனின் காலத்திற்கு முன்னர் இக்கோயில் புதுப்பிக்கப்பெற்றிருத்தல் கூடும். அப்போது பல கல்வெட்டுகள் மறைந்திருக் கலாம்.

## ஊர்ப்பெயர்:

இவ்வூர் இராசாதிராச வளநாட்டில் ஒரு சிறு பகுதி. வெண்ணெயூர் நாட்டு நல்லூர் என வழங்கப்பெற்றது. நல்லூரிலும் அதைச் சூழ்ந்துள்ள சில ஊர்களிலும் இக்கோயிலுக்கு நிலங்கள் நன்கொடையாக வழங்கப்பெற்றி ருந்தன. மகிபாலகுலகாலப் பேரளம், எதிரி லிச் சோழநல்லூர், பஞ்சவன்மாதேவி அல் லது பஞ்சவன்மாதேவி என்னும் குலோத் துங்க சோழச் சதுர்வேலி மங்கலம், திருப் பெருமணநல்லூர், திரிபுவன வீரமங்கலம், சாத்தமங்கலம் என்னும் சிவசரண சேகரநல் லூர். நகரீசுவரப்பேரளம், பராக்கிரமசோழ சதுர்வேலி மங்கலம் எனப் பல ஊர்களின் பெயர்கள், இக்கோயிலிற் காணும் கல் வெட்டுக்களினுல் அறியப்படுகின்றது. இவற் ருல் பல உப்பளங்கள் கோயிலுக்கு உரியன வாக விளங்கியமை தெரிகின்றது.

## கோயில்கள்:

இங்குள்ள கோயிலின் முதன்மைக் கடவுள், நல்லூர்த் திருப்பெருமணமுடைய மகாதேவர் என்றே, எல்லாப் பழைய கல் வெட்டுக்களிலும் குறிக்கப்பட்டுள்ளன. ஆயி னும், ஏக்கோஜி என்னும் மராத்திய அரசரின் கல்வெட்டில், **சிவலோகத்தியாகர்** எனச் சுவாமி யின் பெயர் வழங்கப்பட்டுள்ளது. இங்குள்ள காமகோட்டமுடைய பெரியநாச்சியார் என் னும் அம்மையின் கோயில், 3ஆம் குலோத் துங்கச் சோழனின் ஆட்சியாண்டு 32-ல், சென்னைக்கு அருகில் உள்ள புலியூர்க் கோட் டத்தைச் சேர்ந்த நெற்குன்றம் என்னும் கிரா மத்தில் தலைவனுக விளங்கிய **சந்திரசேகரன்** அல்லது பஞ்சநதிவாணன் என்பவரால் கட் டப்பெற்றது. மூன்றும் குலோத்துங்கச் சோழ னின் ஆட்சிக் காலத்திலேயே, ஆளுடைய பிள்ளையாரின் (திருஞானசம்பந்தர்) சந்நிதி குறிக்கப்பெற்றுள்ளது. இவ்வூரிலேயே, அபய மாணிக்கச்சேரி என்னும் பகுதியில் வாழ்ந் திருந்த ஒருவரால், திருஞானசம்பந்தரின் சந்நிதிக்காக, ஒரு திருநந்தவனம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இக்கோயிலின் முதற் பிராகாரச் சுவர் களில், விக்கிரம சோழன் முதலாகத் தொடங்கி, பல சோழ அரசர்களின் கல்வெட் டுக்கள் காணப்படுவதினுல், இம்முதற் பிரா காரமானது, கி. பி. 12-ஆம் நூற்றுண்டிற்கு முன்னரே தோன்றியிருத்தல் வேண்டும். இம் மாதிரியே எதிரில் உள்ள மண்டபத்தில் பராக் கிரம பாண்டியனின் கல்வெட்டு இருத்தலால், அம்மண்டபமும் 13-ஆம் நூற்றுண்டிற்கு முற் பட்டது எனக் கூறலாம். புறவக்குடி என்னும் ஊரைச் சேர்ந்த **விருதிவிகங்கராயர்** என்பவர், 'பண்படைக்க ஆடுவார்' (நடராசர்) சந்நி தியை அமைத்து, அதற்குரிய பூசை முதலிய

வற்றிற்காக நில தானங்கள் புரிந்துள்ளார். அந்நன்கொடைகள், மூன்றும் குலோத்துங்கனின் ஆட்சிக் காலத்தில் அளிக்கப்பெற்றன. இவ்வாறே மூன்றும் குலோத்துங்கனின் கல்வெட்டுக்களில், நல்லூர்க் கிராமத்தின் ஒரு பகுதியாகிய பஞ்சவன்மாதேவியில், கயிலாசமுடைய மகாதேவர் கோயிலும், அதற்குரிய பொருட் காப்பகமும் இருந்தமையினைக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

விக்கிரம சோழன் காலத்தில் இக்கோயிலில் **பரசமயகோளரி** மடம் என ஒரு மடம் இருந்தது. மூன்றும் இராசராச சோழனின் ஆட்சியில், நல்லூர்க் கயிலாசமுடையார் கோயிலில், ஆளுடைய பிள்ளையார்க்கும் (சம்பந்தர்), அவர் தம் மனைவியாராகிய **சொக்கியாருக்கும்**, நிவேதனங்கள் படைப்பதற்காக ''ஆயிரத்தெண்ணூற்றுவன் சந்தி'' என்னும் சிறப்பு வழிபாடு நிகழ்த்த, ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. இரண்டாம் இராசாதிராசனின் ஆட்சிக்காலத்துக் கல்வெட்டு ஒன்று, **பஞ்சவன்மாதேவி** ஊராட்சிச் சபையார் நிலங்களுக்கு உழவர்கள் செலுத்துதற்குரிய வாரம், கடமை என்பவற்றினுடைய விகிதத்தைக் குறைத்தும், சிற்சில பிரிவு மக்கள் அநுபவித்தற்குரிய உரிமைகள், செய்தற்குரிய கடமைகள் ஆகியவற்றை வரையறுத்தும், உத்தரவு பிறப்பித்ததைப் பதிவு செய்துள்ளது. மூன்றும் இராசராசனின் ஆட்சிக்காலத்தில் மகாசனங்கள் கோயில் நிலங்களுக்குச் சபாவிநியோக வரி செலுத்துதல் வேண்டா என்று விலக்கு அளித்தனர். இத்தகைய செய்திகள் பற்பல, இக்கோயிற் கல்வெட்டுக்களால் அறியப் பெறுகின்றன. (தொடரும்)

— ஆசிரியர்

★


## வந்தவாசி மத்தியப் பாய் நெசவாளர்கள், கோரை உற்பத்தியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம், இன்ட்628.

**த. பெட்டி எண் 8, வந்தவாசி,**

வட ஆற்காடு மாவட்டம்

அருள்மிகு திருக்கோயில்கள், கல்யாண கூடங்கள், அறச்சாலைப் பள்ளிகள் இவைகளுக்குத் தேவையான எல்லாப் பாய்களும் கிடைக்கும். தேவைக்கு ஏற்ற நீள அகலங்களில் பந்திப்பாய்கள், வெள்ளை விரிப்புப்பாய்கள், வர்ண பூவேலைப் பாய்கள், பட்டுப்பாய்கள் மற்றும் சாதாரணப்பாய்களுடன், பாய் நெசவுத் தொழிற்குத் தேவையான எல்லா மூலப்பொருள்களும், தறிக் கருவிகளும் கிடைக்கும். தமிழ் நாட்டில் நீண்ட ரோல் பாய்கள் செய்யும் நிறுவனம். மாநிலத் தொழில் வணிகத் துறையின் கீழ் இயங்கும் நிறுவனம். தங்களின் திருக்கோயிலின் தேவைக்கு எழுதவும்.

(ஒ-ம்) கே. எ. வஹாப், எம். எல். ஏ.,
தலைவர்.

# திருக்கழுக் குன்றத் தலபுராணம்

(அந்தகக்கவி வீரராகவர் இயற்றியது)

[மூலமும் உரையும், முற்றொடர்ச்சி.]

பாடிய ஆக மத்திற் பகர்ந்த காமிகம் ஆதிக்கு
நீடிய பேரா காயத் தத்துவ நெறியே தோன்றுங்
கூடரும் பவித்தி ராட்ட புவனமாய்க் குறித்த வற்றின்
ஊடு, இரண் டாவ தென்ப வுருத்திர கோடித் தானம்

பொழிப்புரை: விதிவிலக்குகளைக் கற்பிக்கின்ற இருபத்தெட்டு ஆகமங்களாகச் சொல்லப்பட்ட காமிகம் முதலாகிய ஆகமங்களில் வகுத்துக்கூறுகின்ற, ஆகாய தத்துவ நெறியாகத் தோன்றிய சேர்தற்கரிய பவித்திராட்ட புவனமாய்க் குறித்தவைகளுக்கும், உருத்திரகோடித்தலம் இரண்டாவது பவித்திராட்ட புவனம் என்பர். (159)

ஓதுமத் தலத்திற் கோடி யுருத்திரர் நமைப் பூசித்தது
ஆதலிற் புவியிற் பெற்ற ததற்குருத் திரகோ டிப்பேர்
மேதகக் கருதினும், பேர் விளம்பினும், விளம்ப லாற்றுப்
பாதகத் தொகுதி யாவும் பருதிமுற பனியாம் அன்றே.

பொழிப்புரை: சொல்லுகின்ற அந்தத் தலத்திற்கோடி உருத்திரர்கள் நம்மைப் பூசித்த தாகையினாலே, அந்தத் தலம் உருத்திர கோடி என்னும் பெயரை இவ்வுலகத்திற் பெற்றது. அந்தத் தலத்தை மேன்மை பெறத் தியானித்தாலும், அதன் பெயரை நாவினால் உச்சரித்தாலும், சொல்லொண்ணாத பெரும்பாவக் கூட்டங்கள் எல்லாம் சூரியனுக்கு முன் பனிநீங்குவது போல நீங்கிவிடும். (160)

காவினுட் கடவுட் கா,வெங் கதிரினுட் கதிரின் வெய்யோன்,
கோவினுட் சுரர்கோ, நன்னீர்க் குழுவினுட் கொழு நீர்க் கங்கை,
பூவினுட் குவளை, குன்றிற் பொற்குன்றம், போலும் அன்றே
தாவினுட் படாத தான உருத்திர கோடித் தானம்.

பொழிப்புரை: சோலைகளுக்குள் கற்பகச் சோலையே சிறந்தது. முச்சுடருக்குள் சூரியனே சிறந்தவன். பசுக்களுக்குள் காமதேனுவே சிறந்தது. நல்ல தீர்த்தங்களாகிய நதிக்கூட்டங்களுக்குள் செழுமையுள்ள தீர்த்தத்தையுடைய கங்காநதியே சிறந்தது. மலர்களுக்குள் குவளை மலரே சிறந்தது. மலைகளுக்குள் பொன்மலையே சிறந்தது. அது போல மேற்கூறிய நன்மைகளை உடைய அறுபத்து நான்கு தலங்களுக்குள் உருத்திர கோடி என்னுந் தலமே மேன்மையை உடையது. (161)

பணியினுட் சேடன், மாதர் பகுதியுட் பதுமை தேவர்
அணியினுட் டமியேம் யாகம் அனைத்தினுள் அயமா மேதம்,
மணியினுட் சிறந்த சிந்தா மணியினை மானும் அன்றே
குணியினுட் குறியாத் தானத் துருத்திர கோடித் தானம்.

பொழிப்புரை: பாம்புகளுக்குள் ஆதிசேடனும், மாதர் கூட்டத்தில் மகாலட்சுமியும், தேவர் வரிசையில் யாமும், வேள்விகள் எல்லாவற்றுள்ளும் அசுவமேதமும், மணிகளுள் சிறந்த சிந்தாமணியும் போலாம், கணக்குக்குள் எண்ணப்படாத தலங்களில் உருத்திர கோடித்தலம். (162)

உலகெலாம் உய்யத் தக்க உருத்திர கோடித் தானத்து
அலகிலாச் சிறப்பை நந்தி சிறிதுஉனக்கு அறைந்தோம்; இப்பால்
இலகும்அத் தலத்து நாப்பண் இருப்பது பொருப்பது ஒன்று;
விலகிஎவ் வினையும் தீர்க்கும் அதனது விளைவு கேணமோ !

பொழிப்புரை : நந்தியே, உலகமெல்லாம் உய்யத்தக்கதான உருத்திரகோடித்தானத்தின் அளவில்லாத சிறப்பினை உனக்குச் சிறிது கூறினோம். இப்பால் விளங்குகின்ற அந்தத் தலத்தின் மத்தியில் ஒரு மலையிருக்கின்றது. அது நீங்குதலில்லாத எவ்வினைகளையுந் தீர்ப்பது. அதனுடைய மேன்மையைக் கேள்.

ஆதியே எம்மில் தோன்றி எமதுஉரு அனைத்தும் தாமாய்ப்
பேதியா அனந்த பேத வேதங்கள் பேரன் போடு
மீதொரு நாள்வந்து எம்மை விழிமழை பொழிந்து, வெள்ளிச்
சோதிஅம் குன்றத்து எய்தித் துடித்து,அடி தொழுது மாதோ.

பொழிப்புரை : முன்பே நம்மிடத்தில் தோன்றிய எம்முடைய உருவமெல்லாருந் தாமாகி, பேதியாமல் அனந்த பேதங்களுள்ள வேதங்கள், மிகுந்த அன்புடன் முன்னொரு நாள் சோதியுள்ள வெள்ளிமலையில் வந்து சேர்ந்து, கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொழிந்து எம்மைத் தொழுது துதித்து. (163)

மூவகை ஆறுறு உள்ளும் இருவகை முயங்கும் மாயத்
தேவகை ஐந்தும் எய்க்கும் இருமையிற் பயனே போற்றி;
பூவகன் சமன் விற்காமன் புரம் சலந்தரன் போர்சாயச்
சேவகம் புரிந்த முக்கட் சிங்கமே போற்றி போற்றி.

பொழிப்புரை : மூன்று வகையாகிய முப்பத்தாறு தத்துவங்களுக்குள், இருவகையாகப் பொருந்திய மாயையிலுண்டான, ஐந்துங் கெடத்தக்கதான இருமைப்பயனே போற்றி. பிரமதேவன் எமன் மன்மதன் திரிபுரம் சலந்தரன் என்னும் இவர்களுடைய போர்சாயும்படி வீரஞ்செலுத்திய முக்கண்களையுடைய சிங்கமே போற்றிபோற்றி. (164)

மண்புனல் அனல்கால் வானம் மதிகதிர் இயமானன் மற்று
எண்பகு திகளாய் முற்றும் இயற்றிய சோதி போற்றி
கண்படு சமாதி ஆதிக் கருத்தினுட் காட்சி மாறாப்
பண்புடை யவர்உட் கோயிற் பராபரா போற்றி போற்றி.

பொழிப்புரை : பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் சந்திரன் சூரியன் ஆன்மா என்னும் அட்டமூர்த்தமாய், உலகமுழுவதையும் படைத்த சோதியே போற்றி. தியானிக்கப்படும் சமாதிமுதலான கருத்தினுள் காட்சிமாறாத பண்பினையுடையவர்கள் மனக்கோயிலில் வீற்றிருக்கும் பராபரனேபோற்றி போற்றி. (165)

நீஅலாத் தேவ ராலும், நீத்துள்ள முனிவ ராலும்,
ஆயுவாற் சிறியர் ஆய அம்புயன் முதலோ ராலும்,
பாயவெம் பரப்பு அடங்காது அவரவர் பரித்தல் ஆற்றார்
நாயக பலரும் பேதித்திட உடல நடுங்கா நின்றேம்.

பொழிப்புரை : தேவரீரையல்லாத தேவர்களாலும், துறந்திருக்கும் முனிவர்களாலும், ஆயுளாற் சிறியராகிய பிரமதேவன் முதலானவர்களாலும், விரிவாயிருக்கிற எங்கள் பிரிவு அடங்காது. மேலும் அவர்கள் எம்மைத் தாங்கமாட்டார்கள். இறைவனே எல்லாரும் பேதிப்பதால் தாங்கள் நடுங்குகிறேம். (166)

கதிர்ஒளித்து இருளின் வீழ்க்கும் காசினி என நின் மாயத்து
உதிதரு மயக்கின் வீழ்ந்த உலப்பிலா அண்டம் எல்லாம்,

முதிர்கலிப் பாவத்து ஆழி மூழ்கிநொந்து இளைத்தோம்; இந்த
மதிஅவி உயிர்கள் மாட்டின் இருத்தலை மனத்தில் நீத்தேம்.

பொழிப்புரை: சூரியன் மறைய இருளில் வீழ்த்தப்படும் பூமியைப்போல், உன் மாயத்தினுலுண்டாகிய மயக்கத்தில் வீழ்ந்தன அழிவில்லாத அண்டங்கள் எல்லாம். அது போல நாங்கள் மிகுந்த பாவமாகிய சமுத்திரத்தில் முழுகி நொந்து மெலிந்தோம். ஆதலால் விவேகம் இழநத இவ்வுயிர்களிடத்தில் இருக்கும் எண்ணத்தை, எங்கள் மனத்தினின் றும் நாங்கள் நீக்கிவிட்டோம். (167)

என்றும்அப் பொருப்பாய் நின்ற எமைஅயன் நான்காச் செய்தான்;
வன்திறற் பரத்து வாசன் மாகாயத் திரியாச் செய்தான்,
ஒன்ருேர்ஐந்து எட்டெ ழுத்தாய், ஒழிந்த மாதவரும் செய்தார்;
அன்றுதொட்டு அவராற் கண்டித்து, அடியம் வெவ்வேறு பட்டேம்.

பொழிப்புரை: எந்நாளும் அம்மலையாய் நின்ற எங்களைப் பிரமதேவன் நான்கு பிரிவாகச் செய்தான். மிகுந்த வல்லமையுள்ள பரத்துவாச முனிவர் பெருமை பொருந்திய காயத்திரியாகச் செய்தார். சில முனிவர்கள் ஓரெழுத்தாகவும், சிலர் ஐந்தெழுத்தாகவும், சிலர் எட்டெழுத்தாகவுஞ் செய்தார்கள். அந்நாள் முதல் நாங்கள் அவர்களாற் பாகு படுத்தப்பட்டு அடியேம் வெவ்வேறுபட்டோம். (168)

தேவர்தாம், முனிவர்தாம், அத்திரை கடல் உலகத்தோர்தாம்,
யாவர்தாம் ஏனும் எம்மை முற்றவும் இசைப்பார் அற்றேம்;
ஓவிலா அங்கத் தோடும் ஒருப்படும் இருப்பும் காணேம்;
ஆவதுன் அருளால் வேண்டி அவாப்பெரிது அலைப்ப வந்தோம்.

பொழிப்புரை: தேவர்களாகிலும், முனிவர்களாகிலும், அலையுள்ள சமுத்திரஞ் சூழ்ந்த உலகத்திலுள்ளவர்களாகிலும், எங்களை முழுவதும் ஓதுகின்றவர்களை அற்றோம். இதுவுமன்றி ஒழிவில்லாத ஆறங்கங்களோடும், ஒன்றுபட்டிருக்குந் தன்மையினையுங் காணோம். ஆதலால் சுவாமிகளால் ஆக வேண்டுவதொன் றுண்டாகிய ஆசை மிகவும் அலைப்பதினல் திருவடியடைந்தோம். (169)

வேற்றிடம் பிறிதுண் டேனும் விமலநின் அருளிற் பெற்ற
பேற்றிடம் பொருவாது; ஊழிப் பிரளயத் தினும்மா ளாத
ஊற்றமாம் புவியின் நாங்கள் ஒருப்பட அங்கத் தோடும்
நீற்றனே உனது அடிக்கீழ் நிலைபெற நிறுத்தல் வேண்டும்.

பொழிப்புரை: பிறிது வேறிடமுண்டாயிருந்தாலும், அவைகள், விமலமூர்த்தியே! விபூதியணிந்திருக்குங் கடவுளே! தேவரீருடைய அருளினற் பெற்ற பேருகிய இடத்துக்கு ஒப்பாகா. ஆகையால் ஊழிப்பிரளய காலத்திலும் அழியாத உறுதியுள்ளதாய்ப் பூலோகத்தினிடத்தில் நாங்கள், ஆறங்கங்களுடனும் ஒன்றுபட்டுச் சுவாமியினுடைய திருவடியின்கீழ் நிலைபெறச் செய்தல் வேண்டும், (170)

என்றிரந் திறைஞ்சி, அன்போ டிரங்கிநெக் குருகி, எம்முன்
நின்ற வேதங்கள் தம்மை நிலைபெற நோக்கி, நீவிர்
சென்றுமது அங்க பேதம் அனைத்தொடும் திரைசூழ் பாரிற்
குன்றென நின்மின்; உங்கள் கொழுந்திடை அடைவோம் யாமும்.

பொழிப்புரை: இப்படியாக அன்புடனே துதிசெய்து பணிந்திரங்கி, மனம் நெக்குவிட்டு உருகி, எம் எதிரில் நின்ற வேதங்களை நிலைபெற நோக்கி, நீங்கள் சமுத்திரஞ் சூழ்ந்த பூமியினிடத்தில் உங்கள் அங்கபேதங்களுடன் சென்று மலைவடிவமாய் நில்லுங்கள். அவ் வண்ணம் இருந்தால் அங்கேயே உங்கள் கொழுந்துபோல நாம் அடைகின்றோம்,

(ஆறங்கங்களாவன, மந்திரம் வியாகரணம் நிகண்டு சந்தோபிசிதம் சோதிடம் நிருத்தம் என்பவைகளாம்.) (171)

அரியதோர் சிவலிங்கத்தின் வடிவதாய் அடைந்து நும்மாற்
புரியும் பூசனைகொண் டந்தப் பொருப்பகத் திருப்பேம் என்றும்;
பெரியநம் மாயை தன்னால் நமைத்தொழப் பெறுதார்க் கேனும்
உரியநும் பொருட்டால் ஞானத் தொளிஎன வெளியாய் நிற்பாம்.

பொழிப்புரை: அருமையாகிய சிவலிங்க வடிவமாய் அமைந்து, உங்களால் செய்யப்படும் பூசனையை ஏற்றுக்கொண்டு, அந்த மலையினிடத்தில் எந்நாளும் வீற்றிருப்போம். இதுவுமன்றி நம்முடைய மாயையினாலே, நம்மைத் தொழப் பெறுதவர்களுக்கேயானாலும், உரிமையாகிய உங்கள் பொருட்டால் ஞான வடிவமாக விளங்கிக் கொண்டிருப்போம். (172)

நாமம் உங்கட்கு வேத கிரிஎன ஞாலத் தோங்கும்;
யாம்அதன் மும்மைத் தொன்மைத் தருமமும் இயற்றி யல்லாக்
காமரு சனங்க ளுக்கும் களஙகு அறுத்து உறைதும் கண்டீர்;
போம்மறைக் கணங்காள்! என்னப்போய்ப் பொருப்பாய அன்றே.

பொழிப்புரை: உங்களுக்கு இந்தவுலகில் வேதகிரியெனப் பேரோங்கும். நாம் அந்தக் கிரியினிடத்திற் பழமையாய் மூன்றுவகைப்பட்ட அறங்களைச் செய்தவர்கள் அல்லாமல் வாழ்க்கை விருப்பம் ஒன்றனையேயுடைய மக்களுக்கும் பாவங்களை நீக்கிக் கொண்டிருக்கிறோம். வேதங்களே நீங்கள் போங்களென்று கட்டளையிடப் போய்க் கிரியாயிருந்தன.

(ஈண்டுத் தருமம் ஒன்றென்றது, அறம் பொருள் இன்பம் என்பவை. காமம் மருவும் எனச் சொல்லத்தக்கது, விகார வகையால் காமரு என நின்றது. காமம்-ஆசை. (173)

இருக்குவேர் ஆக, நாப்பண் எசுர்வென்ப தாகச், சாமம்
திருக்கிளர் அநதம் ஆக, அதருவம் சிகரம் ஆகத்,
தரிக்கும்அவ் வேத மேனிச் சயிலத்தில் இலங்கும் அங்க
வருக்கமும் அநேகம் உண்டு; வகுத்தது விளம்பக் கேண்மோ.

பொழிப்புரை: இருக்குவேதம் வேராகவும், எசுர்வேதம் நடுவாகவும், சாமவேதம் அழகுவிளங்கும் முடியாகவும், அதர்வணவேதம் சிகரமாகவும் தரிக்கும் வேத ரூபமாகிய அந்தமலையினிடத்தில், விளங்குகின்ற அங்கவர்க்கங்கள் அனந்தமுண்டு. அவைகளை வகுதது்ச் சொல்லுகிறோம். நந்தியே கேள். (174)

சந்தம்அதில் தாதுவாய்க், கற்பம்அதன் மூழையாய்த்
தாழ்வரை மீமாங்கிசமாய்த், தருக்கள் உபநிடமாய்ச்
சிந்துஅருவி நிருத்தமாய்ச், சோதிடம் பன்மணியாய்த்
திசைநான்கிற் சாரலும் அச்சிவாகமத்திற் செறிவாய்,
அந்தமிலா வியாகரணம் சிலைக்குலமாய்ப் புராணம்
அனைத்தும் அகத் தந்திரமும், அடவிகளாய்ச் சிக்கை
பைந்தளிரிற் கொடிகளாய்த் தமைஒருங்கு நெருங்கிப்
பருப்பதமாய் வேதங்கள் இருப்பது; அந்தப் பதியே.

பொழிப்புரை: சந்தை என்பது அம்மலையில் தாதுவாயும், கற்பமென்பது அதன் குகையாயும், மீமாங்கிசையானது அதின் தாழ்வரையாயும், உபநிடதம் என்பது அதில் மரங்களாயும், நிருத்தம் என்பது சிந்துகின்ற அருவிகளாயும் சோதிடமென்பது அதிற் பல மணிகளாயும், சிவாகமங்களின் கூட்டம் அதில் நாலுபுறத்திலும் உள்ள சாரல்களாயும், முடிவில்லாத வியாகரணம் கற்களாயும், பதினென் புராணங்களும் அகத் தந்திரங்களும் வனங்களாயும், சிட்சை என்பது. பசிய தளிருள்ள கொடிகளாயும் தங்களுடன் ஒன்றுபட்டுச் சேர்ந்திருக்கும்படி அந்தத் தலத்தில் வேதங்கள் கிரி ரூபமாயிருக்கும்.

(தாது என்பது, பொன் வெள்ளி இரும்பு செம்பு ஈயம் வெண்கலம் தரா என்னும் ஏழுமாம்.) (175)

அப்பெரிய வேதகிரி பிரளயத்தும் தளராது;
அதன்எல்லை கலிநலியாது; அருவினைவந்து அடாது;
தப்பரிய தவம்தானம் தியானமுதற் பிறவும்
தனித்தொன்றை இழைத்தார்க்கும் அனந்தமெனத் தழைக்கும்;
மெய்ப்பதமும் வரமும்பெற்று அருச்சனைய தியற்றி,
வேதங்கள் விழிபனிப்ப மெய்புளகம் அரும்பக்,
கைப்பதுமம் முகிழ்த்தெமது காற்பதுமத்து இறைஞ்சிக்
கள்ளம்வல்லாய் கள்ளம்வல்லாய் எனக்கசிந்து ஓலிடுமால்.

பொழிப்புரை: அந்தப் பெரிய வேதகிரியானது, பிரளயகாலத்திலுந் தளர்ச்சி அடையாது. அதனுடைய எல்லையில், பாபம் வருத்தாது. நீங்குதற்கு அரிய வினையும் வந்து சேராது. தவறுதலில்லாத தவம் தானம் தியானம் முதலான மற்றவைகளில் தனித்து ஒவ்வொன்றை அந்தத் தலத்திற் செய்தவர்களுக்குப் பலன் அதிகமாகத் தழைக்கும். வேதங்கள் உண்மையான பதமும் வரமும் பெற்று, அருச்சனை செய்து கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகவும், மெய்ம்மயிர் பொடிப்பவும், கைத்தாமரை மலர்களை அஞ்சலியாகக் குவித்துத் தொழுது, நம்முடைய திருவடித்தாமரைகளில் பணிந்து, கள்ளத்தனத்தில் வல்லவனே, கள்ளத்தனத்தில் வல்லவனே, எனக் கசிந்து முறையிடும். (176)

அனைத்துலகின் அனைத்துயிர்க்கும் அகம்புறமாய் நிறைந்தும்,
அன்பிலர்க்கு மறைந்துநிற்பேம்; அவர் அறிவும் பறிப்பேம்;
நினைத்துருகும் அன்பினர்க்கு நெடிது வெளிப்படுவேம்;
நிகழ்த்தும்அவர் அறிவின்மை நெறியினையும் பறிப்பேம்;
வினைத்தொழிலிற் கள்வரெலாம் சிலர்க்கொளித்துச் சிலர்க்கு
வெளிநின்றும் வழிபறித்து விரவலர் ஆதலினால்,
கனைத்தமறை அறிந்தெம்மைக் கள்ளம்வல்லாய் எனும்அக்
காரணத்தாற் சான்றவர்க்கும் நமக்கும்அது கருத்தே.

பொழிப்புரை: எல்லா உலகத்திலும் எல்லா உயிர்களிடத்தும் உள்ளும் புறம்புமாய் நிறைந்திருந்தும், அன்பில்லாதவர்களுக்கு மறைந்து நிற்போம். அவர்கள் அறிவையும் பறிப்போம். நம்மைத் தியானித்து உருகா நின்ற அன்புள்ளவர்களுக்கு மிகவும் வெளிப்படுவோம். சொல்லுகின்ற அவர்களுடைய அஞ்ஞானமாகிய நெறியினையும் பறிப்போம். பாவத் தொழிலினையுடைய கள்வர்கள் எல்லாரும், சிலருக்கு ஒளித்துச் சிலருக்குத்தெரிய நின்று வழிபறித்திருப்பார்கள். ஆகையினால் முழங்கா நிற்கும் வேதங்கள் நம்மை அறிந்து "கள்ளம் வல்லாய்" என்று துதி செய்த காரணத்தினாற் சான்றோர்களுக்கும் நமக்கும் அது கருத்தாம். (177)

அந்தமுது வேதகிரி யாம்படைத்தது; அதனால்
அயன்படைத்த தலம்எவைக்கும், அதிதலமாய்ச் சிறக்கும்;
சிந்தனையில் நினைத்தாலும் திருப்பெயர் சொற்றாலும்,
சேய்மையின்கட் கிரிச்சிகரம் தெரியக்கண்டாலும்,
பந்தமுடன் அறிந்தறியாது இழைத்த வினையனைத்தும்,
பவனத்தின் எதிர்குவித்த பசும்பூளைக் குவிப்பாய்
வெந்தழலிற் படுபஞ்சாய், விளக்கொளிமுன் இருளாய்
விடும், அதனின் புகழ்புகழ்ந்து முடிவதரிது என்றான்.

பொழிப்புரை: அந்தப் பழைமையாகிய வேதகிரியை யாம் படைத்த காரணத்தினால், பிரம்மாவினால் படைக்கப்பட்ட தலங்களுக்கு எல்லாம் மேலான தலமாய்ச் சிறப்புற்றிருக்கும்.

அந்தத் தலத்தை மனத்தில் நினைத்தாலும், அதனது திருப்பெயரை வாக்கினுற் சொன்னலும், அதிதூரத்தில் அந்த மலையின் சிகரம் தெரியக் கண்டு தரிசித்தாலும், பந்தமாகிய பாசமும், அறிந்தும் அறியாமலுஞ் செய்த பாவங்கள் எல்லாமும், காற்றுக்கு எதிரில் பூளைப் பூக்குவியல் போலவும், தீயிற்பட்ட பஞ்சைப்போலவும், விளக்கொளி முன் இருள்போலவும் நீங்கிவிடும். ஆதலால் அதன் புகழைப் புகழ்ந்து சொல்லுதல் அரிதுஎன்று நந்திதேவருக்குச் சிவபெருமான் அருளிச்செய்தார். (178)

## உருத்திரகோடிச் சருக்கம்

ஈசன் மாற்றத்தை நந்தி இனிதுகேட்டு
ஆசிகூறி அடிபணிந்து, எம்பிரான்
ஓசை மல்கும் உருத்திர கோடியர்
பூசை நின்னைப் புரிஒழுங்கு ஏது?என்றுன்

பொழிப்புரை : இவ்வாறு பரமசிவம் அருளிச் செய்த திருமொழிகளை, நந்திதேவர் இனிதாகக் கேட்டு வாழ்த்துதல் கூறி, அவருடைய திருவடிகளைப் பணிந்து, எம் இறைவனே, புகழ் நிறைந்த உருத்திரகோடியர்கள், தேவரீரைப் பூசித்த முறைமை எவ்வாறு? அதை அருளிச் செய்யவேண்டும் என்று விண்ணப்பஞ் செய்தார். (179)

நோன்தலைப் புவனங் கட்கு நோய்பல
போன்று அலைத்த அவுணரைப் போக்குவான்,
ஊன்றும் மொய்ப்பின் உருத்திர கோடியர்
தோன்ற நம்மிடம் தோற்றுவித் தேம்அரோ !

பொழிப்புரை : வன்மை பொருந்திய இடத்தையுடைய பல புவனங்களுக்கும், பல நோயடுத்தது போல, உயிர்களை வருத்திய அவுணர்களை ஒழித்துவிடப் பொருந்திய பலத்துடன் உருத்திரகோடியர்கள், நம்முடைய திருமேனியில் இருந்து தோற்றும்படி தோற்றுவித்தோம். (180)

நொய்தினிற் பண்டு நூறநூ றுயிரம்
மெய் தரித்த உருத்திரர் மெய்ந்நிறம்
கை திரட்புயம் செம்முகம் கண்முதல்
எய்தும் யாவையும் எய்மைஒத்து எய்தினர்.

பொழிப்புரை : முற்காலத்தில் கோடித் தொகையுள்ளவர்களாய்த் தோன்றிய உருத்திரர்கள், சரீரநிறம், கைகள், திரண்ட தோள்கள், செவ்விதான முகம், கண்கள் முதலாகப் பொருந்திய உறுப்பு எல்லாம், எம்மையொத்து வந்தார்கள். (181)

நாகப் பூணினர் நான்கு புயத்தினர்
ஆகத் தீயினர் அங்கத்து மாலையர்
மேகக் கந்தரர் வீழ்சடைக் கற்றையர்
யோகச் சிந்தையர் ஒண்புலித் தோலினர்.

பொழிப்புரை : அந்த உருத்திரர்கள் இன்னும் எத்தன்மையுள்ளவர்கள் என்றுல், நாகாபரணம் அணிந்தவர்கள். நான்கு புயங்களுள்ளவர்கள். நெருப்புப் போன்ற மேனியுள்ளவர்கள். எலும்பு மாலை அணிந்தவர்கள். காளகண்டம் உடையவர்கள். தாழ்ந்த சடைக்கற்றையை உடையவர்கள். யோகசிந்தையுள்ளவர்கள். ஒளியுள்ள புலித்தோலாடை உடையவர்கள். (182)

கையின் முத்தலைச் சூலர் கணிச்சியர்
எய்யும் வில்லர் எறிசக் கரத்தவர்
பெய்யும் கப்பணர் பிண்டி பாலத்தினர்
வெய்ய குந்தத்தர் நாந்தக வீச்சினர்.

பொழிப்புரை : கையில் முத்தலைச் சூலமுடையவர்கள். மழுப்படையுள்ளவர்கள். பாணம் ஏவும்படியான வில்லையுடையவர்கள். எறிகின்ற சக்கராயுதம் உள்ளவர்கள். வீசுகின்ற கப்பணமுள்ளவர்கள். பிண்டிபாலமுள்ளவர்கள். வெவ்விதான கைவேலை உடையவர்கள். வாள் வீசுகிறவர்கள். (183)

மாரு தத்தின் கதியர் மலையலைத்து
ஈரும் கையர் இடியுரும் ஆர்ப்பினர்
மேரு நீட்சியர் வெவ்விடைச் சேடனும்
பாரும் பேரப் பதங்கள் பெயர்த்துள்ளார்.

பொழிப்புரை : வாயுதேவனை ஒத்த வேகமுள்ளவர்கள். மலைகளை அலைத்துப் பிளந்து விடும் கையை உடையவர்கள். இடிபோன்ற ஆரவாரத்தினர். மேருவையொத்த உயரமுள்ளவர்கள். வெவ்வியவிடமுள்ள ஆதிசேடனும் பூமியும் பெயரும்படி, அடியெடுத்து நடப்பவர்கள். (184)

அனையர் எம்மை அடிதொழ நோக்கியாம்
முனைவர் உப்பர் கணத்தை முனிந்தெழும்
துனை தைத்தியர் வெள்ளம் தொலைத்து நீர்
இனையும் அண்டங்கள் காமின் எனச்சொன்னோம்

பொழிப்புரை : அவர்கள் வந்து எம்முடைய திருவடிகளை வணங்க, நாம் பார்த்து, முனிவர் கூட்டத்தையுந் தேவர்கூட்டத்தையுங் கோபித்தெழுகின்ற வேகமுள்ள அசுரர் கூட்டத்தை அழித்து, அவர்களால் வருந்துகின்ற அண்டங்களைக் காத்துக் கொண்டிருங்கள் என்று உருத்திரர்களுக்குக் கட்டளையிட்டோம்.

(காசிப முனிவர் மனைவியர் பதின்மூவரில் திதியென்பவளுடைய புத்திரர்களாகையால், அசுரர்கள் தைத்தியர்கள் எனப் பேர் பெற்றனர்.) (185)

பாத லத்தின் பரப்பும் பொருப்பும்இப்
பூத லத்தின் புறம்பும் புணரியும
மாதிரத்து அந்தமும் திதி மைந்தரை
பேதறத் தெறுவான் பெரிது ஏகினர்.

பொழிப்புரை : பாதாளத்தினிடத்தும், மலைகளினிடத்தும், சமுத்திரத்தினிடத்தும், தீபாந்தரங்களினிடத்தும், இவைகளுக்குப் புறம்பாகிய இடங்களிலும் இருககின்ற திதி புத்திரர்களாகிய அசுரர்களைக் கொலை செய்யச்சென்றார்கள் உருத்திரர்கள். (186)

நிலமும் நீரும் நெருப்பும் உலவையும்
தலமும் வானமும் தங்கும் தகுவரை
அலமரக் கொன்று அறத்தை அழித்துஅண்டம்
பல புரத்தனர் பல்பெரும் கற்பமே.

பொழிப்புரை : பிருதிவி அண்டத்திலும், அப்புஅண்டத்திலும், தேயுஅண்டத்திலும், வாயுஅண்டத்திலும் வாசமாயிருக்கும் அசுரர்களை எல்லாம் சுழலும்படி கொன்று, தருமத்தைக்காப்பாற்றி, பலவாகிய அண்டங்களையும் அநேக கற்பகோடிகாலம் பாதுகாத்தார்கள். (187)

ஆயி டைக்கடல் ஆரமுதம் கடைந்து
ஏய அண்டர்க்கு இடைஎமது ஏவலால்,
மாயன் இந்திரன் ஆதியர் மத்தமாய்ப்
பாய மந்தரம் பண்டுஎடுத் தான்அரோ.

பொழிப்புரை : அப்படியிருக்குங் காலத்தில் பாற்கடலைக் கடைந்து; அதிலுண்டாகிய அரிய அமுதத்தை விரும்பிய தேவர்களுக்கு அளிக்கும் பொருட்டு எம்முடைய கட்டளையினால், இந்திரன் முதலான தேவர்களுடன் மாயவன் சென்று கடல்கடைதற்கு மத்தாகப் பெரிய மந்தரகிரியை முற்காலத்தில் எடுத்தான். (188)

எடுத்த பாதலத் தின்வழியே எழுந்து
அடுத்த தானவர் ஆயுத பாணியும்
மடித்த வாயும் வதன மும் நோக்கமும்
முடித் தலங்களும் பற்பல முற்றினர்.

பொழிப்புரை : இவ்வாறு மேருவை பலதிதங்களும், பல கண்களும், எடுத்த பாதலத் தின்வழியாக அயுதபாணியர்களும், மடித்த வாயினையுடையவர்களும், பல முகங்களும், பல கண்களும், பலமுடிகளு முடையவர்களுமாய், அநேகம் அசுரர்கள் எழுந்தார்கள். (189)

பற்பல சிரத்திரள் கரப்பணை அணைப்பார்
வெற்பினொடு வெற்புடைய மீமிசை புடைப்பார்
அற்புதம் உறப்பெரிய அண்டநிறை எல்லாம்
புற்புதம் உடைத்தென உடைத்துஅவை பொதுப்பார்

பொழிப்புரை : பெருமரக்கிளைகளையொத்த ஒருகையில் அநந்தமாகிய தலைகளைச் சேர்த்துப்பிடிப்பார்கள். இடிபட்டுடையும்படி மலைகளுடன் மலைகளை மோதுவார்கள். யாவரும் அதிசயிக்கும்படி அண்டகோடிகளை எல்லாம் நீர்க்குமிழியை உடைப்பது போல் உடைத்து மேலும் அவைகளைத் தூளை செய்வார்கள். (190)

கைக்கடகம் அத்திகிரி வெற்பது கவிப்பார்
மெய்க்கடை விபத்தழல் விழிக்கடை விளைப்பார்
அக்கடலொடு இக்கடல் உடைத்து அலைகலைப்பார்
மைக்கடல் மழைத்திரள் குழைச்சன வனப்பார்.

பொழிப்புரை : தங்கள் கைக்குக் கடகமாகச் சக்கிரவாளகிரியை அணிந்து கொள் வார்கள். உண்மையான ஊழிமுடிவில் எழுகின்ற தீயைத் தங்கள் கடைக்கண்களால் உண்டாக்கி விடுவார்கள். அந்தக் கடலையும் இந்தக் கடலையும் உடைத்துவிட்டு இரண்டும் ஒன்றுபட்டு அலைகள் வீசிக்கொண்டிருக்கும்படி செய்வார்கள். கருங்கடலைக் கரிய மேகங் களுடன் கலந்ததை ஒத்தநிற முள்ளவர்கள். (191)

கைக்கொடு புடைத்துஒர் எழுகாசினி பிளப்பார்
திக்கிடை மதக்கரி எடுத்து இதழ் செறிப்பார்
ஒக்கமுகடு எட்டி உடுவின்குலம் உதிர்ப்பார்
சக்கரம் எனத் தவனனைத் தனிதிரிப்பார்

பொழிப்புரை : தங்கள் கையாலடித்து ஏழு உலகங்களையும் பிளந்து விடுவார்கள். அஷ்டதிக்கிலுமிரா நின்ற மதயானைகளை எடுத்துத் தங்கள் உதடுகளில் இடுக்கிக் கொள் வார்கள். அண்டமுகட்டை ஒட்டி நட்சத்திரக்கூட்டங்களை உதிர்ப்பார்கள். சக்கரம் போலாகச் சூரியனைத் தனியே எடுத்துச் சுழற்றுவார்கள். (192)

தாழிய பிலத்தரவு தாள்படம் இணைப்பார்
ஏழ்உயர் பொழில்களை இணர்த்தொடை தொடுப்பார்

ஆழிகள் குடிக்கஒரு கைக்கிடை அடைப்பார்
ஊழியின் நெருப்பைஓர் உயிர்ப்பொடும் அவிப்பார்.

பொழிப்புரை: தாழ்ந்த பாதாளத்திலிருக்கும் பாம்புகளை எடுத்துத் தாழ்வடமாக அணிந்து கொள்வார்கள். உயர்ந்த ஏழு பொழிலையும் கொத்துமாலைகளாகத் தரித்துக் கொள்வார்கள். சமுத்திரங்களை எல்லாங் குடிக்க ஒரு உள்ளங்கையில் சேர்ப்பார்கள். ஊழித்தீயை ஒரு சுவாசத்தினுல் அவித்துவிடுவார்கள். (194)

எட்டிறைவர் திக்கிறைமை யாவையும் ஒழிப்பார்
மட்டவிழ் மலர்க்கமலம் வானுலகு அலைப்பார்
கட்டரண் அழித்து அரிபுரக்குடி கலைப்பார்
சிட்டர்தம் மகத்தொழில் தவத்தொழில் சிதைப்பார்.

பொழிப்புரை: எட்டுத் திக்குப்பாலகர்களும் அவரவர் திக்கில் செலுத்தும் அரசாட்சியை மாற்றிவிடுவார்கள். தேனுடன் மலிந்த தாமரைமலரிலிருக்கும் பிரமதேவனுடைய சத்தியலோகத்தை அலைத்துவிடுவார்கள். கட்டுக்காவலை அழித்து விஷ்ணுவின் உலகத்திலிருக்குங் குடிகளைக் கலைத்துவிடுவார்கள். சிரேஷ்டர்களாகிய முனிவர்களுடைய யாகங்களையும், தவங்களையும் அழிப்பார்கள், (195)

இத்திறம் நெருக்கினர் ஒருங்கவுணர் எங்கும்
அத்திறம் அறிந்துஅயனொடு அண்டர் முனிவோரும்
ஒத்தனர் நமைக்கயிலை யூடு துதிபாடிக்
கைத்தலம் முகிழ்த்து முறையிட்டனர் கலுழ்ந்தார்.

பொழிப்புரை: இவ்வண்ணம் அந்த அவுணர்கள் எல்லா உலகங்களிலும் நெருக்கினூர்கள். அதைப் பிரமதேவனும் தேவர்களும் முனிவர்களும் அறிந்து கயிலாயத்தில் வந்து நம்மைப் பணிந்து துதிசெய்து கைகளைக் குவித்துத் தொழுது முறையிட்டுத் துயரமடைந்தார்கள்.

தானவர் எனும்கடல் தழீஇயது உலகெங்கும்
வானகமும் வையகமும் மற்றெரிடம் அற்றே
ஊனமில் உனக்கலது எமக்கு ஒழிவதன்ருல்
ஞான முதலே அபயம் என்றிவை நவின்ருர்.

பொழிப்புரை: அசுரர் என்கிற சமுத்திரம் உலகமெங்கும் வியாபித்திருக்கின்றது. வானுலகத்தையும் பூலோகத்தையும் மற்றுமுள்ளவரிடங்களையும் இழந்தோம். நித்தியராகிய தேவரீருக்கல்லது அந்தக் கூட்டம் எங்களுக்கு ஒழிவதல்ல. ஞானமுதல்வனே அபயம் அபயம் என்று முறையிட்டார்கள். (196)

வேறு

அற்றம் அரற்றிய அண்டரை நோக்கி
கொற்ற உருத்திர கோடியர் தம்மை
உற்றெழு தானவரைப் பொருது ஒல்லைச்
செற்றிடு மின்என ஏவுதல் செய்தேன்.

பொழிப்புரை: தேவர்கள் தங்கள் துயரத்தைச் சொல்லி முறையிடுவதை நோக்கி எங்கும் வியாபித்திருக்கிற தானவர்களைப் போர் செய்து விரைவாக வதை செய்யுங்கள் என்று வெற்றி பொருந்திய உருத்திர கோடியர்களை ஏவினேம். (197)

அன்னவர் எம்மை அடிதொழுது ஐயா
இன்னல் இழைத்த தயித்திய ரேனும்

முன்னர் அருந்தவம் முற்றினர் அன்னோர்
மன்னுயிரைத் தெறல் வலவினை அன்றோ !

பொழிப்புரை : அந்த உருத்திரர்கள் நம்முடைய திருவடியை வணங்கி, அந்தத் தானவர்கள் உலகங்களுக்குத் துன்பஞ் செய்தவர்களை யானாலும், ஆதியில் அருந்தவஞ் செய்தவர்கள் ஆதலால் அவர்கள் உயிர்களைக் கொல்வது பாவமல்லவோ என்றனர். (198)

எவ்வுயி ரேனும் இறத்தெறு வாரை
வெவ்வினை மூடி விடும் ; தவமிக்கோர்
அவ்வுயிர் அட்ட அளப்பில தீமைக்கு
உய்வினை யாதென ஓதினர் மாதோ !

பொழிப்புரை : எவ்வகைப்பட்ட உயிரைக் கொன்றாலும் அவர்களைப் பாபம் வந்து மூடும். அவ்வாறிருக்க, தவமிருந்துள்ளவர்களைக் கொன்ற அளவில்லாத பாவத்துக்கு உய்யுஞ் செய்கையாதோ? என்று விண்ணப்பஞ் செய்தார்கள். (199)

அந்தணர் தேவர் அருந்தவ ருக்காய்
வந்தன தீமை வராது ஒருவர்க்கும்
உந்தம் மனப்பயம் ஒன்றுள தேனும்
நந்தம் அருச்சனை யால்நவை போமால்.

பொழிப்புரை : அந்தணர்கள், தேவர்கள், முனிவர்கள் என்னும் இவர்கள் பொருட்டு உதவி செய்வதினால் வருகின்றனவாகிய பாவங்கள் ஒருவர்க்கும் வருவன அல்ல. உங்கள் மனத்தில் பயமிருந்தாலும் நம்முடைய அருச்சனையால் அப்பாவம் நீங்கும். (200)

ஆதலின் அக்கொடி யாரை அறுக்கும்
ஏதம் அனைத்தும் எரிக்கிடு பஞ்சாம்
பாத அருச்சனை நம்உழை பண்ண
வேத கிரிக்கு அடைமின் எனவிட்டேன்.

பொழிப்புரை : ஆதலால் அந்தக் கொடியவர்களைக் கொல்லும் பாவங்கள் எல்லாம் தீயின் முன்னிட்ட பஞ்சுபோலாம். நம்மிடத்தில் பாதபூசை செய்யும்படி வேதகிரித்தலத்தில் அடையுங்கள் என்று அனுப்பினோம்.

விட்டுழி நம்விடை கொண்டு விருப்பின்
மட்டற முன்னர் வணங்கி எழுந்தார் ,
ஒட்டலர் தம்மை உருத்திர கோடிச்
சிட்டர் நடந்துஅமர் செய்குநர் புக்கார்.

பொழிப்புரை : இவ்வாறு நாம் விடைகொடுத்த அளவில் சிஷ்டர்களாகிய உருத்திர கோடியர்கள் மிகுந்த விருப்பத்துடன் பலமுறை பணிந்து சென்று அந்தத் தானவர்களுடன் போர்செய்யத் தொடங்கினார்கள். (202)

கண்டனர் தானவர் கண்கள் சிவந்தார்
அண்டம் எலாம் அதிரப் பெரிதார்த்தார்;
மண்டு பிலப்பகு வாய்கள் மடித்தார்
விண் தடவும் புயமீது புடைத்தார்.

பொழிப்புரை : அந்தத் தானவர்கள் உருத்திர கோடியரைக் கண்டு கோபத்தினால் கண்கள் சிவந்து அண்டங்கள் எல்லாம் அதிரும்படி மிகுதியாக ஆரவாரித்து ஆழ்ந்த பிலம் போன்ற வாயை மடித்துக்கொண்டு, ஆகாயத்தை அளாவிய தங்கள் புயங்களைத் தட்டினார்கள். (203)

அங்கைஒர் ஆயிரம் ஆயிரம் வெற்பா
வெங்கை உருத்திரர் மீமிசை விட்டார்
பொங்கர் மரங்கள் புலம்ப எடுத்தார்
மங்குல் அனைத்தும் மறைப்ப எறிந்தார்.

பொழிப்புரை : இவ்வண்ணம் ஆரவாரித்த அசுரர்கள் ஒருகைக்கு ஆயிரம் ஆயிரம் மலைகளாக எடுத்து வெவ்விதான படைவகுப்பினையுடைய உருத்திரர்கள் மேல் எறிந்தார்கள். பெரும்பணைகளுள்ள மரங்களை ஓசை கொள்ளும்படி எடுத்து ஆகாயம் முழுவதும் மறைய எறிந்தார்கள்.

தாரு முகந்தனர்; சிற்சிலர் சையம்
வேரொடு எறிந்தனர் சிற்சிலர் வெவ்வேல்
ஆரும் வழங்கினர்; சிற்சிலர் அம்பின்
மாரி சொரிந்தனர்; சிற்சிலர் வல்லோர்.

பொழிப்புரை : சில அசுரர்கள் தருக்களைப் பிடுங்கி எறிந்தார்கள். சிலர் மலைகளை வேருடன் பிடுங்கி எறிந்தார்கள். சிலபேரெல்லாரும் வேலாயுதம் ஏவினார்கள். சில அசுரர்கள் அம்புமழை பொழிந்தார்கள்.

வெய்யவர் இன்ன விளைத்தமை கண்டார்
செய்ய உருத்திரர் புன்னகை செய்தார்
கையமர் விற்படை கால்கள் வளைத்தார்
அய்யன் அடித்துணை எண்ணி அடர்த்தார்.

பொழிப்புரை : அசுரர்களிவ்வாறு போர் செய்ததை உருத்திரர்கள் கண்டு புன்னகை செய்து தங்கள் கைளில் இருக்கும் விற்களை வளைத்துப் பரமசிவனுடைய திருவடிகளைத் தியானித்துப் போர் செய்தார்கள். (207)

நாண் எறியில் திசைநாலும் அதிர்த்தார்
பாண விதப்பெரு மாரி பகுத்தார்
மாண்அலர் விட்ட மரம்கிரி எல்லாம்
சேண்உல கத்திடை நுண்பொடி செய்தார்.

பொழிப்புரை : நாண் எறிவதனால் திக்குகள் நான்கையும் அதிர்ப்பித்தார்கள். பாண விதங்களாகிய பெருமழை பொழிந்து அவ்வசுரர் எறிந்த மரங்களையும் மலைகளையும் அந்தரத்திலே தானே நுண்பொடியாகும்படி நொறுக்கிவிட்டார்கள். (208)

விட்டன விட்டன வெம்படை யாவும்
தொட்டன தொட்டன வாளி துரப்ப,
அட்ட வெயிற்பனி போல்மடி வித்தார்,
பட்டனர் தானவர் என்கை படுத்தார்.

பொழிப்புரை : அசுரர்கள் விட்ட படைகளை எல்லாம், உருத்திரர் விடுக்கும் பாணங்களினால் வட்டமாகிய சூரியன் முன் பனிபோல மடிவித்து, அசுரர்கள் இறந்தார்கள் என்று சொல்லும்படி செய்தார்கள். (209)

மீது படப்பட வெம்சரம் மாரி
தீது படப்பழி பட்டனர் தீயோர்
மோதும் உடற்குரு திக்கடல் முந்நீர்
ஓதம் அனைத்தும் ஒழித்துளது அம்மா.

பொழிப்புரை: உருத்திரர்கள் எவும் பாணங்கள் தங்கள் மேல் வந்து வந்து படுதலால், தீமை நேரும்படி பழிபட்டிறந்தார்கள். அவ்வசுரர் உடல் உதிரக்கடல் பெருகி மூன்றுவகைச் செய்கையினை உடைய கடல்களை யெல்லாம் மறைத்துத் தன்னிறமாக்கியது.

[கடலுக்கு மூன்றுவகைச் செய்கையாவது: ஆக்கல் அளித்தல் அழித்தல் என்பனவாம். இவ்வாறு இன்றி ஆற்றுநீர் வேற்றுநீர் ஊற்றுநீர் என்னும் இம்மூன்றுவகை நீரையுடைய தாதலால் முந்நீரெனக கூறுதலும் ஒன்று.] (210)

பருந்து கொடித்திரள் பந்தர் இடக்கீழ்
இருந்து பிணக்குவை மேடையின் ஏறி
அருந்தி நிணத்தசை அங்கைகள் சோரி
பொருந்தி விளங்குவ பூத பதாதி.

பொழிப்புரை: பருந்துகளும் காக்கைக்கூட்டமும் மேலே பந்தலிடக் கீழிருந்த பிணக்கூட்டமாகிய மேடைமேலேறியிருந்து, மாமிசங்களை அருந்திக் கைகளில் உதிரத்தைப் பொருந்திப் பூதசேனைகள் விளங்குவன. (211)

பாடின கூகைகள்; பாடு களத்தாடு
ஆடின பேய்கள்; அனந்த கவந்தம்
வீடின தானவர் வெள்ளம் அனைத்தும்;
சூடின வாகை உருத்திரர் தோளே!

பொழிப்புரை: கோட்டான்கள் பாடின. அவை பாடுங் களத்தில் பேய்களுடன் அநந்தங் கவநதங்களுமாடின. தானவர் கூட்டம் எல்லாம் இறந்தன. உருத்திரர் தோள் கள் வெற்றி மாலையணிந்தன. (212)

ஆர்த்தன அந்தர துந்துபி ஐந்தும்;
போர்த்தன பூமழை; பூவுலகு எல்லாம்
பார்த்தன வானவர் பார்வை களிப்பால்;
சீர்த்தன நான்முகன் ஆதியர் செல்வம்.

பொழிப்புரை: தேவதுந்துபி என்னும் பஞ்சவாத்தியங்களும் வானத்தில் ஆர்த்தன பூலோகம் எல்லாங் கற்பகப்பூமாரி நிறைந்தன. தேவர்களுடைய கண்கள் களிப்புடன் பார்த்தன பிரமதேவன் முதலானவர்கள் செல்வங்கள் சிறப்படைந்தன. (பஞ்சவாத்தியம்: தோற்கருவி துளைக்கருவி நரம்புக்கருவி கஞ்சக்கருவி மிடற்றுக்கருவி என்பனவாம்.) (213)

அருந்தவத் தொகை மிகுத்தவர் ஆகியும் அவுணர்
திருந்தும் முக்கணன் கணங்களை அலைத்தலிற் சிதைந்தார்;
பொருந்தும் அச்சிவன் அடியவர்க்கு அலக்கணே புரிந்து
வருந்து வித்தவர் கிளையொடும் கெடுதல் மற்று அரிதே.

பொழிப்புரை: அரிதான தவத்தொகுதியால் மிகுந்தவராயிருந்தும் அவ்வவுணர் பரமசிவனுடைய கணங்களை அலைத்ததினால் அப்போது சிதைந்தார்கள். ஆதலால் நித்தியனாகிய அந்தப் பரமசிவனுடைய அடியவர்களுக்குத் துன்பஞ்செய்து வருத்தப்படுத் தினவர்கள் சுற்றத்துடன் அழிவது அருமையோ? (214)

அவனி யாவையும் அவுணரை உருத்திரர் அடர்த்துச்
சிவன சேவடி சூடிவென்று அரகர தெளித்தார்
தவம் நடாத்தினர் உயிர்க்கொலை பொறுக்கலர் தரியார்
புவன மீது வேதகிரி நோக்கினர் போனார்.

பொழிப்புரை: உலகம் எங்கும் இருந்த அவுணர்களை எல்லாம், உருத்திரர்கள் கொன்று வென்று, பரமசிவனுடைய திருவடிகளைச் சூடிக்கொண்டு அரகர வென்று ஆரவாரித்துத், துதித்துத் தவஞ் செய்த அந்த அசுரர்களைக் கொன்ற பாவம் தாங்க மாட்டாமல் பூலோகத்திலிருக்கும் வேதகிரியை நோக்கிச் சென்றார்கள். (215)

வாட்டமாம் பசிக்கன்று தாய்மருங்கு நாடுகை போல்
வேட்ட மாழையை வறியவர் விழைந்து போந்தமை போல்
கேட்டதோர் அடையாளத்தினல் மறைக்கிரியை
நாட்டமே புரிந்து உருத்திரகோடியர் நடந்தார்.

பொழிப்புரை: வாட்டமுள்ளதாகிப் பசியையுடைய கன்றானது தாய்ப்பசுவினிடத்திற் குறித்துச் செல்வது போலவும், யாவரும் விரும்பத்தக்க பொன்னினை வறுமையாளர் விரும்பிச் சென்றது போலவும், தாங்கள் முன் கேட்ட அடையாளப்படி வேதகிரியை நாடிக் கொண்டு உருத்திரகோடியர் நடந்தார்கள். (216)

சென்று தூர வேதகிரிச் சிகரி கண்டளவே
ஒன்றும் வேறு அறியாது அயர்ந்து உரோமங்கள் சிலிர்ப்ப
நன்று தம்கணீர் நனைதரும சேறு மெய்நனைப்பத்
துன்று பாரிடைத் தண்டம் ஒத்து இறைஞ்சினர் துதித்தார்.

பொழிப்புரை: இவ்வாறு நடந்த உருத்திரர்கள் வேதகிரியின் சிகரத்தைக் கண்ட மாத்திரத்தில், வேறொன்றும் தெரியாமல் பரவசமாய், உரோமங்கள் புளகமடைய ஆனந்தத்தினல் தங்கள் கண்களில் இருந்து மிகுதியாகப் பெருகிய நீர் செய்த சேறு, தங்கள் சரீரத்தை நனைக்கும்படி, பொருந்திய பூமியினிடத்தில் தண்டம் போல் விழுந்து பணிந்து துதிசெய்தார்கள். (217)

வேத வெற்பது சிவலிங்க வடிவுடன் விளங்கக்
காதல் மிக்கு அரகர எனச் சேய்மையிற் கண்டார்
ஏதெனச் சொல்வது எண்ணிலா உயிர்க்கொலை இழைத்த
பாதகத் தளையிடை இடப்படு சிறை காணர்.

பொழிப்புரை: வேதகிரியானது சிவலிங்கவடிவமாகத் தோன்றத் தூரத்தில் வரும் போதே கண்டுமிகுந்த அன்புடன் அரகரவென்று துதித்தார்கள். அவ்வண்ணந் துதித்த அளவே, இதனை என்னென்று சொல்வது? அளவில்லாத உயிர்க்கொலை செய்த பாதகத் தளையில் அகப்படும்படியான சிறையைக் காணுதவர்களானர்கள். (218)

அந்த நான்மறைப் பொருப்பு அருவியின் மணிக்கணமும்
சந்த னடவி காகதுண் டாடவித் தழைப்பும்
இந்துகாந்த வெண்பளிக்கு வேதிகை நகைஎறிப்பும்
புந்தியோடு கட்புலன்களும் கவர்தரப் பொலியும்.

பொழிப்புரை: அந்த வேதகிரியின் அருவியில் வருகின்ற மணித்தொகுதிகளும், அம்மலையிலிருக்கும் சந்தனமரக்காடும், அகில் மரக்காட்டின் செழுமையும, சந்திர காந்தங்களும், வெண்பளிங்குமாகிய வேதிகைகளின் ஒளிவிளக்கமும், பார்க்கின்றவர் களுடைய பார்வைகளையும் மனங்களையும் கவர்ந்து கொள்ளும்படி பிரகாசிக்கும். (219)

போத னைத்தினில் போதும்மென் கனிகளும் புனித
வேத வெற்பின் எப்பொழுதினும் காண்வர விரவும்
மாதவத் தவர் விஞ்சையர் வானவர் இயக்கர்
கீத சித்தர் கிம்புருடரும் துதிதரக் கிளரும்

பொழிப்புரை : பரிசுத்தமாகிய வேதகிரியில் எக்காலமும், நல்ல மலர்களும் மெத் தென்ற பழவர்க்கங்களும் காணும்படி பொருந்தியிருக்கும். முனிவர்கள் வித்தியாதரர்கள் தேவர்கள் இயக்கர்கள் கீதம் பாடுகின்ற சித்தர்கள், கிம்புருடர்கள் என்னுமிவர்களும் துதிசெய்யும்படி விளங்கும். (220)

வேத ஓதையும் ஆகமத்து அமலையும் விமலன்
பாத பூசனை ஓசையும் பல்லியத்த இசையும்
மாதர் வீணையின் வகுளியும் அகத்தொழில் முழக்கும்
ஓத வாரிதி ஒலியெனத் தனித்தனி ஒலிக்கும்

பொழிப்புரை: வேதகோஷமும் ஆகமங்களின் சத்தமும், பரமசிவனைப் பூசிப்பவர்கள் துதிசெய்யும் ஓசையும், பலவாத்தியங்களின் ஒலியும், அழகுள்ள வீணை நாதமும், வேள்வி செய்யுமிடத்து உண்டாகும் ஓசையும், அலையுள்ள கடலோசை போலொலிக்கும்.

நாடி நாடிநெஞ்சு ஒருவருக்கு ஒருவர்முன் நவையும்
வீடி வீடிஅங்கு அணுகுறுந்தொறும் விரைந்தனராய்
ஓடி ஓடிஉட் பேரன்பு பிடர்பிடித்து உந்த
ஆடி ஆடிஇத் தகையதோர் வேதவெற்பு அடைந்தார்

பொழிப்புரை: ஒருவர் மனதுக்கு முன் மற்றொருவர் மனம்நாடிக் கொண்டு செல்லுந் தோறும், பாவமுங் கொஞ்சங் கொஞ்சமாக நீங்கினவர்களாய், உள்ளன்பு பிடரியைப் பிடித் துத்தள்ள, ஆனந்தக் கூத்தாடிய வண்ணமாகவே அம்மலையிற் சென்று சேர்ந்தார்கள்.

ஆர்க்கு முந்துங்கொல் காட்சிஎன்று அவரவர் பதறி
ஏர்க்கும் அன்புடன் ஒருவருக் கொருவர் முன்புஏகப்
பார்க்கும் கண்எதிர் உருத்திர கோடியர் பலர்க்கும்
கூர்க்கும் நம்உருக் கோடிலிங் கத்துருக் கொண்டேம்

பொழிப்புரை : தரிசனம் யாருக்கு முன்னங் கிடைக்குமோ என்று அவரவரும் பதறிப் பொருந்திய அன்புடன், ஒருவர் முன் ஒருவர் செல்கையில், பார்க்காநின்ற உருத்திரகோடி யர்கள் கண்ணுக்கெதிர் நுனித்தறியத்தக்க நம்முருவமும் கோடி லிங்கரூபமாகக் கொண் டிருந்தோம்.

வரும் உருத்திர கோடியர் தனித்தனி வணங்கத்
திரு உருக்களும் கோடி நாம் கொண்டுழித் தெரிசித்து
ஒருபது ஈரட்டு ஐந்தாயிர நூறு உபசாரத்து
இரு பதத்தினும் அருச்சனை சிற்சிலர் இழைத்தார்

பொழிப்புரை: வந்த உருத்திரர்கள் கோடி பேரும் தனித்தனி வணங்க, நாமும் கோடி லிங்கரூபம் கொண்டபோது தரிசித்துச் சிலசிலர் கோடி உபசாரத்துடன் நம்முடைய இரண்டு பாதங்களிலும் அருச்சனை செய்தார்கள்.

ஒருபது-இரட்டு ஐந்தாயிரம் எனப் பதம் பிரிக்க. இரண்டு எனற்பாலது ஈரட்டு என நீண்டும், வலித்தும் நின்றமை காண்க. திருமஞ்சன திரவியம், திருப்பள்ளித்தாமம் முத லானவைகளுள் ஒவ்வொரு பொருளை ஒவ்வொருவர் விசேடமாகக் கொண்டு ஆராதித்த லால் கோடி உபசாரம் என்று சொல்லப்பட்டது. (224)

செய்ய எண்வகைப் போதினுல் சிற்சிலர் புறத்தும்
ஐய எண்வகைப் போதினுல சிற்சிலர் அகத்தும்
மெய் பயப்பநின்று அருச்சனை புரிந்துவீழ்ந் திறைஞ்சிப்
பையப் பற்பல வலஞ்செய்து பன்முறை பணிந்தார்

பொழிப்புரை : செவ்விதான அட்ட புட்பங்களினுல் சிற்சிலர் புறத்திலும், அழகு பொருந்திய அட்டபுட்பங்களினுல் சிற்சிலர் உள்ளிலுமாக உண்மை பொருந்த நின்று அருச்சனை செய்து விழ்ந்து பணிந்து, பலவாகப் பையப்பையப் பிரதட்சணஞ் செய்து பல முறை வணங்கினுர்கள்.

அகத்தில்அர்ச்சிக்கும் எட்டுவகைப் புட்பங்களாவன ; கொலையின்மைப் புட்பம், இந்திரியநிக்கிரகப்புட்பம், சாந்திபுட்பம், தயாபுட்பம், ஞானபுட்பம், தவப்புட்பம், சத்திய புட்பம், பாவனுபுட்பம் என எண்வகையாம். புறத்தில் அர்ச்சிக்கும் எட்டுவகைப் புட்பங்களாவன : புன்னை வெள்ளெருக்கு சண்பகம் நந்தியாவர்த்தம் நீலோற்பலம் பாதிரி அலரி செந்தாமரை இவற்றின் புட்பங்களாம். இவை மூன்று காலத்தினுக்கு மாகும். (225)

ஈரைந் தென்னுமா தாரத் திருதய மாக்கமலத்து
ஆர எட்டிதழ் பொதியவிழ்த் தகவிளக்கொளியைச்
சார நோக்குவார் பிரமரந்தரத் தோரைந் தெழுத்தாற்
சேருமோ ரெழுத்தொலியொடும் ஒளியொடுந் திளைப்பார்

பொழிப்புரை : பத்தென்று சொல்லப்படுகின்ற ஆதாரங்களில் ஒன்ருகிய இருதய தாமரையிற பொருந்திய எட்டு இதழ்களின் முறுக்குகளை அவிழ்த்து, உட்புறனுகிய சோதி யைத் தரிசிப்போர்கள், பிரம்மரநதரத்தில் ஐந்தெழுத்துக்குள் சேரும் ஓரெழுத்தாகிய நாதத் துடனும், விந்துவுடனும் பொருந்துவார்கள்.

ஆதாரம் பத்தாவன : மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்கினை, சத்தி, வியாபினை, சமனை, உன்மனை என்பவைகளாகும். (226)

உள்ளகம் புறம்நிறைந்த தற்போதமா மொளியைத்
தள்ளரும் பரபோதமாய்ப் பதைப்பறத் தரிசித்துக்
கொள்ளைநீர் முகிலகன்ற வானெனக் கொடுமாய
வெள்ளநீத் தெழுஞ்சிவானந்த வெள்ளத் துள்வீழ்வார்

பொழிப்புரை : அகத்திலும் புறத்திலுமாக நிறைந்த பிரமானந்தமாகிய ஒளியை நீக்குதற்குரிய சிவானந்தமாய்ப் பதைப்பறத் தரிசித்து மிகுந்த நீருண்ட மேகம் நீங்கிய ஆகாயம் போன்ற கொடிய மாயையாகிய வெள்ளத்தை நீக்கி எழுகின்ற சிவாநந்த வெள் ளத்தில் சிவருத்திரர்கள் மூழ்குவார்கள்.

ஊடு கண்விழித் தோவியமெனத் தனித்துறைவார்
ஆடு கால்புகாத் தலத் திருவிளக்கை யொத்தசையார்
கேடும் ஆக்கமும் ஒனறெனக் கெழுமிய வுளத்தார்
வீடு பேறன்றி வேறு நச்சிலர் துதிவிரித்தார்

பொழிப்புரை: உட்புறத்தில் நேத்திரங்களை விழித்துக் கொண்டு சிலர் சித்திரம் போலத் தனித்து அசைவில்லாமல் இருப்பார்கள். சிலர் அசைகின்ற காற்றுச் செல்லாத இடத்திலிட்ட தீபத்தை ஒத்து அசையாமல் இருப்பார்கள். சிலர் கேடும் செல்வமும் ஒன்றென்று பொருந்திய உள்ளத்தினராயிருப்பார்கள். முத்திப் பேற்றினையல்லாமல் மற்றென்றையும் விரும்பாதவர்களாய்ச் சிலர் துதிகள் விரித்தார்கள். (228)

அண்டம் யாவையும் அகண்டபூரணத் தொளியானுய்
பிண்டம் யாவையும் பெண்ணெடாணலி யெனப் பெயர்ந்தாய்
மண்ட லாதியிற் சராசர மனத் தடத்தலரும்
புண்ட ரீகத்துள் இருந் திரா தவன் மணாய்போற்றி

JL
Q2m2U, N59TC
N73 . 15 . 10

பொழிப்புரை : எல்லா அண்டங்களிலும் அகண்ட பூரணத் தொளியாயுளே, பிண்டங்களில் எல்லாம் ஆண் பெண் அலியெனப் பிரிந்தனே, பூமி முதலான உலகங்களிலிருக்கும் சராசரமாகிய உயிர்களுடைய மனத்தடாகத்தில் அலருகின்ற தாமரைக்குளிருந்துமிராமலும் நீங்கியிருக்கின்றவனே, போற்றி போற்றி. (229)

வானுமா யிருநிலனுமாய்ப் பல்லுயி ர்வருக்கந்
தானுமா யதற்கயலுமாய்த் தத்துவத் தகலா
ஊனுமா யிவைக்கைவகைச் செயற்கையு மொழுக்குங்
கோனுமாய் நின்றகுணப் பெருங்குன்றமே போற்றி

பொழிப்புரை : ஆகாயமுமாய், பெரிய பூமியுமாய், பலவுயிர் வருக்கமுமாய், அதற்குப் புறம்புமாய், தத்துவங்களைவிட்டு நீங்காதவுடலுமாய் இவைகளுக்குப் பொருந்திய ஐந்து வகைச் செய்கைகளையும் ஒழிக்காநின்ற இறைவனுமாகி நின்ற குணப்பெருங் குன்றமே போற்றி. (230)

448711

இற்றை நாண்முத லெற்றைநாள் வரையு மித்தலமும்
பெற்ற நான்மறைப் பொருப்புமப் பொருப்புடைமைகளும்
உற்ற தீர்த்தமும்உன் பெயர்தானு மெம்பெயரே
முற்றி வாழ்கென வேட்டனர் வேட்டதே முடித்தேம்

பொழிப்புரை : இந்நாள் முதல் இனியெந்நாள் அளவும், இந்தத் தலமும் இதில் அடைந்த நான்கு வேதங்களாகிய மலையும், மலைமகளாகிய பார்வதி தேவியாரும், தேவரீருடைய திருநாமமும், எங்களுடைய பெயரையே பொருந்தி வாழவேண்டும் என்று விரும்பினார்கள். அவர்கள் விரும்பியவண்ணமே நிறைவேற்றினோம். (231)

அந்த நான்முத லுருத்திரகோடி பேராக
நந்தம் ஊர்க்கும்நங் கிரிக்கும்நம் பெண்ணினல்லாட்கும்
முந்து தீர்த்தங்கள்தமக்கும் மற்றெமக்கும் மூவுலகும்
வந்து சாற்றுமால் சாற்றினர்க்கில்லை வல்வினையே

பொழிப்புரை : அந்தநாள் முதல் நம்முடைய தலத்துக்கு உருத்திரகோடித் தலம் என்றும், நம்முடைய கிரிக்கு உருத்திரகோடி கிரி என்றும். நம்முடைய பெண்ணினல்லாளாகிய பார்வதி தேவியாருக்கு உருத்திரகோடி ஈசுவரி என்றும், நம்முடைய தீர்த்தங்கட்கு உருத்திரகோடித் தீர்த்தம் என்றும், நமக்கு உருத்திரகோடி ஈசுவரென்றும், உலகத்தில் இருப்பவர் யாவர்களும் வந்து பேர் சொல்லுவார்கள், அவ்வாறு சொல்லித் துதி செய்கின்றவர்களுக்கு வல்வினைகளில்லையாகும், (233)

அன்று பின்னுமவ் வுருத்திர கோடியர் பெயராற்
சென்ற யோகத்தும் ஞானத்துஞ் செயுமிருசெயற்கும்
ஒன்று போல்நமதருட் கணல்நோக்கி வாளொடுங்கத்
துன்று பேரொளியாய் அவர்தொழுந் திறமெழுந்தேம்

பொழிப்புரை : அந்த நாட்குப் பின்பும், அந்த உருத்திரகோடியர்கள் பேரால் நிகழ்கின்றயோகத்திலும் ஞானத்திலுமாகச் செய்கின்ற இரண்டு செய்கைக்கும் ஒன்றுபோலவே நம்முடைய அருட்கண்ணால் நோக்கி, அவர்கள் முத்தியில் ஒடுங்கும்படி அவர்கள் தொழுந் தன்மையாய்க் காட்சி கொடுத்திருந்தோம். (233)

வரவு போக்கற மனத்தொடு வாக்கற வளர்க்கும்
புரவு நீக்கறப் பொய்யுடன் மெய் யறப்பொய்யா
இரவு நன்பக லிரண்டற வெழுந்த பேரொளிக்குட்
பரவரும் பதத்தடைந் தனர் உருத்திரர் பலரும்




நமது தமிழக முதல்வர் மாண்புமிகு **டாக்டர் திரு. கலைஞர்** அவர்கள், சென்னையில் திருவாசகமணிக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தல் (**5-6-73**). நடுவில் நிற்பவர்: மலேசிய நாட்டுத் திருவருட்செல்வி சரளாதேவி ராஜசுந்தரம் அம்மையார்.



திருவாசகமணி திரு. கே,எம். பாலசுப்பிரமணியம் **B.A., B.L.** அவர்கள், நமது தமிழக முதல்வர் மாண்புமிகு **டாக்டர்திரு, கலைஞர்** அவர்களைப் பற்றித் தாம் எழுதிய ஆங்கில நூலின் படியினை, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களிடம் வழங்குதல் (**5.6.73**). படத்தின் வலப்புறம் நிற்பவர்: திரு. தில்லை வில்லாளன் **M.A., B.L., M.P.** அவர்கள். இடப்புறம் நிற்பவர்: மலேசிய நாட்டுத் திருவருட்செல்வி சரளாதேவி ராஜசுந்தரம் அம்மையார் அவர்கள்.



சென்னைக் கந்தகோட்டம் வசந்த மண்டபம் அறக்கட்டளை சார்பில், கட்டப்பெற்ற திருமண மண்டபத்தினை, மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன், M.A. அவர்கள் திறந்துவைத்தல். (4—6—73)



சென்னைக் கந்தகோட்டம், வசந்த மண்டப அறக்கட்டளையின் சார்பில் கட்டப்பட்ட திருமண மண்டபத் திருவிழாவிற்குத் தலைமை தாங்கிய மேலவைத் துணைத் தலைவர் — "சிலம்புச் செல்வர்" திரு. மா. பொ. சிவஞானம், M.L.C. அவர்களை அறங்காவலர் குழுத் தலைவர் திரு. பா. சீதாராமன், M.A. அவர்கள் வரவேற்றுச் சிறப்பித்தல். (4—6—73)

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras - 34. Printed at Paari Achakam, Madras - 1. Editor. N. R. Murugavell, M.A., M.O.L.